
தர்மசக்கரம்















துன்மதி ௵ ஆடி ௴ சக்கரம் 30 ஆரம் 7

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115. திருச்சி ஜில்லா

பிரத்யேக வேண்டுகோள்

சந்தாக்களைப் புதுப்பித்துக்கொள்ள ஞாபகமூட்டுவதிலும், அவைகளைப் புதுப்பிப்பதிலும் செலவும் சிரமமும் ஏற்படுகின்றன. இவைகளைத் தவிர்க்கவே டிபாஸிட் சந்தாமுறையை ஏற்படுத்தியுள்ளோம். வசதி வாய்க்கப் பெற்றவர்கள் டிபாஸிட் சந்தா செலுத்தி எங்களுடைய வேலைப் பளுவைக் குறைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். மேலும் தம் பெயரில் ரூபாய் நூறு டிபாஸிட் செய்துவிட்டு:

1. கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது மாதந்தோறும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகும்.

2. நண்பர்களுக்கும், அபிமானிகளுக்கும் பத்திரிகை போகும்படி செய்தால் மாதந்தோறும் அவர்களுக்கு நல்ல வெகுமதி அளித்ததாக அமையும்.

3. பந்துக்களுக்கும், குமாரத்திகளுக்கும் பத்திரிகை அனுப்பச் செய்தால் மாதந்தோறும் தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த சன்மானமாகும்.

இச்செயல்களினால் தாங்கள் மற்றவர்களை ஆத்மீகத்துறையில் ஈடுபடுத்தும் கைங்கரியத்தைச் செய்தவர்களாகிறீர்கள். இவ்வளவு நலன்களுக்குப் பிறகும் பணம் தங்களுடையதே.

காரியதரிசி

தர்ம சக்கரம்

திருநெல்வேலி ஜில்லா

பாபநாசத்தில் அந்தர்யோகம்-18

24, 25 & 26–7–81

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் **1981** ஆம் ஆண்டு ஜூலை மாதம் **24**ஆம் தேதி வெள்ளி, **25**ஆம் தேதி சனி, **26**ஆம் தேதி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் வழக்கமான வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும்.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள், நபர் ஒன்றுக்கு ரூ. 21-00 வீதம், திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், **திரு. Sv. Rm. A. நடராஜ முதலியார்** அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து, அனுமதிகார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். கலந்துகொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப் பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக் கொள்ளப் படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஜூலை மாதம் **23**ஆம் தேதி வியாழக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும்.

காரியதரிசி — **ஸதானந்த**

Sv. Rm. A. நடராஜ முதலியார், *அம்பாசமுத்திரம்.* — *ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்.*

பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.

16·7|81

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	துன்மதி ஹு ஆடி மீ	ஆரம் 7

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டு தோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலாதவர்கள் ரூபாய் எட்டு மட்டும் அனுப்பலாம். பாக்கி நான்கு ரூபாயைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி'யினின்று ஈடு செய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பன்னிரண்டு செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

வெளிநாடு சந்தா: நாங்கள் ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வந்த இதழ்களுக்கு 80 பைசா ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிக்கொண்டு இருந்தோம். இம்மாதம் 1—7—81 முதல் வெளிநாடு தபால் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. ஆதலால் இதழ் ஒன்றுக்கு ரூ. 1-40 பைசாவுக்கு ஸ்டாம்ப் ஒட்டவேண்டியுள்ளது. எனவே இனி வெளிநாடு ஆண்டு சந்தா ரூ. 35/-ஐ அனுப்பி வைத்து சந்தா பதிந்து கொள்ளக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 12-00. வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

சேலத்தில்—26—7—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்**

திருச்சி ஜில்லா—துறையூரில் 2—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்**

திருச்சி ஜில்லா—கைலாசபுரத்தில் 9—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாய்லர் பிளாண்ட் ஆரம்பப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் நண்பகல் 1-00 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 9—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுதந்திரம் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**

இராமநாதபுரம் ஜில்லா—ராஜபாளையத்தில் 16—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பழையபாளையம் பாரதி கல்யாணமண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**
உணவுவசதி: மதிய உணவுக்கு ரூ. 1·50 செலுத்திச் சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

நீலகிரி மாவட்டம்—குன்னூரில் 16—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சற்குரு இராஜயோக ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்**
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டு பெற்றுக் கொள்ளலாம்.

இராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 16—8—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சாத்தூர் எட்வர்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30	துன்மதி ஹூ ஆடி மீ	ஆரம் 7

பிரார்த்தனை

वपुरादिषु योऽपि कोऽपि वा गुणतोऽसानि यथा तथाविधः ।
तदयं तव पादपद्मयो रहमद्यैव मया समर्पितः ॥

— यमुनाचार्य

வபுராதிஷு யோऽபி கோऽபி வா
    குணதோ ऽஸானி யதா தயாவித்த: ।
தயம் தவ பாதபத்மயோ
    ரஹமத்யைவ மயா ஸமர்பித: ॥

— யமுனச்சார்யர்

இந்த உடலமைப்பிலோ, பண்பிலோ நான் எதுவாயிருப்பினும் இன்று முதல் நான் என்னுடைய அகங்காரத்தை உன்னுடைய தாமரைத் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

தீரத்தி ஞல்துறவு சேராமல் இவ்வுலகில்
பாரத் தனம்பேசல் பண்போ பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

பேரறிவும், பேரன்பும் இணைபிரியாதவைகள்.

நலனிலும், கேட்டிலும் பரமனையே சார்ந்திரு.

மெய்ம்மையும், மெய்ப்பொருளும் ஒன்றேயாம்.

தான் படும் துயரங்கள் யாவுக்கும் தானே பொறுப்பாளி.

யாண்டும் நடுநிலை பிறழாதிருப்பவன் விரைவில் சான்றோன் ஆகிறான்.

அறநெறி பிறழாதிருப்பவன் இடைஞ்சல்களனைத்தையும் வெல்லுகிறான்.

அடித்துப் பயமுறுத்துதலிலும் மிக்கது மனமாற்றத்தை உண்டுபண்ணுதல்.

தன்னைத்தானே திருத்தியமைக்க முயல்பவனுக்கு உள் வலிவு தானாக வந்து அமைகிறது.

நல்லவழியில் சம்பாதித்த பொருள் நலனுக்கென்றே காப்பாற்றி வைக்கப் படவேண்டும்.

பிறரோடு போராடுவது வீண் பொழுது போக்கு; தன்னோடு போராடுவது முன்னேற்றம்.

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களைப் பண்படுத்துதற்கேற்ப மனிதன் மேலோன் ஆகிறான்.

மனிதன் தன்னைத் தெய்வத்துக்கு ஒப்படைப்பதற்கேற்பத் தெய்வம் அவனுக்குரியது ஆகிறது.

தன் குறைபாடுகளை உள்ளபடி அறிந்துகொள்ளுகிறவன் அதிவிரைவில் நிறைமனிதன் ஆகிறான்.

அன்பினால் தூண்டப்பெற்ற செயல்களெல்லாம் இனியவைகளாகத் திருந்தியமைந்து பயன்படுகின்றன.

கண்டிப்பாக நடந்துகொள்ளும் நல்லான் ஒருவனிடம் தன்னை ஒப்படைப்பதற்கேற்ப மனிதன் நலனடையப் பெறுகிறான்.

உளியால் அடிப்பதற்கேற்ப விக்ரஹத்திற்கு அழகு வருகிறது. வாழ்வில் அடிபடுவதால் மனிதனுக்குப் பண்பாடு உண்டாகிறது.

தூயது ஆதல் பொருட்டு இரும்பு மேலும் மேலும் உருக்கப்படுகிறது, மனிதன் நல்லவன் ஆதல் பொருட்டு மேலும் மேலும் சோதனைக்கு ஆளாகிறான்.

மனிதன் பொருளுக்கேற்ற விலை கொடுக்கிறான்; அதே பாங்கில் வாழ்க்கையில் அவன் கொண்டுள்ள இலட்சியத்திற்கேற்ப அதற்காகக் காலத்தை ஒதுக்கி வைக்கிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் கல்கத்தாவில் நட்சத்திரக் கொட்டகையிலே அன்பர்களோடு தொடர்ந்து உரையாடிக்கொண்டிருக்கிருர்.

பரமஹம்சதேவர்: (கிரீஷ் சந்திரகோஷரைப் பார்த்து) "இந்த நாடகக் கொட்டகை உனக்குச் சொந்தமானதா?"

கிரீஷ்: "ஐயனே, இது நமக்குச் சொந்தம்.''

பரமஹம்சதேவர்: ''எனக்குச் சொந்தம் என்று சொல்லுவதைவிட 'நமக்குச் சொந்தம்' என்று சொல்லுவது மிக நல்லது. தனி உடைமையைவிடப் பொது உடைமை மேலானது. தனியுடைமை சுயநலத்தை அடிப்படையாகக்கொண்டது. பொதுப்பட மக்கள் நான் என்றும், எனது என்றுமே இயம்புகின்றனர். அகங்காரமும், மமகாரமும் அக்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டவைகள். அது அகங்காரத்தின் அறிகுறி; சிற்றியல்பு படைத்தவர்களே அந்தப் போக்கில் பேசுகின்றனர்."

நரேந்திரன்: ''உலகம் முழுதுமே ஒருநாடகக் கொட்டகை.''

பரமஹம்சதேவர்: ''ஆம், ஆம். அது முற்றிலும் மெய். இப்பிரபஞ்சம் ஒரு பரந்த நாடகக் கொட்டகை. இதில் சிலர் வித்யாமாயையின் விளையாட்டில் மூழ்கியிருக்கின்றனர். வேறு சிலர் அவித்யா மாயையின் பாத்திரங்களாக வடிவெடுத்து விளையாடுகின்றனர். இந்த நாடகமேடைக்குச்சிவனுர்சபாபதியாகஇலங்குகின்ருர். ஆதலால் இந்நாடக மேடையில் அமைந்துள்ள நலன் கேடுகளனைத்தும் உயிர்களின் முன்னேற்றத்தின் பொருட்டேயாம்.''

நரேந்திரன்: ''துருவி ஆராய்ந்து பார்க்குமிடத்து வித்யாமாயையின் விளையாட்டே அவித்யாமாயையின் விளையாட்டாக வடிவெடுத்திருக்கிறது."

பரமஹம்சதேவர். ''உண்மை, உண்மை, நீ சொல்லுவதுதான் உண்மை. ஆனல் யார் ஒருவனுக்குப் பிரம்மஞானம் வாய்க்கிறதோ அன்னவனுக்கே இவ்வுண்மை விளங்குகிறது. மற்றுப்பக்தன் ஒருவனுடையபாங்கு இன்னெரு விதமானது. அவன் அன்பு நெறியில் ஆழ்ந்து மூழ்கியிருக்கிருன். அன்பு என்னும் கண் கொண்டே அனைத்தையும் அவன் காண்கிருன். ஆகவே அவனுடைய காட்சியில் அவித்யா மாயை படிப்படியாகப் பின்னணிக்குப் போகிறது. வித்யாமாயை ஒன்றே முன்னணியில் வந்து நிற்கிறது. அதன் விளைவாக அவனுக்கு யாண்டும் தென்படுவது ஆனந்தம். துக்கத்துக்கும் பக்தனுடைய பேரன்புக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.''

பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''பாடல் ஒன்று பாடு பார்ப்போம்."

நரேந்திரன் பாடுகின்ருன்.

''பரமானந்தத்தோடு கூடிய பாரமார்த்திகப் பேரறிவு என்னும் கடலிலே பராபக்தி என்னும் அலைகள் உருவெடுத்து உருண்டு ஓடுகின்றன. தெய்விகப் பேருணர்வு! பேரானந்தப் பெருநடனம்! ஆ! இது அன்பனுடைய உள்ளத்தை அறவே கொள்ளைகொண்டு போகிறது! அன்புக் கடவுள் என்னும் இனிமை ததும்பும் கடலிலே வியப்பையூட்டும் அலைகள் வடிவெடுத்து விளையாடுகின்றன. ஒவ்வோர் அலையிலும் புதுமையொன்று புலப்படுகிறது. ஒவ்வோர் அலையும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போகிறது. இறைவனுடைய மகிமைகள் ஒன்றன்பின் ஒன்ருக மேல்பரப்புக்கு வடிவெடுத்து வந்து கொண்டேயிருக்கின்றன. அப்படி வடிவெடுத்து வரும் அலைகளின் வண்ணந்தான் எத்தகையவை! யாண்டும் அவைகளில் புதுமையே பொலிந்து கொண்டிருக்கிறது. மற்றும் ஒரு வேளையில் அளப்பரிய இவ்வரிய விளையாட்டு முடிவுக்கு வருகிறது. கோட்டைக்குள் அடங்கியது போன்று இப்பிரபஞ்சம் யாவும் மறைந்துபட்டுப் போகின்றன. நாம் அனுபவித்து வரும் காலத்துக்கு ஆங்கு இடமில்லை. நாம் வாஸ்தவமாக அனுபவித்து வருகிற தேசம் அல்லது இடம் அப்பேரனுபவத்தில் அடிபட்டுப் போகிறது. காலதேச வர்த்தமானத்தைக் கடந்துள்ள அந்நிலையை யார்தான் எடுத்து விளக்க முடியும்! இங்ஙனம் இயம்பிக்கொண்டு ஓ! மனமே, நீ

மகிழ்வடைந்து ஆனந்தத் தாண்டவமாடு! கரங்களிரண்டையும் தூக்கிக்கொண்டு ஆனந் தத் தாண்டவமாடு! ஹரியின் திருநாமத்தை ஓதிக்கொண்டு ஆனந்தத் தாண்டவமாடு!"

நரேந்திரன் பாடிய பாடலிலே பிரபஞ்சம் யாவும் மறைந்து பட்டுப்போகின்றன என்னும் கருத்தைத் தெரிவித்தபொழுது ராமகிருஷ்ண பரமஹம்சதேவர் அவனிடம் இயம்பியதாவது: "பிரம்ம ஞானத்துக்குப்பிறகே இந்த அனுபவம் ஞானிக்கு வந்து அமைகிறது; அப்பொழுது நீ இப்பொழுது பகர்ந்தபடி அனைத்தும் பிரம்மத் துக்குரிய வித்யாமாயையாம்."

நரேந்திரன் பாடிய பாடலிலே "கரங்க ளிரண்டையும் தூக்கிக்கொண்டு ஆனந்தத் தாண்டவமாடு. ஹரியின் திருநாமத்தை ஓதிக் கொண்டு ஆனந்தத் தாண்டவமாடு" என்கிற பகுதியை 'இரண்டு தடவை பாடு' என்று இயம்பினர். இங்ஙனம் நரேந்திரன் பக்தி பரவசம் ததும்பிய பாடலைப் பாடி முடித்த பிறகு மீண்டும் அவர்களுக்கிடையில் சம்பா ஷணை நிகழ்வதாயிற்று. அதன் கருத்து முடிந்த நிலையில் சுத்த ஞானமும், சுத்த பக்தியும் ஒன்றேயாம்.

கிரீஷ்சந்திரகோஷ்: "தேவேந்திர பாபு வந்து சேரவில்லை. மனம் ஏமாற்றம் அடைந்த பாங்கில் அவர் பகர்ந்ததாவது: 'நம்முள் சரக்கு ஒன்றுமில்லை. பாலாடையை எடுத்து வயிற்றை நிரப்புவது எங்ஙனம்? தகுதியற்ற நிலையிலிருக்கிற நாம் பரமஹம்சதேவரிடம் போவதில் பயன்யாது? பாலாடைக்கு நிகரான பரமஹம்சருடைய மேலாம் கோட்பாடுகளை நாம் ஏற்று, உணர்ந்து அவற்றிற்கேற்றபடி நம் முடைய வாழ்வைத் திருத்தியமைக்க நமக்கு இயலுவதில்லை. வெறும் கீரைத்தண்டை அருந்தி வயிற்றை நிரப்புதலுக்கு நிகராக நாம் உலக விஷயங்களில் ஊறிக்கிடக்கிறோம்."

பரமஹம்சதேவர் (வியப்படைந்த பாங்கில்): "அவன் அப்படியா இயம்புகின்றான்! அந்தப் பாங்கில் அவன் இதுவரையில் பேசியது கிடையாதே. இத்தகைய மனப்பான்மை அவனுக்கு எங்கிருந்து எப்பொழுது வந்தது?"

பரமஹம்சதேவர் ஒரு சிறிதளவு சிற்றுண்டி எடுத்துக்கொண்டார். அதில் ஒருசிறுபகுதியை அவர் நரேந்திரனுக்கு எடுத்துக்கொடுத்து விட்டார்.

ஜதின்தேவன் (பரமஹம்சதேவரைப் பார்த்து): "தாங்கள் எப்பொழுதுமே நரேந்திரனைப் பார்த்து இதை அருந்து, அதை அருந்து என்று அவனிடம் அலாதி சலுகை காட்டுகின்றீர்கள். ஏனைய நாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர் களா? பிரவாக காலத்தில் கங்காநதி பய னற்ற வைக்கோலைக் கொண்டுவந்து கரை யோரம் ஒதுக்குகிறது. அத்தகைய வைக் கோல் போன்றவர்களா ஏனையவர்களாகிய நாங்கள்?"

இந்த ஜதின்தேவனைப் பரமஹம்சதேவர் அன்போடு நேசித்து வந்தார். இவன் இடை யிடையே பரமஹம்சதேவரைத் தரிசிப்பதற் காகத் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வருவ துண்டு. சிற்சில சமயங்களில் இவர் தக்ஷிணே சுவர ஆலயத்திலேயே இரவில் தங்கியிருப்பது வும் உண்டு. கல்கத்தாவிலே ஸோப பஜார் என்னும் பகுதியிலே பண்பாடும், செல்வமும் படைத்திருந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவன் இவன். நகைத்துக்கொண்டு பரமஹம்சதேவர் நரேந்திரனிடம், "இவன் உன்னைப்பற்றிஏதோ விஷயங்களை எடுத்துரைக்கிறான்" என்று தெரி வித்தார்.

மேலும் சிரித்துக்கொண்டே பரமஹம்ச தேவர் ஜதின்தேவனுடைய தாவாக்கட்டையை அன்புக்கு அறிகுறியாகத் தொட்டார். இந்த இளைஞனிடம் அவர் இயம்பியதாவது, "தக்ஷி ணேசுவர ஆலயத்துக்கு நீ வா. அருந்துதற்கு வேண்டியவாறு பக்ஷணங்களை நான் உனக்குத் தருவேன். சூரியப்பிரகாசம் எங்கும் சமனாய்ப் படிவதுபோன்று அன்னையின் திருவருளை முன் னிட்டுப் பக்தர்களனைவரையும் நான் ஒரே பாங் கில் நேசித்து வருகிறேன்."

அதன் பிறகு நாடகக் கொட்டகைக்குள் பரமஹம்சதேவர் மீண்டும் ஒருமுறை அழைத் துச் செல்லப்பட்டார். கடைசியாக நிகழ்தற் கிருந்த வேடிக்கை விநோதக்காட்சிகளைப் பார்ப்பதே அப்படிப்போனதின் நோக்கமா கும். அவருக்காகவென்று எடுத்து வைக்கப் பட்டிருந்த பெட்டகம் என்னும் ஆசனத்தில் அவர் அமர்ந்துகொண்டார். அதில் அமர்ந்து இருப்பவர் ஏனையவர்களின் காட்சிக்குத் தென் படமாட்டார். ஆனால் அந்தப் பெட்டகத்திலமர்ந்

திருப்பவர்கள் ஏனையவர்களைப் பார்க்க முடியும். மேடையிலே நிகழ்கின்ற காட்சிகளையும் பார்க்கமுடியும். வேலைக்காரி ஒருத்தி மேடையின் மீது வந்து நின்றுகொண்டு அவளுடைய பாங்குக்கேற்றவாறு பேசினாள். அதைக் கேட்ட பரமஹம்சர் கொல்லென்று நகைத்தார். அடுத்த கணப்பொழுதில் அவருடைய மனது மேலாம் நிலைக்குப் போவதாயிற்று. மகேந்திர நாதரோடு ஏதோ சில வார்த்தைகளை அவர் அடங்கிய குரலிலே இயம்பினார்.

பரமஹம்சர் (மகேந்திரரிடம்): "இந்தக் கிரீஷ்சந்திரகோஷ் கூறுவது உண்மைதானா?"

நாள் ஏற ஏற கிரீஷ்சந்திரகோஷுக்குப் பரமஹம்சதேவரிடம் பக்திமிக உருவெடுக்கலாயிற்று. அதன் விளைவாகப் பரமஹம்சதேவரை அவர் பரம்பொருளின் அவதாரம் என்று பகரலாயினர்.

மகேந்திரர்: "ஆம் ஐயனே, அவர் பகர்வதில் பொருள் மிகப் புதைந்திருக்கிறது. அவர் இயம்புவது உண்மை என்று நாங்களும் நம்புகின்றோம். அதற்கேற்ற காரணமும் உண்டு. அவர் கருத்தை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறோம். அப்படி ஏற்றுக்கொள்ளுதலிலும் நாங்கள் பரம திருப்தியடைகிறோம். பொருள் சேராத புகழ் எங்கள் உள்ளத்தை இங்ஙனம் கவரவல்லதாகுமா?"

பரமஹம்சதேவர்: "என்னுடைய மன அமைப்பிலே பெரிய மாறுதல் ஒன்று வந்து கொண்டிருக்கிறது. பழைய பாங்கு என்னிடமிருந்து அகன்று போய்விட்டது. இப்பொழுது இரும்பு, தாமிரம் போன்ற எந்த உலோகத்தையும் தீண்ட எனக்கு இயலுவதில்லை."

மகேந்திரர் பரமஹம்சருடைய கூற்றுக்கு வியப்புடன் செவிசாய்த்துக் கொண்டிருந்தார். தெய்வீகப் பெற்றியிலேயே ஊறியிருக்கும் பரமபுருஷன் ஒருவருக்கு இவ்வையக வாழ்வும், செல்வமும் ஒருபொழுதும் ஏற்புடையவைகள் ஆகமாட்டா என்னும் விஷயத்தை இவர் குறிப்பிட்டுக் காட்டுகின்றாரா?

பரமஹம்சதேவர் (மகேந்திரரிடம்): "சரி. நீ ஏதாவது மாறுபாட்டை என்னிடம் காண்கின்றாயா?"

மகேந்திரர்: "நாள் ஏற ஏற மக்கள் பலபேர் தங்கள்பால் கவர்ந்து இழுக்கப்படுகின்றனர். அதற்கேற்றவாறு பாரமார்த்திகத்துக்குரிய தங்களுடைய அலுவல்களும் அதிகரித்துக்கொண்டே போகின்றன."

பரமஹம்சதேவர்: "விஷயம் ஒன்றைக் கவனித்துக் கேள். முன்பு நான் இயம்பியது இயம்பியவாறே வடிவெடுத்து வருகிறது."

சிறிதுநேரம் பரமஹம்சதேவர் மௌனமுற்று இருந்தார். அப்பொழுது அவருடைய மனது அதீதத்தில் ஏதோ உலகில் உலாவிக்கொண்டிருந்தது. மீண்டும் அவருடைய மனது இவ்வையக விஷயத்துக்குத் திரும்பி வந்தது. அப்பொழுது அவர் இயம்பியதாவது: "பால்டு என்னும் பக்தனுக்கு நன்கு தியானம் பண்ண இயலுவதில்லை. அதற்குக் காரணம் யாது என்று நீ எடுத்து இயம்பமுடியுமா?"

பரமஹம்சதேவர் இப்பொழுது தக்ஷிணேசுவர ஆலயத்துக்குப் புறப்பட ஆயத்தமானார். புறப்படுவதற்கு முன் உலகமக்களைக் குறித்துக் கருத்து ஒன்றை அவர் தெரிவித்தார். "வெள்ளைப்பூண்டு வைத்திருந்த கிண்ணம் ஒன்றை எவ்வளவு தடவை கழுவினாலும் வெள்ளைப்பூண்டின் நாற்றம் அதை விட்டுப் போகாது. அதே விதத்தில் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய உள்ளம் உலக இயல்பிலேயே ஊறிக்கிடக்கிறது. எவ்வளவுதான் முயன்றாலும் அக்கீழான இயல்பு அவர்களை விட்டு அறவே அகன்று போவதில்லை."

கிரீஷ்: "கிண்ணத்திலுள்ள நாற்றத்தைப் போக்கடிக்க உபாயம் இல்லையா? அதே விதத்தில் உலகப்பற்றில் ஊறிக்கிடப்பவர்களுடைய மனப்பான்மையை மாற்றுதற்கு உபாயம் ஏதுமில்லையா?"

பரமஹம்சதேவர்: "அக் கிண்ணத்தைக் கொழுந்துவிட்டெரிகிற தீயினுள் போட்டுக் காய்ச்சினால் அதன் நாற்றம் அகன்று போகிறது. கிண்ணமும் புதியதாக மாறியமைகிறது. தன்னைப் பந்தபாசத்தில் கட்டுண்டு கிடப்பதாக எண்ணுகின்றவனுக்குப் பந்தபாசம் அதிகரிக்கின்றது. தன்னை அருளுக்குப் பாத்திரமானவன் என்று உறுதியாக நம்புகிறவனுக்கு அருள்கிட்டுகிறது. அருள்பற்று ஏற ஏற உலக வாழ்வு என்னும் மருள் பற்று தானாகவே மறைந்துபட்டுப்போகிறது. அவன் முக்த புருஷன் ஆகிறான்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

3-1. வெப்பந்தம் தீர்த்து உலகுஆள் வேந்தன் [திருஞான
சம்பந்தனை அருளால் சாருநாள் எந்நாளோ.

மதுரையிலே பாண்டிய மன்னனைக் காய்ச்சல் அல்லது வெப்பநோய் வந்து தாக்கியிருந்தது. அதைக் குணப்படுத்த ஜைனமுனிவர்களும் திருஞான சம்பந்தரும் அவரவர் பிரார்த்தனையின் மூலம் முயன்றார்கள். அந்நோயை யகற்ற ஜைன முனிவர்களுக்கு இயலவில்லை. இளைஞராயிருந்த திருஞான சம்பந்தருக்குச் சிவபெருமானுடைய அருளால் அது சாத்தியமாயிற்று. அத்தகைய அருளாளராகத் திருஞானசம்பந்தர் திகழ்ந்தார். அருளாளன் ஒருவனைத் திரிகரண சுத்தியோடு சார்ந்திருப்பதே ஆத்மசாதகன் ஒருவனுக்கு அருளைப் பெறுவதற்கு உற்ற உபாயமாகிறது. உலர்ந்த விறகுக்கட்டை தீப்பற்றி எரிகிற மற்றொரு கட்டையோடு சேர்ந்துகொண்டால் அப்படிச் சேர்ந்த கட்டையும் தீப்பற்றிக் கொள்ளுகிறது. அதேபாங்கில் இறைவனுடைய அடியார்களைச் சார்ந்திருப்பதே இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு உற்ற உபாயமாகிறது. திருஞான சம்பந்தர் தம்முடைய மூன்றாவது வயதிலேயே நிறை ஞானியானார். ஞானி ஆவதற்குக் காலவரையறை கிடையாது. அருள்தாகம் நல்ல சாதகனொருவனிடத்து எப்பொழுது வடிவெடுக்கிறதோ அப்பொழுதே அவன் ஆண்டவனுடைய அருளுக்கு ஆளாகிறான். ஆண்டவனே உயிர்களை உய்விப்பதில் பித்துப் பிடித்தவராக யாண்டும் இருந்து வருகிறார். ஆதலால்தான் இறைவனுக்குப் பித்தன் என்றும், உன்மத்தன் என்றும் பெயர்கள் வந்துள்ளன. உய்விப்பதில் இறைவன் படைத்திருக்கிற பித்தம் ஒப்பு உயர்வு அற்றது. ஆத்ம சாதகனுக்கு இம்மியளவாவது அந்த அருள் பித்தம் வந்து வாய்க்குமாகில் அவன் பாக்கியவானாகிறான். திருஞான சம்பந்தருக்கு வந்து வாய்த்த அருள்தாகம் அடியேனுக்கு என்றைக்கு வந்து அமையுமோ என்று ஏங்குகிறார் தாயுமானவர்.

3-2. ஏரின் சிவயோகம் இங்கிவற்கே என்ன உழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்பது எந்நாளோ.

ஏர் என்னும் சொல் அழகையும் பொலிவையும் குறிக்கிறது. திருநாவுக்கரசு சுவாமிகளிடத்து மேனியழகும் அருள் பொலிவும் ஒன்றுகூடித் திகழ்வனவாயின. அத்தகையவர் சிவபக்திக்கு அறிகுறியாகச் சிவாலயங்களுக்குச் சென்றவிடங்களில் எல்லாம் உழவாரப் பணிவிடை புரிந்து வந்தார். உழவாரம் என்பது இரும்புக் கைப்பிடியோடு கூடிய கையகலம் உள்ள இரும்புத் தகடாகும். கோயில்களில் சுற்றுப் புறங்களில் முளைத்துள்ள புற்களைக் களைதற்கு அந்த உழவாரப்படையை அவர் கையாண்டு வந்தார். எனவே மூன்று விதங்களில் அவர் படைத்திருந்த அருள் இடையறாது பொலிந்துகொண்டேயிருந்தது. மேனியழகு காட்சிக்கு இனியது. அருள் அழகு உள்ளத்தைக் கவரவல்லது. வீண் காலம் போக்காது பயன்படுகின்ற பணிவிடை பண்ணுவது நல்லார் கருத்தைக் கவரவல்லது. நாவுக்கரசு சுவாமிகள் சென்ற விடங்களில் எல்லாம் மற்றவர்கள் உள்ளத்தில் சிவபக்தியைத் தம்முடைய சொருபத்தின் வாயிலாகவும், ஒழுக்கத்தின் வாயிலாகவும், சிவத்தொண்டின் வாயிலாகவும் புகட்டிவந்தார். வாசாகைங்கரியத்தைவிட மேலானது காயத்தால் செய்யும் கைங்கரியமும் மனக்கசிவால் செய்யும் கைங்கரியமும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அப்பர் இலங்கினார். கணப்பொழுதையும் அவர் வீண்காலம் போக்கவில்லை. எங்கெல்லாம் சிவாலயங்களுக்குச் சென்றாரோ ஆங்கெல்லாம் அவர் உழவாரப் பணிவிடை பண்ணிக்கொண்டே இருந்தார். கசிந்துருகி இறைவனுடைய பெருமைகளைப்பற்றி பாடிக்கொண்டே இருந்தார். எனவே அந்த அருளாளருடைய ஆன்மீகப் பொலிவும், இடையறாப் பணிவிடையும் உலகத்தவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள் ஆயின. சொல்லினும் மிக்கது செயல் என்பதற்கு அப்பர் சுவாமிகளின் வாழ்வே தக்க சான்று ஆயிற்று. ஏகதேசம் உற்சாகம் படைத்திருந்த பலரைத்

தீவிர உற்சாகிகளாகத் திருத்தியமைத்தற்கு அப்பர் சுவாமிகளின் அலாதியான வாழ்க்கை முறையே தூண்டுதல் போட்டது. அத்தகைய வர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி அடியே னும் அதிவிரைவில் உய்வு அடைவேனாக என் பது இக்கண்ணியின் கருத்து.

3-3. பித்தர்இறை என்றுஅறிந்து பேதைபால் தூது [அனுப்பு

வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ.

சுந்தரமூர்த்தி நாயனாரைத்தடுத்தாட்கொள்ளு தற்குச் சிவனார் திருவுளம் கொண்டார். ஆத லால் அவருடைய விவாகத்திற்கு வேண் டிய ஏற்பாடுகள் ஆய்க்கொண்டிருந்தபொழுது அவர் அதில் தலையிட்டார். "சுந்தரன் முதலில் என்னுடைய அடிமை என்பதை ஒத்துக்கொள் ளட்டும். அதன் பிறகு இந்த விவாக காரியங் களில் நீங்கள் மேல் நோக்கிச் செல்லலாம்" என்று அங்குக் குழுமியிருந்தவர்களிடம் சிவ னார் ஒரு வயோதிக வேதியர் வடிவத்தில் வந்து தடை பண்ணினார். அத்தடையைக் கேள்வி யுற்ற இளம் சுந்தரர் "தாம் யார் பித்தனா? அந்தணன் ஒருவன் எந்த மனிதனுக்காவது அடிமையாவானா?" என்றுகேட்டார். வேதியர் தம் கூற்றை நிரூபித்துக் காட்டியதுமல்லாது அந்த வடிவத்தில் வந்தது யார் என்பதையும் அவர் விளக்கிக் காட்டினார். வியப்படைந்த சுந்தரர் கருணாகரனாகிய தங்களை நான் எவ் வாறு கூறி வழுத்துவேன் என்று வினயபூர்வ மாகக் கேட்டார். 'பித்தனா' என்று கேட் டாயே, அப்படியே வைத்து என்னைக் குறித் துப் பாடுக' என்றார் சிவனார். 'பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா... அத்தாவுனக் காளாய் இனி அல்லேன் எனலாமே' எனச் சுந்தரரும் உடனே பாடினார்.

சுந்தரமூர்த்திநாயனாரைத் தமிழ்ச் சமர்த்தர் என்று தாயுமானவர் பொருத்தமாகப் போற்று கிறார். சுந்தரர் பாடிய தேவாரத்தில் புதைந்து கிடக்கும் அருள் சக்தியை ஆன்றோரே அறிய வல்லவராகின்றார். சுந்தரர்க்கு வன்தொண் டர் என்பது மற்றொரு பெயர். சிவனாரிடம் அவர் பூண்டிருந்த தோழமையே அதற்குக் காரணமாயிற்று. சிவனார் அருளால் சங்கிலியா ரையும், பரவையாரையும் சுந்தரர் திருமணம் செய்துகொண்டார். அத் திருமணம் உலகப் பற்றை அடிப்படையாகக்கொண்டதன்று. சிவ பக்தன் ஒருவனுக்கும் பக்திமதிகள் இருவருக் கும் இடையில் நிகழ்ந்ததெய்வீகப்பேரிணக்கமே திருமணம் எனப் பாராட்டப்படுகிறது. அதை ஒட்டிச் சிவனார் தாமே மணமகளிடத்துத் தூதும் சென்றார். அத்தகைய பரமபக்தரைப் போற்றுவது பரமனைப் போற்றுவதற்கு நிகரா கும். அந்த அரிய வாய்ப்பு தமக்கு எப் பொழுது அமையும் என்பதைத் தாயுமானவர் இக்கண்ணியின் வாயிலாகக் கேட்கின்றார்.

3-4. போதவூர் நாடுஅறியப் புத்தர்தமை [வாதில்வென்ற

வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ.

போதவூர்-சிதாகாசம் அல்லதுஅறிவுப் பெரு வெளியாயிலங்கும் சிதம்பரத்துக்கு அமைந் துள்ள பெயராம். வாதவூர் ஐயன்-திருவாத வூரிலே பிறப்பெடுத்த மாணிக்கவாசகர்.

நியாய சாஸ்திரத்திலே வாதம், விதண்டை, ஜல்பம் என்னும் மூன்று பகுதிகள் இருக்கின் றன. மெய்ப்பொருள் ஆராய்ச்சியின் பொருட்டு முறையாகக் கருத்துக்களைப் பரஸ்பரம் வழங் கிக்கொள்ளுவது வாதம். அங்ஙனம் முறை யாக வாதிப்பதும் ஒருவித ஆத்மசாதனமா கிறது. அப்படிச் செய்வதன் வாயிலாக ஆத்ம சாதகனுடைய அறிவு தீட்டப்பெறுகிறது. மெய்ப்பொருள் பற்றுதல் அதன்விளைவாக உறுதிப்பாடடைகிறது. இதற்கு மாறாக விதண்டையும், ஜல்பமும் வீண்பொழுது போக்குகளாம். வாதவூரடிகள் சிதம்பரத்திலே வைத்து முறையாகத் தத்துவ ஆராய்ச்சி பண்ணியதின் விளைவாக வைதிக மதத்துக் குப் புறம்பாயிருந்த பௌத்தமதச் சமயவாதி கள் சிலர் கொண்டுவந்த பிழைபட்ட கருத் துக்களை நேர்மையான கருத்துக்களாக அவர் திருத்தியமைத்தார். இறைவனுக்குப் பண்ணு கிற தொண்டுகளுள் இதுவும் ஒரு தலைசிறந்த தொண்டு ஆகிறது. 'திருவாசகத்திற்கு உரு கார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. திருவாசகத்தை ஓதுபவர் எல்லார் உள்ளத்திலும் அன்பு தானாக வளர்ந்துவிடும். அதை உலகுக்கு நல்கிய வாதவூரடிகளின் அருள் பாங்கை எண்ணி எண்ணித் தாம் உய்வடைவது எந்நாளோ என்னும்கருத்தைத் தாயுமானார் இக்கண்ணியில் அமைத்திருக்கிறார்.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

21. பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பரம பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாகுக.

இது இயேசுநாதருடைய பிரார்த்தனையாகும். தூய புனித வாழ்க்கைக்கு இப்பிரார்த்தனை அடிப்படையாகிறது. சாதனையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்தப் பிரார்த்தனையின் உட்பொருள் விளங்கும்.

பிரார்த்தனையில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. காமியப் பிரார்த்தனையென்றும், நிஷ்காமியப் பிரார்த்தனையென்றும் அவைகள் பகரப்படுகின்றன. தங்கள் பூலோக வாழ்வு வளமுடையதாக வேண்டுமென்றும், தங்களுக்கு வருகின்ற துன்பங்கள் விலக வேண்டுமென்றும் இறைவனிடம் பிரார்த்திப்பவர்கள் காமியப் பிரார்த்தனை செய்பவர்களாகிறார்கள். ஆன்மீக எழுச்சி பெற்றவர்களுடைய பிரார்த்தனை இதற்கு மாறாக அமையும். "இறைவா! நீ மட்டும் எனக்குவேண்டும். உன்னை அறிதல் ஒன்றே என் வாழ்வின் லட்சியமாகும்" என்று தெய்வம் வேண்டுமென்று பிரார்த்திப்பவர்கள் நிஷ்காமியப் பிரார்த்தனை செய்பவர்களாகிறார்கள். கடவுள் உணர்வில் மூழ்கிப் பேரானந்தத்தையும், முக்தியையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கின்ற நெறியைத்தான் இயேசுநாதருடைய பிரார்த்தனை நமக்குப் புகட்டுகிறது. வேற்றுமையை அகற்றிவிட்டு உண்மையான உணர்வுடன் கடவுளை நாடுபவர்கள் அவரை அடைகின்றார்கள். தெய்வ நம்பிக்கை உடையவர்களாகவிருந்து இயேசுவின் போதனையைப் பின்பற்றுபவர்கள் பூரணநிலையை அடைகின்றார்கள்.

உருவக் கடவுள் என்றும், அருவக் கடவுள் என்றும் வழிபாட்டுக்கு வைத்துக்கொள்வதுண்டு. அருவக் கடவுளைத் தியானம் பண்ணுவது சற்றுக் கடினம். உருவக் கடவுளைத் தியானம் பண்ணுவது சாதனையின் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு எளிதாக இருக்கும். கடவுளை உள்ளன்போடு நேசிப்பவர்களுக்குக் கடவுள் தமக்குச் சொந்தமானவர் என்ற உணர்வு ஏற்படவேண்டும். அதற்காக அவரிடம் ஓர் உறவு முறை வைத்துக் கொள்வது அவசியமாகிறது.

மக்கள் எவ்வளவோ உறவுமுறைகளை வைத்திருக்கிறார்கள். அவ் உறவுமுறைகளையெல்லாம் கடவுள் விஷயத்திலும் கையாளலாம். "இறைவா! நீ எனக்குத்தாய்; நீ எனக்குத் தந்தை; நீ எனக்கு உறவினன்; நீ எனக்குச் செல்வம்; நீ எனக்கு அறிவு; நீ எனக்கு எல்லாம் ஆவாய்" என்ற கருத்துடைய பிரார்த்தனை இந்துக்களிடையே இடம் பெற்றிருக்கிறது. கடவுளிடம் ஏதோ ஓர் உறவு முறையைக் கையாண்டு அவரிடம் பக்தியை வளர்ப்போமானல் அவர் எல்லாமாய் இருக்கிற உண்மையை நாம் அறியமுடியும்.

கடவுளிடம் ஐந்துவிதங்களில் உறவு வைக்கலாம். கடவுள் ஒருவர்தாம் மெய்ப்பொருள் என்று அவரோடு வைக்கின்ற உறவுக்குச் சாந்தபாவனை என்று பெயர். கடவுளை நாயகனாகவும் அல்லது நாயகியாகவும் கருதி அவரோடு வைக்கின்ற உறவுக்கு மதுர பாவனை என்று பெயர். கடவுளைத் தந்தையாகவோ, தாயாகவோ வைத்து தன்னைக் குழந்தையாகப் பாவிக்கும் உறவுக்கு வாத்சல்ய பாவனை என்று பெயர். கடவுளைத் தோழனாகப் பாவித்து அவரோடு வைக்கின்ற உறவுக்குச் சக்கிய பாவனை என்று பெயர். கடவுளை எஜமானனாகவும் தன்னைப் பணியாளனாகவும் எண்ணி அவரோடு வைக்கின்ற உறவுக்குத் தாஸ்ய பாவனை என்று பெயர். இத்தகைய இணக்கங்கள் இந்து மதத்திலும், கிறிஸ்தவ மதத்திலும் இடம் பெற்றிருக்கின்றன. இந்துக்கள் கிருஷ்ணனைக் குழந்தையாகக் கருதுவதுபோன்று, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் குழந்தையாகக் கருதுகிறார்கள்.

இயேசுநாதர் நம்முடைய தந்தை பரமண்டலத்தில் இருக்கிறார் என்று பகர்ந்திருக்கிறார். கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்க முடியுமா? என்ற கேள்வியை எல்லாக் காலங்களிலும் மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடவுள் அவசியம் இருந்தாக வேண்டும் என்பதற்குத் தத்துவஞானிகளும் தர்க்கவாதிகளும் பல எடுத்துக் காட்டுக்கள் தந்திருக்கிறார்கள்.

அவற்றை மறுத்துப் பேசுகின்றமக்களும் இருக்கிறார்கள். கடவுளை நேரே தரிசிப்பதுதான் அவர் இருக்கிறார் என்பதற்குப் பிரமாணம் ஆகும். அறிவைக்கொண்டு அவர் இருக்கின்றார் என்பதற்குக் கொடுக்கின்ற விளக்கங்கள் எல்லாம் பயனற்றவைகள். ஏனென்றால் கடவுள் இருக்கிறார் என்று நாம் கொண்டிருக்கின்ற கருத்துக்கே அவைகள் விளக்கங்கள் ஆகின்றன. நாம் கடவுளைப்பற்றிக் கொண்டிருக்கிற கருத்து அவர் இருக்கிறார் என்பதற்கு எப்படி நிரூபணமாகும்? சமுத்திரத்தை விட்டு உள்நாட்டில் இருந்துகொண்டு சமுத்திரம் இருக்கிறது என்பதை நாம் எப்படி நிரூபிக்க முடியும்? சமுத்திரத்தைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்து உண்மையான சமுத்திரத்துக்கு எப்படி நிரூபணமாகும்? "இந்த வழியாகச் சென்றால் ஒரு குன்றை அடையலாம். அக்குன்றின்மேல் நின்றுகொண்டு சமுத்திரத்தை நேரே பார்க்கலாம். அப்பொழுது சமுத்திரம் இருக்கிறது என்பதற்கு விளக்கம் ஏதும் தேவையில்லை" என்று சமுத்திரத்தைப் பார்த்த ஒருவர் பகர்கிறார். நேரே சமுத்திரத்தைப் பார்ப்பதுதான் சமுத்திரம் இருக்கிறது என்பதற்கு ஐயத்துக்கு இடமில்லாத நிரூபணமாகிறது.

உலக வரலாற்றில் ஞான ஒளி பெற்ற மஹான்கள் பகர்ந்திருப்பதாவது: "கடவுள் இருக்கின்றார்; நாங்கள் அவரைத் தரிசித்திருக்கிறோம்." நாம் அவர்கள் கூறி இருப்பதை நம்புகிறோமா என்பதுதான் இப்பொழுதுள்ள பிரச்னையாகும். அப்படிக் கூறிய அருளாளர்களுடைய வாழ்க்கையைப்பற்றி நாம் நன்றாக ஆராய்ச்சி செய்து அவர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள்தாம் என்பதைத் தீர்மானம் பண்ணவேண்டும். அவர்கள் கடைப்பிடித்த மார்க்கத்தை நாமும் கடைப்பிடிக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். அவர்கள் மார்க்கத்தை நாம் கடைப்பிடிக்காமல் இருப்போமேயானால் அது நம்முடைய குற்றமாகும். அவர்கள் சென்ற மார்க்கத்தில் நாமும் சென்றால் கடவுளை நேரில் கண்டு அவர் இருக்கிறார் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணரலாம்.

பரமண்டலத்திலிருக்கும் பிதா என்று சொல்லப்படுகிறது. பரமண்டலம் எங்கே இருக்கிறது? என்னும் கேள்வி எழுகிறது. நம் உள்ளமே பரமண்டலமாகிறது. வெட்ட வெளிக்கு அப்பாற்பட்டது உள்ளத்திலுள்ள சித்தவெளி ஆகும். பரமண்டலத்திலிருக்கும் பிதா என்பது சித்தமிசை குடிகொண்டிருக்கின்ற அறிவான தெய்வத்தைக் குறிக்கின்றது. நாம் ஆத்ம சொரூபம் என்பதை உணரும் பொழுது பரமண்டலத்தில் இருப்பவர்கள் ஆகின்றோம். நாம் மனதை இப்பொழுது உள்முகமாகத் திருப்பி ஆங்குப் பரமண்டலக்காட்சியைக் காண முடியாது. ஏனென்றால் நம் உள்ளத்தில் பிரபஞ்சமே குடிகொண்டிருக்கிறது. நம்மிடத்தில் உள்ள தெய்விக இயல்புகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. பிரபஞ்சத்தைத்தான் நாம் கண்டு வருகின்றோம். தேகாத்ம புத்தி உள்ளவர்களுக்குப் பிரபஞ்சம்தான் தென்படும். காலதேச வர்த்தமானத்தைப் பற்றிய உணர்ச்சியும் அப்பொழுது நம்மிடத்தில் இருக்கிறது. மாசுடைய மனதாக இருக்கும் வரையில், மனது உலகப் பொருள்களோடு பற்றுக்கொண்டு இருக்கும் வரையில், பிரபஞ்ச உணர்ச்சி இடம் பெற்றிருக்கும். பிரார்த்தனை, வழிபாட்டின் மூலமாக மனம் தூயதாகும் பொழுது அதற்குப் பரத்தின் காட்சி உண்டாகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "ஊனக் கண்ணைக்கொண்டு மனிதன் ஜடப் பொருள்களைத்தான் காணமுடியும். ஆனால் ஞானக்கண் திறக்கும் பொழுது ஆத்ம சொருபத்தைக் காண்பது சாத்தியம்." பரத்தின் காட்சி இருக்கும் பொழுது உலகக் காட்சி இல்லை. உலகக் காட்சி இருக்கும் பொழுது பரத்தின் காட்சி இல்லை. இதைத் திருமூலர்,

> மரத்தை மறைத்தது மாமத யானை
> மரத்தின் மறைந்தது மாமத யானை
> பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
> பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே

என்று பகர்ந்துள்ளார். மரத்தால் செய்யப்பட்டிருக்கும் யானை உண்மையான யானை போன்று தூரத்தில் இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரிகின்றது. உண்மையான யானையாகப் பார்க்கும் சமயத்தில் மரம் காட்சியிலிருந்து மறைந்து விடுகிறது. அதற்குப் பக்கத்தில் சென்று அதைத் தொட்டுப் பார்க்கும் பொழுது மரம் என்பது தெரிய வருகிறது. மரமாகத்

தென்பட்டவுடன் யானையாகக் கண்ட காட்சி அம்மரத்தில் மறைந்து விடுகின்றது. அஃதே போன்று பிரபஞ்சமாகக் காணும் பொழுது பரத்தின் காட்சி மறைந்து விடுகின்றது. சாதனையின்மூலம் மனதைத் தூய்மைப்படுத்திப் பொறி புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்வைப் பெறுகின்ற பொழுது பரத்தைக் காண்கின்றோம். பிரபஞ்சமாகத் தென்பட்டுக்கொண்டிருந்தது பரத்தின் காட்சியில் மறைந்து போகின்றது. உடல் மயமாக இருக்கின்றேன் என்ற உணர்வு போய் அறிவு மயமாக இருக்கின்றேன் என்றஉணர்வுஉண்டாகும்நிலையைச் சமாதிநிலை என்று சொல்கின்றோம். சமாதியில் காலதேச வர்த்தமானத்தைக் கடந்துபோய் விடுகிறோம். சமாதிநிலை சுலபத்தில் நமக்கு வந்து வாய்த்துவிடுவது இல்லை. சமாதிநிலைக்குப் போவதற்கு நம் உள்ளத்தில் தெய்வம் குடிகொண்டு இருக்கிறார் என்று நாம் நம்பவேண்டும். அத்தெய்வத்தை முறையாக நாம் வழுத்த வேண்டும். உள்ளத்தில் தெய்வம் வீற்றிருப்பதற்கு ஏற்ப அதை அருள்நிலையமாக்கவேண்டும். உள்ளத்தை ஆலயமாகச் செய்து இறைவனை நாம் ஆங்குத் தரிசிக்க முயலவேண்டும். சித்தமிசை குடிகொண்டுள்ள அறிவான தெய்வத்தைப் புறவுலகில் தேடாது சித்தத்திலேயே தேட முயல்வோமாக.

ஏசுநாதர் இறைவனுடைய நாமத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். இறைவனுடைய நாமத்தைக் கூறும்படி அவர் போதிக்கிறார். இறைவனும் இறைவனுடைய நாமமும் ஒன்று என்று பெரியவர்கள் பகர்ந்திருக்கிறார்கள். வேதாந்தத்தில் இறைவனுடைய நாமம் மந்திரம் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு தெய்வத்துக்கும் உள்ள நாமம் அந்தத் தெய்வத்துக்குரிய மந்திரமாகிறது. ஒவ்வொருவரும் தங்கள் இஷ்ட தெய்வத்தை அந்தந்த தெய்வத்துக்குரிய நாமத்தை உச்சரித்து வழிபட வேண்டும். உபதேசம் பண்ணும் பொழுது குரு சிஷ்யனுக்குத் தெய்வத்தினுடைய நாமத்தைத்தான் உபதேசிக்கின்றார். உபதேசிக்கப்பட்ட மந்திரத்தைப் புனிதமாகவும், ரகசியமாகவும் வைத்துத் தியானம் செய்யவேண்டும். இஷ்ட தெய்வத்தினுடைய மகிமைகள் யாவும் இஷ்ட தெய்வத்தின் நாமத்தில் அடங்கி இருக்கின்றன. இறைவனுடைய நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்தால் அது ஜபம் எனப்படுகிறது. நாமம் புனிதமானது என்று நாம் போற்றும் பொழுது நம் உணர்வு திருந்தி அமைகிறது. நாமத்தில் மனது ஒடுங்கும் பொழுது அது இறைவனுடைய மகிமையைக் கிரஹிக்கிறது. இடைவிடாது இறைவனுடைய நாமத்தை உச்சரித்தால் மனம் தூய்மை அடைகிறது. இறைவனுடைய நாமம் உச்சரிக்கப்படும் பொழுது உள்ளத்தில் உள்ள காமம் அகற்றப்படுகிறது. இறைவனுடைய நாமத்தையே ஓயாது உச்சரித்தால் அப்பொழுது உச்சரிப்பதில் சுவை ஏற்படுகிறது. நாம உச்சாரணை வலுத்துவரும் அளவு பக்தி பெருக்கெடுக்கிறது.

இறைவனுடைய நாமம் உச்சரிக்கப்படும் பொழுது மனம் உள்முகமாகத் திரும்புகிறது. உள்முகமாகத் திரும்பிய மனது இறைவனோடு ஒன்றுபடுகிறது. ஒரு மேஜையில் மைக்கூடு பொருத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மைக்கூட்டுக்குள் மையும், தூசியும் படிந்திருப்பதாக வைத்துக் கொள்வோம். மைக்கூட்டினுள் இருக்கும் மையையும், தூசியையும் போக்குவதற்கு மைக்கூட்டுக்குள் சுத்தமான நீரை வேகமாக ஊற்ற வேண்டும். அப்பொழுது மைக்கூட்டுக்குள் இருக்கும் மையும், தூசியும் நீரோடு சேர்ந்து வெளியே வர ஆரம்பிக்கும். மையும், தூசியும் முற்றிலும் வெளியே வரும்வரையிலும் சுத்தமான நீரை ஊற்றிக்கொண்டே இருக்கவேண்டும். அங்ஙனம் மனதுக்குள் இருக்கும் காமம் என்னும் அழுக்கைப் போக்குவதற்கு இறைவன் நாமம் என்னும் தூய நீரை ஊற்றிக்கொண்டே இருக்கவேண்டும். இறைவனுடைய நாமத்தை ஓயாது உச்சரித்துக் கொண்டிருந்தால் மனம் பரிசுத்தமடைகிறது. இறைச் சிந்தனை அட்பொழுது நம் உள்ளத்தில் வலுத்துவரும். இறைவன் நாமம் மற்ற எல்லாவற்றையும் பரிசுத்தமாக்கவல்லது. அதனால்தான் ஏசுநாதர் “இறைவா, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாகுக” என்று பிரார்த்திக்கிறார். சாதனைகளுள் நாமஜபம் எளிய சாதனை ஆகிறது. ஆனால் நாமஜபத்தின் மகிமை அளப்பரியதாக இருக்கிறது.

அவனன்றி அணுவும் அசையாது

வாழ்க்கையைப் புறவாழ்வு, அகவாழ்வு, ஆன்மீக வாழ்வு எனப்பிரித்து ஆராய்ந்தோம். இங்குப் புறவாழ்வு என்பது சரீர சம்பந்த மான உலக வாழ்வைக் குறிக்கிறது. சரீர சம்பந்தமாக நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் நமக்கு நன்கு விளங்குகின்றன. சரீர சம்பந்தமான செயலுக்குச் சரீரம்தான் காரணம் என்று எண்ணுகின்றோம். சற்று ஆராய்ந்து பார்த்தால் சரீர நிகழ்ச்சிகளுக்கெல்லாம் எண்ணம் அடிப்படையாகவிருப்பது விளங்கும். எண்ணத்தையும் கடந்து அப்பால் போனால் மனதை இயக்குகின்ற ஒரு சக்தியிருப்பது தெரியும். அந்தச் சக்தியினிடத்துக் கருத்தைச் செலுத்துவது இன்றியமையாததாகிறது. அச்சக்திதான் அனைத்துக்கும் காரணமாக இருக்கின்றது. அச்சக்தியைத்தான் இறைவன் என்று பகர்கிறோம். சரீரத்தையும், மனத்தையும் ஒழுங்குபடுத்துவதோடு அண்டத்தையே அச்சக்தி இயக்கி வருகிறது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது ஆப்த மொழி.

புறவுலகை நம்பி வாழ்ந்து வருகின்ற மக்கள் இறுதியில் ஏமாற்றம் அடைகின்றார்கள். தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பியிருப்பவர்களால் தாங்கள் கைவிடப்படுவதைக் காண்கிறார்கள். துரியோதனன் திரௌபதியைத் துச்சாதனன் மூலம் தன் சபைக்கு இழுத்து வந்தான். திரௌபதியின் துகிலை உரிந்து திரௌபதியை மானபங்கம் பண்ண முயன்றான். அப்பொழுது திரௌபதிக்குச் சான்றோர்களும், கணவர்களும் உதவி செய்ய முன்வரவில்லை. அவர்களை நம்பிப் பயன் இல்லை என்று அறிந்த திரௌபதிதேவி கண்ணனை வழுத்தித் தெய்வ சகாயம் பெற்றாள். சீதாப் பிராட்டியை இராவணன் தூக்கிச் சென்று துன்புறுத்திய பொழுது சீதைக்குப் புறவுலகில் யாரும் உதவி செய்ய வரவில்லை. சீதை தன் கற்பின் துணையைப் பெற்றுத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டாள்.

துரியோதனன் பாண்டவர்களைப் போரில் வெல்ல வேண்டுமென்று திட்டம் போட்டான். பாண்டவர்களை வனத்துக்கு அனுப்பி விட்டுத் தன்னுடைய படைபலத்தைப் பெருக்கி வந்தான். பாண்டவர்கள் வனவாச வாழ்க்கையில் அரிய தவம் செய்து தங்களுடைய மனதைத் தூய்மையும், உறுதியுமுடையதாக்கினார்கள். புறவுலகை நம்பியிருந்த துரியோதனன் இறுதியில் அடியோடு ஒழிந்து போனான். தெய்வத்தையும், தர்மத்தையும் நம்பியிருந்த பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். விசுவாமித்திரர் அரசராகவிருந்தபொழுது தம்முடைய சேனை பலத்தைக்கொண்டு வசிஷ்டருடைய தபோபலத்தை எதிர்த்தார். ஆனால் வசிஷ்டர் தபோபலத்தின் முன் விசுவாமித்திரருடைய சேனபலம் ஒழிந்தது. மேற் கூறிய நிகழ்ச்சிகளெல்லாம் ஆத்ம பலத்துக்கு நிகர் வேறு ஒன்றுமில்லை என்பதை விளக்கிக்காட்டுகின்றன. உலக மக்களோ, இயற்கைச் சக்திகளோ நம்மைக் காப்பாற்ற மாட்டா. சத்தியம் அல்லது தெய்வம் ஒன்றே நம்மைக் காப்பாற்றும், 'சத்திய மேவ ஜயதே' என்பது நம் தேசிய லட்சியம். சத்தியத்தை யாரும் அழித்துவிட முடியாது. ஹரிச்சந்திரன் முற்றிலும் சத்தியத்தை நம்பினான். அவனுக்குச் சோதனைகள் பல ஏற்பட்டன. சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக ராஜ்ஜியத்தை இழந்தான்; மனைவியை இழந்தான்; மகனை இழந்தான்; தன்னை அடிமை ஆக்கினான். எதை இழந்தாலும் சத்தியத்தை விடமுடியாது. என்று சத்தியத்தை முற்றும் நம்பி இருந்தான். கடைசியில் அவன் இழந்தவற்றை எல்லாம் திரும்பப்பெற்றான். சத்தியம் ஹரிச்சந்திரனைக் காப்பாற்றியது. சத்தியம் அல்லது தெய்வம் அனைத்தையும் இயக்கி வருகிறது. இவ்வுண்மை கதைகள் மூலமாகவும், வரலாறுகள் மூலமாகவும் விளக்கப்பட்டு வருகிறது.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று தாயுமானவர் பகர்கிறார். அனைத்தையும் இறைவன் தாம் இயக்கி வருகின்றார் என்ற உண்மை நம்போன்ற சாதாரண மக்களுக்கு விளங்குவதில்லை. அவ்வுண்மை ஞானிகளுக்குத் தெளிவாக விளங்குகிறது. இறைவனுடைய விளையாட்டாக அண்டத்தினுடைய இயக்கம் இருக்கிறது. சாதாரண மக்கள், செயல்களுக்கெல்லாம் தங்களைக் கர்த்தாக்களாக நினைத்துக்

கொள்கிறார்கள். போருக்கு வந்த அர்ஜுனன் குருக்ஷேத்ரப் போர்க்களத்தில் நுழைந்தவுடன் போரில் அனைவரையும் அழிக்கின்ற செயலை நான் செய்யமாட்டேன் என்று சொல்கின்றான். செயல்களுக்குத் தன்னைக் காரணமாக எண்ணிக்கொள்கின்றான். போர் புரிவது தன்னுடைய செயல் என்று அர்ஜுனன் எண்ணியதும் அவன் கோழையாகின்றான். அவன் மறந்துபோன உண்மையைக் கிருஷ்ணன் அவனுக்கு ஞாபகமூட்டுகிறார். அர்ஜுனனும் கிருஷ்ணன் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்குத் தகுதி உடையவனாக இருக்கின்றான். அர்ஜுனன் தன்னைக் கிருஷ்ணனிடம் ஒப்படைக்கின்றான். அர்ஜுனன் பகர்வதாவது:

कार्पण्यदोषोपहतस्वभावः पृच्छामि त्वां धर्मसंमूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहितन्मे शिष्यस्तेऽहं शाधिमां
त्वां प्रपन्नम् ॥

கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா:
யச்ச்ரேய: ஸ்யாந்நிஸ்சிதம் ப்ரூஹி தன்மே
சிஷ்யஸ்தேऽஹம் சாதிமாம் த்வாம் ப்ரபன்னம்

சிறுமை என்ற கேட்டினால் நல்லியல்பை இழந்த நான் அறநெறியை அறியப் பெறாது மயங்கி உம்மை வினவுகிறேன். எனக்குச் சிறப்பினுவதை உறுதியாக இயம்பும்; நான் உமது சிஷ்யன்; தஞ்சமடைகிறேன்; உபதேசித்தருளும்.

அர்ஜுனன் இங்ஙனம் கூறி முற்றிலும் தன்னைக்கிருஷ்ணனிடம் ஒப்படைக்கின்றான். செயலுக்குத் தான் கர்த்தா அல்லன் என்பதை அர்ஜுனன் உணர்ந்த பிறகு கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் புகட்டுகின்றார். 'அர்ஜுனா! இவற்றை எல்லாம் துடைத்துத் தள்ளுவது என் திட்டம்'' என்று கூறி அர்ஜுனனுக்கு விசுவரூப தரிசனம் காட்டி, அவனுக்கு உண்மையை விளக்குகின்றார். கண்ணனுடைய விசுவரூப தரிசனத்தைப் பார்த்த பிறகு அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற உண்மை அர்ஜுனனுக்கு விளங்குகிறது. கண்ணன் தாம் அனைத்தையும் செய்கின்றார்; கண்ணன் கையில் தான் வெறும் கருவி மாத்திரம் என்பதை உணர்ந்த அர்ஜுனன் பகர்வதாவது:

नष्टोमोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाऽच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥

நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதான்
மயாऽச்யுத
ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ

''அச்யுதா, மயக்கம் ஒழிந்தது. உமது அருளால் எனக்கு நினைவு வந்துள்ளது. ஐயங்கள் அகன்று உறுதியாயிருக்கிறேன். உமது சொற்படி செய்வேன்.''

கண்ணன் சொற்படி தான் செயல்புரியக் காத்திருப்பதாக அர்ஜுனன் சொல்கின்றான். கண்ணனுடைய கையில் கருவியாக இருப்பதற்கு அர்ஜுனன் முழுவதும் சம்மதித்துவிட்டான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இக்கருத்தைப் பகர்வதாவது: "தாயே! நீ யந்த்ரீ. நான் உன் கையிலுள்ள யந்திரம். இந்த யந்திரத்தை நீ எப்படி இயக்குகின்றாயோ அப்படி இது இயங்கும்." ஆத்ம தரிசனம் பெற்றவர்களுக்குத்தான் இவ்வுண்மை விளங்குகிறது. ஆத்ம தரிசனம் பெற்றவர்களுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகள் சாதாரண வார்த்தைகள் அல்ல; அவைகள் பொருள் நிறைந்த, சக்தி நிறைந்த வார்த்தைகளாகின்றன. அவைகள் மந்த்ரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பீஷ்மர் ஒரு ஞானியாவார். அவர் துரியோதனனுக்கு எச்சரிக்கை செய்துகொண்டே இருந்தார். ஆனால் துரியோதனன் அதைப் பொருள்படுத்தவில்லை. பீஷ்மர் துரியோதனனிடம் பகர்ந்ததாவது: "துரியோதனா, நீ அதர்ம வழியில் செல்கின்றாய். பாண்டவர்கள் தர்ம வழியில் செல்கின்றார்கள். தர்மவழியில் செல்கின்ற பாண்டவர்களுக்குத்தான் வெற்றி கிடைக்கும். என்போன்றவர்கள் பலர் உனக்கு உதவி செய்தாலும் அதர்ம வழியில் செல்கின்ற நீ வெற்றி அடைய மாட்டாய்." பீஷ்மர் சொன்ன இவ்வுண்மை எக்காலத்துக்கும் பொருந்தும். இன்றைக்கு அணுச்சக்தியைப் பயன்படுத்தி உலகை அழித்துவிடலாம். ஆனால் முறைதவறி அதர்ம வழியில் யார் செல்கின்றார்களோ அவர்கள் அணுச்சக்தியைக் கண்டுபிடித்தவர்களாக இருந்தாலும் அவர்களை அது அழித்துவிடும். யாவற்றையும் ஆட்டிப் படைக்கின்ற மாபெரும் சக்திக்கு நாம் உட்பட்டு நடக்கவேண்டும். இப்பொழுது அச்சக்தி நம்மைப் பாதுகாக்கிறது. அச்சக்தியின் போக்குக்கு நாம் மாறுபட்டு நடந்தால் அது

நம்மை அழித்துவிடும். இவ்வுண்மை ஞானி களுக்கு விளங்குகிறது.

உலகில் நிகழும் சில செயல்கள்கேடுபோலத் தோன்றும். அவற்றில் நன்மை இருக்கின் றது என்ற உண்மை நமக்கு விளங்குவதில்லை. அரசன் ஒருவன் கத்தியால் மாம்பழம் ஒன்றை அரிந்து கொண்டிருந்தான். கத்தி கையில் பட்டு ஒரு விரலைத் துண்டித்து விட்டது. கை விரல் துண்டானதும் ஒரு நன்மைக்கே என்று மந்திரி கூறினன். மந்திரியின் மீது அரசனுக் குக் கோபம் வந்து விட்டது. கைவிரல் துண் டிக்கப்பட்டது நன்மை என்று கூறுகிற மந்திரியைச் சிறையில் அடைக்கும்படி உத்தர விட்டான்.சிறைக்குப்போவதும் ஒரு நன்மையே என்று மந்திரி கூறினன். மந்திரி கூறியது அரசனுக்கு வேடிக்கையாக இருந்தது. இந் நிகழ்ச்சிக்குப் பிறகு சில நாட்கள் கழித்து அரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அரசன் மட்டும் தனியாக ஒரு மிருகத்தைத் துரத்திக்கொண்டு போனன். சைன்யங்க ளெல்லாம் பின்தங்கி விட்டன. மிருகத்தைத் துரத்திக்கொண்டுச் சென்ற அரசன் நரபலி கொடுக்கின்ற கூட்டத்தில் அகப்பட்டுக்கொண் டான். அம்மக்கள் தாங்கள் வழிபடுகின்ற தேவிக்கு ராஜலட்சணம் பொருந்திய ஆளைப் பலி கொடுப்பதில் மகிழ்ச்சி அடைவார்கள். அரசன் அவர்கள் கையில் அகப்பட்டதும் தேவிக்குப் பலி கொடுப்பதற்குரிய நல்ல ஆள் அகப்பட்டு விட்டான் என்று மகிழ்ச்சி அடைந் தார்கள். அரசனைத் தேவிக்குப் பலி கொடுப் பதற்கு ஆயத்தமானர்கள். அரசன் உடம்பி லுள்ள அங்கங்களை எல்லாம் பார்த்தார்கள். அரசனுடைய கைவிரல் துண்டிக்கப்பட்டுஇருந் ததால் அவன் அங்கஹீனன் ஆகிவிட்டான். ஊனமுடைய உடல் தேவியின் பலிக்கு உத வாது என்று கூறி அரசனை ஓட்டி விட்டார் கள். அரசனுக்கு அப்பொழுதுதான் எல்லாம் ஒரு நன்மைக்கே என்று மந்திரி கூறியது விளங்கியது. கைவிரல் ஊனமாகாமலிருந்தால் அன்று அவன் பலியாகி இருப்பான். கைவிரல் ஊனமானது ஒரு நன்மை என்று அறிந்த அரசன் ராஜ்ஜியத்துக்கு வந்ததும் மந்திரியை விடுதலை செய்தான். மந்திரியிடம் அரசன் பகர்ந்ததாவது. "கைவிரல் ஊனமாகாது இருந் திருந்தால் நான் இன்றைக்குக் காட்டில் பலி யாகி இருப்பேன். கைவிரல் ஊனமானது ஒரு நன்மை என்று நீ கூறியது எனக்கு இப் பொழுது முற்றிலும் விளங்கிவிட்டது." இங்ங னம் கூறி மந்திரிக்குச் சன்மானம் வழங்கினன். "உன்னைச் சிறையில் அடைத்தது நன்மை என்று கூறினய். அதில் உனக்கு என்ன நன்மை ஏற்பட்டது?" என்று அரசன் மந்திரி யைக் கேட்டான். "நான் அன்று சிறையில் அடைக்கப்படாமல் இருந்திருந்தால் உங்க ளோடு காட்டுக்கு வந்திருப்பேன். நீங்கள் மிரு கத்தைத் துரத்திக்கொண்டு போனபொழுது உங்களோடு வந்திருப்பேன். அந்தக் கூட்டத் தில் நான் அகப்பட்டு பலியிடப் பட்டு யிருப்பேன். சிறையில் அடைக்கப்பட்டதனல் நான் இப்பொழுது காப்பாற்றப்பட்டவனக இருக்கின்றேன். எனவே நான் சிறையில் அடைபட்டது நன்மைக்கே" என்று மந்திரி கூறினன். வாழ்க்கையில் கேடு போன்று வரு வதும் நன்மையாக முடியும் என்பதை நாம் அறிந்துகொள்ளாது இறைவனுடைய திட்டத் தைக் குறை கூறுவது உண்டு. எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணி வாழ்க்கை நடத்துகின்றவர்களுக்கு ஆபத்து எதுவும் இல்லை.

வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் சிறந்த ராமபக்தன். வாழ்க்கையில் நிகழ் கின்ற அனைத்தும் ராமன் செயலால் நிகழ்ந்து வருகின்றன என்று எண்ணி வாழ்க்கை நடாத்தி வந்தான். அவன் நெசவு வேலை செய்ததோடு தான் நெய்த துணிகளைத் தானே விற்று வந்தான். துணிக்கு விலைகூறும் பொழுது ராமனுடைய சித்தத்தின்படி நூல் கிரயம், நெய்தல் கூலி, லாபம் அனைத்தையும் சேர்த்துத் துணியின் விலையைக் கூறுவான். அவனுடைய நேர்மையில் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவன் கூறிய விலைக்குத் துணியை வாங்கிக்கொண்டு போய்விடுவார் கள். தினசரி கடமைகளை முடித்துவிட்டு இரவு உணவுக்குப் பின் வீட்டுத் திண்ணையில் உட் கார்ந்து ராமநாமஜபம் பண்ணிக்கொண்டிருப் பான். சில நாட்களில் இரவு முழுவதுமே ஜபத்தில் ஈடுபட்டு விடுவான். ஓர் இரவு அவன் ராமநாமஜபம் சொல்லிக் கொண்டிருந்த

பொழுது கொள்ளைக் கூட்டத்தினர் அவன் இருக்கும் இடத்துக்கு வந்தார்கள். அவனைப் பார்த்ததும் கொள்ளை அடித்த பொருள் களைச் சுமப்பதற்குத் தகுந்த ஆள் கிடைத் தான் என்று தீர்மானம் பண்ணினர்கள். கொள்ளையடித்திருந்த பொருள்களை எல் லாம் மூட்டையாகக் கட்டி அவன் தலைமீது வைத்து அவனை அவர்களோடு இழுத்துச் சென்றார்கள். சில போலீஸ்காரர்கள் கொள் ளைக் கூட்டத்தினரைப் பின் தொடர்ந்து ஓடி வந்தார்கள். போலீஸ்காரர்களைப் பார்த் ததும் கொள்ளைக் கூட்டத்தினர் ஓடிவிட் டார்கள். களவுப்பொருள்களோடு சேணி யன் போலீஸ்காரர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டான். போலீஸ்காரர்கள் அவனைத் திருடன் என்று எண்ணிக் காவலில் வைத்தார் கள். சேணியன் காவலில் இருந்துகொண்டு ராம நாமஜபம் செய்துகொண்டிருந்தான். நாம ஜபம் சொல்லுவதற்கு எந்த இடமும் உகந்த இடமே. எனவே அவன் காவலில் இருக்கி ருன் என்ற உணர்ச்சி இன்றி மகிழ்ச்சியோடு நாமஜபம் செய்து கொண்டிருந்தான். நீதிபதி யிடம் விசாரணைக்காக அவன் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். சேணியன் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான் என்ற விஷயம் ஊர்முழுவதும் பரவிவிட்டது. ஊரார் அனை வரும் ஒன்று கூடி அவன் நேர்மையானவன் என்பதற்குச் சாட்சி கூற வந்துவிட்டார்கள். நியாயாதிபதி சேணியனுடைய வாக்கு மூலத் தைக் கேட்டார். சேணியன் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு நியாயாதிபதியிடம் கூறினன். சேணியன் பகர்ந்ததாவது: "நான் வழக்கம் போன்று இரவு உணவுக்குப் பின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து ராம நாமம் சொல் லிக்கொண்டிருந்தேன். ராமன் சித்தப்படி கொள்ளைக்கூட்டத்தினர் அவ்வழியாக வந்த னர். ராமன் சித்தப்படி அவர்கள் கொள்ளை யடித்த பொருள்களையெல்லாம் மூட்டை கட்டி என் தலை மீது வைத்தார்கள். ராமன் சித்தப் படி போலீஸ்காரர்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு வந்தார்கள். ராமன் சித்தப்படி கொள்ளைக்காரர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். ராமன் சித்தப்படி போலீஸ்காரர்கள் கையில் நான் அகப்பட்டேன். ராமன் சித்தப்படி அவர் கள் என்னை இரவுமுழுதும் காவலில் வைத் திருந்தார்கள். ராமன் சித்தப்படி நான் உங் கள் முன்னிலையில் விசாரணைக்கு நிறுத்தப் பட்டுள்ளேன்."

அவன் கூற்றைக் கேட்ட நியாயாதிபதி அவன் திருடனாக இருக்க முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்தார். எனவே அவனை விடுதலை செய்து வீட்டுக்கு அனுப்பி விட்டார். சேணியன் ராமன் சித்தப்படி விடுதலை கிடைத்தது என்று வீட்டுக்கு வந்தான். தெய் வத்தின் திட்டப்படி பிரபஞ்சச் செயல்கள் நிகழ்கின்றன. இவ்வுண்மையைப் பக்தர்களும் ஞானிகளும் உணர்கிறார்கள்.

உலக அமைப்பில் சேதனம், அசேதனம் அதாவது சித்து, ஜடம் என்கின்ற இரு நிலைகள் இருக்கின்றன. ஜடமாக இருக்கும் பொருள் சித்தாக மாறி அமைவது பிரபஞ்சத் தில் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. ஜடம் சித்து சேர்ந்த அமைப்பு இவ்வுலகமாகும். நம் மிடத்தில் ஜடமும் சித்தும் இருக்கின்றன. உடலமைப்பில் உணர்ச்சிப் பகுதியும் உண்டு; உணர்ச்சி இல்லாத பகுதியும் உண்டு. நகம், ரோமம் முதலான பகுதிகள் ஜடத்தன்மை உடையவைகளாக இருக்கின்றன. மற்றப்பகுதி களில் உணர்ச்சி இருப்பதை உணர்கிறோம். இவ்வுலகில் ஜடப்பொருள்களும் இருக்கின் றன; சித்பொருள்களும் இருக்கின்றன. ஜடப் பொருள்களிடத்துச் சித் தன்மை மறைந்துகிடக் கின்றது. சித் பொருள்களிடத்து அறிவு தோற்றத்துக்கு வர ஆரம்பித்து இருக்கிறது. வியாவகாரிக நிலையில் நம் காட்சியில் ஜடப் பொருள்கள் சித்பொருள்கள் என்ற வித்தியா சத்தைக் காண்கின்றோம். ஆன்மீக உணர்வு ஓங்கும்பொழுது இந்த வேற்றுமை அகன்று போகின்றது. ஆழ்ந்த உறக்கத்தில் நமக்கும் ஜடப்பொருளுக்கும் வித்தியாசமில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் அறிஞனும் ஆனந்தமாக உறங்கு கின்றான்; அறிவிலியும் ஆனந்தமாக உறங்கு கின்றான். "கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப் பருளும் களிப்பே" என்று அந்நிலை பேசப்படு கிறது. பாரமார்த்திக நிலையை அடைந்தவர் கள் முற்றும் அறிவு மயமாக இருக்கிறார்கள்.

அறிவு முற்றும் ஒடுங்கிய நிலை ஜடநிலையா கும். அறிவு முற்றும் வெளிப்பட்டநிலை தெய்வ

மாகும். அறிவு வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் உயிர்கள் இருக்கின்றன. பாலும் நீரும் கலந்த கலவை ஒன்றில் முக்கால் பங்கு பாலும், கால்பங்கு நீரும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இரண்டாவது கலவையில் அரைப்பங்கு பாலும் அரைப்பங்கு நீரும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்விரண்டு கலவைகளில் உள்ள பாலையும் ஒப்பிட்டுச் சொல்கின்றபொழுது முதல் கலவையைச் சுத்தப்பால் என்று சொல்லுகின்ரேம். இரண்டாவது கலவைப் பாலைத் தண்ணீர்ப்பால் என்று சொல்லுகின்ரேம். நீரே கலவாதபால் சுயப்பால் ஆகிறது. சுயப்பாலில் கலப்புக்கே இடமில்லை. அது தன்மயமாக இருக்கிறது. அங்ஙனம் சுய அறிவு ஓங்கும் பொழுது ஜடத்திற்கு இடமில்லாது போகின்றது. முற்றிலும் அறிவு ஓங்கப்பெற்ற நிலை நம் உண்மையான நிலையாகும்.

நிர்விகல்ப சமாதியில் மனம் இவ்வுலக நிலையைவிட்டுப் பேரறிவுப் பெருநிலையை அடைகிறது. ஒருசமயம் சுவாமி விவேகானந்தர் நிர்விகல்ப சமாதியை அடைய விரும்பினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவேகானந்தருடைய நெஞ்சைத் தொட்டு அவரை அவ் உயர்நிலைக்கு எடுத்துச் சென்ருர். அவ்வுயர்நிலையை மனம் அடையும்பொழுது யாவும் சின்மயமாகத் தென்படுவதைச் சுவாமி விவேகானந்தர் கண்டார். அப்பேரானந்தப் பெருநிலையில் விவேகானந்தரைச் சிறிதுநேரம் வைத்திருந்தபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலக நிலைக்கு அவருடைய மனதை இறக்கிவந்தார். விவேகானந்தர் அப்பொழுது பெருநிலையிலேயே தம்மை யாண்டும் வைக்கும்படி ஸ்ரீ ராமகிருஷ்ணரை வேண்டிக்கொண்டார். அப்பெருநிலையில் இருப்பது ஒரே பொருள். எனவே அங்கு அறிந்தவர்களுக்கோ அறியாதவர்களுக்கோ இடமில்லை. நாம் இப்பொழுது பொருள்படுத்தி வருகின்ற அறிவுக்கும், அறியாமைக்கும் அப்பெருநிலை அப்பாற்பட்ட நிலையாகும். அப்பெருநிலையில் வேற்றுமைகள் யாவும் அகன்று போகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் வாழ்க்கையில் சில அற்புதங்களைச் செய்துள்ளார். லாட்டு என்ற சமையல்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு உடல் உழைப்புத்தான் செய்யத் தெரியும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனுக்கு வங்காள எழுத்துக்களைக் கற்றுக்கொடுத்தார். அவனுக்கு அவைகளைச் சரியாக உச்சரிக்கவே முடியவில்லை. அவனுக்குக் கற்றுக்கொடுப்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கைவிட்டு விட்டார். சுயநலமற்றுப் பணிவிடைசெய்ததன் மூலமாக லாட்டு மிக உயர்ந்தநிலையை அடைந்துவிட்டார். சுவாமி விவேகானந்தர் லாட்டுவுக்குச் சந்நியாசம் கொடுத்து அற்புதானந்த சுவாமிகள் என்னும் திருநாமம் தந்தார். வேதாந்தத்தில் விளங்கிக்கொள்ள முடியாத சிலபகுதிகளை நவீனக் கல்விகற்ற பிரம்மச்சாரிகளும், ராமகிருஷ்ண மடத்து அன்பர்களும் அற்புதானந்த சுவாமிகளிடம் கேட்டு விளக்கம் பெறுவார்கள். சுவாமி விவேகானந்தர் அடைந்திருந்த பெருநிலையை அற்புதானந்த சுவாமிகளும் அடைந்திருந்தார். கிரீஷ்சந்திரகோஷ் என்ற நாடக ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் மகா பாதகங்கள் செய்தவராக இருந்தார். அவர் ராமகிருஷ்ணரோடு தொடர்புகொண்டு விவேகானந்தர் அடைந்திருந்த நிலையை அடைந்து விட்டார். ராமகிருஷ்ணருடைய மறைவிற்குப் பின் அவருடைய சிஷ்யர்கள் ஒன்றுகூடி ராமகிருஷ்ணருடைய பெருமையைப் பேசிக்கொண்டிருந்தார்கள் அப்பொழுது கிரீஷ்சந்திரகோஷ் பகர்ந்ததாவது: "மதுவருந்தி மயக்கமடைந்து சாக்கடையில் உருண்டுகிடக்கவேண்டிய நான் மகான்களுடைய கூட்டத்தில் சமநிலையில் அமர்ந்திருக்கின்றேன். என்னை இந்த நிலைக்குக்கொண்டுவந்தது ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பெருமையாகும்." நவீனக் கல்விபெற்றிருந்த விவேகானந்தர் போன்றவர்களையும் லாட்டு போன்ற நவீனக் கல்வி அறிவில்லாதவர்களையும், நலமே வடிவெடுத்திருந்த துரியானந்தர் போன்றவர்களையும், கேடே நிறைந்திருந்த கிரீஷ்சந்திரகோஷ் போன்றவர்களையும்சமநிலையில் வைத்து எண்ணக்கூடிய சமாதிநிலைக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொண்டுவந்தார். அனைத்தையும் இப்பெருநிலைக்கு எடுத்துச்செல்லுகின்ற செயல் ஓயாது நிகழ்ந்துவருகிறது. அச்செயலைச் செய்து வருகின்ற சக்திக்கு எப்பெயரிட்டு அழைத்தாலும் அது அண்டங்களை எல்லாம் இயக்கி வருகின்றது என்ற உண்மையை நாம் ஏற்ருகவேண்டும். (தொடரும்)

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

13. கழுகும் நூலறிவு படைத்த பண்டிதனும்

பொதுவாகப் பறவைகள் வானத்தில் சுதந்திரமாகப்பறந்து திரிந்து வாழ்கின்றன. மீன்கள் நீரில் நீந்துவதுபோல் இவை காற்றில் நீந்துகின்றன. இவை பறப்பதற்கேற்ப உடலுறுப்புக்களைப் பெற்றுள்ளன. இவை வெப்பரத்த பிராணிகளாம். அதாவது இவற்றின் உடல் வெப்பநிலை சூழ்நிலைக் கேற்றவாறு மாறாமல் ஒரே சீரான அமைப்பைப் பெற்றிருக்கும். பறவைகளிடம் இறகுகள் காணப்படுவது இவ்வினத்திற்கே உரித்தான ஒரு சிறப்பு அம்சம் ஆகும். இறகுகள், பறவைகள் வானில் பறப்பதற்கும், உடலை மூடி வெப்பநிலையைக் காப்பதற்கும் பயன்படுகின்றன.

பறவையின் எலும்புக்கூட்டில் பல எலும்புகளில் வெற்றிடங்கள் உள்ளன. இதனால் பறவையின் உடல் கனமற்று எளிதாக விண்வெளியில் அது பறக்க முடிகிறது. பறவை இனத்திற்குரிய பண்புகள் அனைத்தும்கொண்டது கழுகுஎன்னும் பறவையாகும். இப்பறவை நல்ல உயரத்தில் பறக்கக்கூடிய ஒன்று ஆகும். எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் கீழே உள்ள தனக்கு வேண்டிய இரையைக் காணும் ஆற்றல் அதன் கண்ணிற்கு உண்டு. ஆகவே அது மிக உயரமாகப் பறந்தாலும் அதன்கண் கீழே தரையில் உள்ள பிணம் போன்ற அழுகிய பொருட்களைத்தான் நாடுகிறது. இது அதனுடைய இயல்பு ஆகும். அதுபோன்று நூலறிவிலே அரம்போலும் கூர்மையராகத் தென்படும் பண்டிதர்களின் பேச்செல்லாம் மேலானதாக இருந்தபோதிலும் அவர்கள் மனம் காம காஞ்சனத்தில் உழன்றுகொண்டிருக்குமானால் அத்தகைய பண்டிதர்கள் உயரப் பறந்தும் கீழேயுள்ள அழுகிய பொருட்களில் மனதைச் செலுத்தும் கழுகுக்கு நிகராகிறார்கள். ஆகவே வெறும் பாண்டித்தியத்தால் ஆவதொன்றுமில்லை. ஒருவன் அருள்தாகம் பிடித்தவனாய் இறைவனை ஆவலுடன் நாடுவானாகில் அவன் இறைவனை அடைவான். வெறும் சாஸ்திர ஆராய்ச்சி எவ்வித நன்மையையும் விளைவிக்காது. உலகப்பற்றுடையவன் சாஸ்திரங்களை எவ்வளவு படித்தாலும் அவைகளின் உட்கருத்தை அவனால் கிரஹிக்க முடியாது. பொருளிலும், போகத்திலும், பதவியிலும், புகழிலும் ஆசை இருக்கும் வரை ஒருவன் இறைவனை உணரமுடியாது. இவைகளுள் ஏதேனும் ஒன்றில் ஆசை இருந்தாலும் அது மனிதனை அருள் துறையில் முன்னேறவிடாமல் தடுத்து விடுகிறது.

ஆண்டவனின் பாத கமலங்களில் எப்போதும் தன் மனத்தை லயிக்க வைத்திருப்பவன் சான்றோன். சமுதாய நலத்தின் பொருட்டுத் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பவன் சான்றோன். உலகு இன்புறக் கண்டு தான் இன்புறுபவன் சான்றோன்.

வெறுமனே சாஸ்திரங்களைக் கற்பதால் ஆவதொன்றுமில்லை. அது ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்னும் நிலைக்கே நம்மை எடுத்துச் செல்லும். ஆகவே பணிவிடை பண்ணுதல், பிரார்த்தனை செய்தல், இறைவனது திருநாமத்தை இடையறாது ஜபித்தல், இன்னும் இவைபோன்ற ஆத்ம சாதனங்களை அனுதினமும் செய்து வருவோமேயானால் அது சித்தசுத்தியை உண்டுபண்ணுவதோடு சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள பாரமார்த்திகப் பேருண்மைகளையும் நமக்கு எளிதில் விளங்கவைக்கும்.

ஆகவே வெறும் வாய் வேதாந்திகளாக ஆய்விடாமல், நல்ல ஆத்ம சாதகர்களாக, சிந்தையும் செயலும் ஒன்றுபட்டவர்களாக ஆக நாம் இடையறாது ஊக்கத்துடன் முயலவேண்டும்.

"கழுகு வானத்தில் உயரப் பறக்கிறது. ஆனால் அதன் கண் கீழே தரையில் உள்ள பிணத்தையும் அழுகிய பொருட்களையும் நாடுகிறது. வெறும் வாசாஞானிகளாகிய பண்டிதர்கள் கழுகு போன்றவர்கள். வேதசாஸ்திரங்களை எவ்வளவு கற்றிருந்தாலும் காம காஞ்சன வசப்பட்டிருக்குமளவு அவர்கள் கழுகு போன்றவர்களே. அறிவிலே வானுற உயர்ந்தவர்களாகத் தென்பட்டாலும் அவர்கள் நாட்டம் எல்லாம் காமத்திலும் காசு ஆசையிலுமேயாம். காமமும் காசு ஆசையும் அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்குமளவு அவர்கள் ஈசுவரலாபத்தை அடையமுடியாது."

— ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-155

892. **वैष्णवी வைஷ்ணவீ**—விஷ்ணுவுக்குரிய சக்தி வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அக்னியும், அதனுடைய சுடுகிற தன்மையும் ஒன்றேயாம். உஷ்ணத்தைத் தீயினின்று பிரித்தெடுக்க முடியாது. அதே விதத்தில் மஹாவிஷ்ணுவுக்குரிய சக்தியை அவரிடமிருந்து பிரித்துவைக்க முடியாது. மஹாவிஷ்ணுவுக்குச் சக்தியாயிருப்பவள் லக்ஷ்மி தேவி. இந்தத் திருமகளைத் திருமால் தமது மார்பில் வீற்றிருக்கச் செய்திருக்கிறார்.

பிரபஞ்சம் முழுதையும் ஆராய்ந்து பார்த்தால் அது திருமகள் சொரூபம் என்பது தெற்றென விளங்கும். பயன்படாப் பகுதி பிரபஞ்சத்தில் எங்குமேயில்லை. அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரையோரத்தில் கருநிறமுள்ள மணல் ஏராளமாகப் படிந்திருக்கிறது. அம்மணல் தரையில் பல ஆண்டுகளுக்கு முன்பு கயிறு திரித்து அதை ஜெர்மனிக்கு ஏற்றுமதி பண்ணினார்கள். கயிற்றில் ஒட்டியிருந்த கருமணலை அவர்கள் ஆராய்ச்சி பண்ணினார்கள். அதனின்று வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற அரிய பெரியபொருள்களைப் பௌதிக விஞ்ஞானிகள் பிரித்தெடுத்தார்கள். மணலில்கயிறு திரிப்பதற்கு நிகராக இன்றைக்கும் அக்கருமணலினின்று அரிய வஸ்துக்கள், ஏதேதோ பிரித்தெடுத்துப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு ரூபாய் மதிப்புள்ள மணலினின்று ஐம்பது ரூபாய் பெறும்படியான வஸ்துக்களைப் பௌதிக விஞ்ஞானிகள் இன்றைக்குப் பிரித்தெடுக்கிறார்கள். இச்செயலைச் சரியாக ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் இது திருமகளின் திருவிளையாடலே என்பது வெளியாகிறது. திருமால் காக்கும் தெய்வமாகத் திகழ்கிறார். பிரியாது அவரிடத்துப் பொலிந்து கொண்டிருக்கும் திருமகளோ பிரபஞ்சம் என்னும் பொருள் மயமாகத் திகழ்கிறாள். தொட்டதெல்லாம் பொன்னாகும் வல்லமையைப் பற்றிய பேச்சு இடையிடையே மக்களுக்கு இடையில் நிகழ்கிறது. உண்மையில் தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் அறிவை இக்காலத்திய பௌதிக விஞ்ஞானிகள் பெற்று வருகிறார்கள்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

என்னும் முதுமொழிக்கேற்ப இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் மக்களுக்கு நன்கு பயன்படும் மேலாம் பொருள்களாக மாற்றியமைப்பது சாத்தியம். அப்படிச் செய்வதே பாராட்டுதற்குரிய திருமகளின் வழிபாடு ஆகிறது.

வெறுமனே அமர்ந்துகொண்டு தனக்குச் செல்வம் தரவேண்டுமென்று திருமகளிடம் விண்ணப்பிப்பவன் சரியான உபாசகன் ஆகமாட்டான். பிரபஞ்சம் எங்கும் நிறைந்து கிடக்கும் பொருள்களை எல்லாம் எடுத்து அவைகளை நல்ல பாங்கில் பயன்படுத்தத் தெரிந்துகொண்டவனே லக்ஷ்மி தேவியின் உண்மையான உபாசகன் ஆகிறான்.

893. **विष्णुरूपिणी விஷ்ணுரூபிணீ** — விஷ்ணு வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அன்னை பராசக்தி மகாவிஷ்ணுவின் சகோதரி என்பது புராண வரலாறு. பார்வதி பரமேஸ்வரன் திருமணத்தில் தமது சகோதரியாகிய அம்பிகையை, மஹாவிஷ்ணு சிவபெருமானுக்கு மணம் முடித்துக் கொடுக்கின்றார். பொருள் ஒன்று. அதை ஆண்பாலாகவோ, பெண்பாலாகவோ கருதுவது மரபு. எனவே அம்பிகையை விஷ்ணுரூபிணீ எனப் பகர்வது முற்றிலும் பொருத்தமானது. தங்கையானவள் சங்கு, சக்கரம், கதை ஆகிய தன் தமையனுடைய ஆயுதங்களைக் கையாண்டு பிரபஞ்சத்தின் நடைமுறைகளை நன்கு பரிபாலித்து வருகிறாள் என்பது ஐதிகம்.

894. **अयोनिये नमः அயோனியே நம:**– எதனிடத்திருந்தும் உதித்து வந்தவள் அல்லள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சிவமும் சக்தியும் ஒன்று. சிவன் எதனிடத்திருந்தும் தோன்றி வந்தவரல்லர். அதே பாங்கில் சக்தியும் எதனிடத்திருந்தும் தோன்றி வந்தவள் அல்லள். எப்பொருள் அல்லது எவ்வுயிர் புதியதாகத் தோற்றத்துக்கு வருகிறதோ, அவ்வுயிர் எங்கிருந்து எப்

படி வந்தது என்னும் கேள்வி எழுகிறது. ஆனால் சிவமாகவும், சக்தியாகவும் இருக்கிற பொருளுக்குத் துவக்கமில்லை, பிறப்பில்லை. எதனிடத்திருந்தும் உண்டானதன்று. யாண்டும் அப்பொருள் இருந்தது இருந்தபடி இருந்து வருகிறது. ஆதலால் அதற்கு முடிவும் இல்லை. தோற்றத்துக்கு வருகிற ஒவ்வொரு பொருளுக்கும் முடிவு உண்டு. சிவசக்தியாயிருக்கிற பர வஸ்துவுக்கோ தோற்றமுமில்லை, ஒடுக்கமுமில்லை; பிறப்புமில்லை, இறப்புமில்லை. அவ் வஸ்து அனாதி அனந்தமாக யாண்டும் இருந்து வருகிறது. அது நித்திய வஸ்து. அது சாசுவதமானது. யாண்டும் நிலைபேறு உடையது. அழிவற்ற பொருள் என்று அம்பிகையைப் பகரலாம்.

யோனி என்னும் பதம் இருப்பிடம் என்று பொருள்படுகிறது. அயோனி என்று சொல்லுமிடத்து அதற்காகவென்று தனியிருப்பிடம் அமையப்பெறாதது எனப் பொருள்படுகிறது. சக்தியானவள் அங்கு இருக்கிறாள், இங்கு இருக்கிறாள் என்று இடத்தைக் குறிப்பிட்டு இயம்பமுடியாது. எங்கும் நிறைபொருளாக அவள் யாண்டும் இருந்து வருகிறாள். நீக்கமற நிறைபொருள் என்று அவளை இயம்பலாம். அதேவிதத்தில் அக்காலத்தில் இருந்தவள், இக்காலத்தில் இருக்கிறவள், பின்பு ஒரு காலத்தில் இல்லாதுபோபவள் என்று இயம்ப முடியாது. காலத்தைக் கடந்தவளாக அவள் இருந்து வருகிறாள். இன்ன காரணத்தினால் அவள் இருக்கிறாள், காரணம் மாறியமைகிற பொழுது அவள் இல்லாது போய் விடுவாள் என்னும் கோட்பாடு அவளுக்குப் பொருந்தாது. காலதேச நிமித்தத்துக்கு அப்பாற்பட்டவளாக அவள் இருந்து வருகிறாள்.

அம்பிகையைப் பற்றிய இக்கோட்பாடு தியானத்துக்குரியது.

895. **योनिनिलया** யோனி நிலயா — தோற்றத்துக்கு வந்துள்ள அனைத்துக்கும் இருப்பிடமாய் இருப்பவள்.

பிரளயகாலத்தில் அண்டங்களனைத்தும், ஜீவகோடிகளனைத்தும் அம்பிகையினிடத்து ஒடுங்கிப்போகின்றன. ஆதலால் அவைகளனைத்துக்கும் அவள் நிலயம் அல்லது ஒடுங்குமிடம் ஆகிறாள். சிருஷ்டிக் காலத்தில் அவை யாவும் அம்பிகையினிடத்திருந்தே தோற்றத்துக்கு வருகின்றன. ஆதலால் அவைகள் அனைத்துக்கும் யோனியாக அல்லது பிறப்பிடமாக அம்பிகை இருந்து வருகிறாள். ஈண்டு உபமானம் ஒன்றை எடுத்துக் கொள்வது பொருந்தும். படக்காட்சியில் தென்படுகிற படங்களனைத்துக்கும் திரை ஆதாரமாக இருக்கிறது. படக்காட்சி முடிவுறுகிற பொழுதும் திரை தன்மயமாய் இருக்கிறது. அங்ஙனம் தன்மயமாயிருக்கிற திரைக்கு நிகர் அம்பிகை. அதில் தோன்றியிருந்து, ஒடுங்கும் படங்களுக்கு நிகர் ஜீவகோடிகளும், அண்டகோடிகளுமாம். அவைகளின் வரவையும், போக்கையும் முன்னிட்டு அம்பிகையினிடத்து எந்தவிதமான மாறுதலும் உண்டாவதில்லை. அவள் யாண்டும் இருந்தது இருந்தபடியே இருக்கின்றாள்.

896. **कूटस्था** கூடஸ்தா — அக்ஞான மயமான பிரபஞ்சத்துக்கு இருப்பிடமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

அம்பிகையின் பஞ்சகிருத்தியங்களுள் திரோதானம் அல்லது மறைத்தல் என்பது ஒன்றாகிறது. ஜீவாத்மாக்களின் நிஜசொரூபம் ஆனந்தம். ஆனால் அன்னை பராசக்தி ஜீவர்களிடத்திலிருந்து அப்பெருநிலையை மறைத்து வைத்திருக்கின்றாள். அப்படிச் செய்வதால்தான் சம்சாரம் அல்லது பிறவிப்பெருங்கடல் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. இவை யாவுக்கும் அடிப்படையாயிருப்பது அக்ஞானம் என்னும் மயக்கம். அத்தகைய மயக்கம் இருந்தால் தான் பிரபஞ்சத்தின் தோற்றமும் இருப்பும் முறையாக நிகழ்வனவாகின்றன. இதற்கு இருப்பிடமாக அன்னை பராசக்தி இருப்பதால் அவள் கூடஸ்தா என இயம்பப் பெறுகிறாள். கூடம் என்னும் சொல் கொடுமுடி அல்லது மலையுச்சி எனப் பொருள்படுகிறது. பிரபஞ்ச நடைமுறை என்ற காற்றடிக்கின்றபொழுது மலையிலுள்ள மரம் செடி கொடிகள் எல்லாம் அசைகின்றன. ஆனால் அவை யாவுக்கும் மேலே இருக்கிற மலைச்சிகரம் அசையாதிருப்பதைக் காண்கின்றோம். அதேவிதத்தில் ஜகத் என இயம்பப் பெறுகிற பிரபஞ்சம் யாவும் அசைந்து நிலைமாறிக்கொண்டிருப்பதற்

கிடையில் அவையாவுக்கும் ஆதாரமாயிருப்பவளும், அப்பாலிருப்பவளுமாகிய அன்னை பராசக்தி அசையாது தன்மயமாய் இருக்கின்ருள். கூடம் என்னும் சொல் அண்டகோடிகளுக்கும், ஜீவகோடிகளுக்கும் இருப்பிடமாம். அவை யாவையும் தாங்கிக்கொண்டிருக்கின்ற தாய் யாண்டும் அசைவற்று இருக்கிருள். கூடம் என்னும் சொல் கொல்லனுடைய உலைக்களத்தைக் குறிக்கிறது. அதன்மீது பழுக்கக் காய்ச்சிய இரும்புகளையும், சூடு ஆகாத சாதாரண இரும்புகளையும் வைத்துச் சம்மட்டியால் கொல்லன் அடி அடி என்று அடிக்கிருன். எவ்வளவுதான் அடிபட்டாலும் ஏனைய இரும்புத் துண்டுகள் உருமாறி அமைவதுபோன்று கூடம் உருமாறி அமைவதில்லை. அது யாண்டும் தன்மயமாயிருக்கிறது. அதற்கு நிகராகப் பிரபஞ்சமனைத்துக்கும் கூடம் அல்லது ஆதாரமாயிருக்கும் அன்னை பராசக்தியின்மீது பிரபஞ்ச வியவகாரங்கள் எவ்வளவு வந்து மோதினுலும் அவையாவுக்கும் ஆதாரமாயிருக்கும் அன்னை பராசக்தி யாண்டும் தன் பாரமார்த்திகப் பெருநிலையினின்றும் இம்மியளவும் பிசகுவதில்லை. இத்தனைவிதக் காரணங்களை முன்னிட்டு அன்னை பராசக்தி கூடஸ்தா என இயம்பப் பெறுகிருள்.

897. குலரூபிணி குலரூபிணீ — குலத்தின் வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

குலம் என்னும் சொல் கூட்டம் எனப் பொருள்படுகிறது. குருகுலம் என்னும் பதம் ஆச்சாரியனையும், அவனைச் சார்ந்துள்ள மாணக்கர்களின் தொகையையும் குறிக்கிறது. அம்பிகையின் வழிபாட்டில் பலப்பல முறைகள் இருக்கின்றன. அம்முறைகள் யாவும் பாஹிய பூஜை, மானச பூஜை ஆகிய இரண்டு வித முறைகளில் அமைகின்றன. அவைகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. மானச பூஜைக்குப் புறத்தில் தருகிற வடிவம் பாகிய பூஜை எனப்படுகிறது. புறத்தில் தருகிற வடிவத்துக்கு உட்பொருளாய் அமைந்திருப்பது மானச பூஜையாம். பாஹிய பூஜையில் வழிபடு தெய்வத்துக்குப் புறத்திலே ஒரு சின்னம், ஒரு சக்கரம், அல்லது ஒரு மூர்த்தி அமைக்கப்பெறுகிறது. மானச பூஜையில் இந்தச் சின்னத்தின் உட்கருத்து அல்லது மூர்த்தியின் சூட்சுமவடிவம், பாவனையின் மூலமாக அமைக்கப்பெறுகிறது. பாஹிய பூஜையில் அந்த மூர்த்தி சுத்த ஜலத்தைக் கொண்டு நீராட்டப்பெறுகிறது. அதே வழிபாடு மானச பூஜையாக நிகழ்கிறபொழுது யோகியின் சஹஸ்ராரத்தினின்று சொட்டுகிற அமிர்தத்தைக் கொண்டு ஹ்ருதய கமலத்தில் எழுந்தருளப்பண்ணியிருக்கும் மூர்த்திக்கு அபிஷேகம் நிறைவேறுகிறது. பாஹிய பூஜையில் வழிபடுகிற தெய்வத்துக்குப் புறத்தில் நல்லஆசனம் ஒன்று வழங்கப்படுகிறது. மானச பூஜையில் ஹ்ருதயகமலமே வழிபடு தெய்வத்துக்குரிய ஆசனமாக அமைகிறது. பாஹிய பூஜையில் வழிபடுகிற மூர்த்திக்கு வஸ்திரத்தைக் கொண்டு ஆடைஅணிவிக்கப்படுகிறது. மானச பூஜையில் உள்ளத்தினுள்ளேயிருக்கும் திக்கு அல்லது வெட்டவெளியே அம்பரமாக அல்லது ஆடையாக அணிவிக்கப்படுகிறது. இக்காரணத்தை முன்னிட்டே அம்பிகைக்குத் திகம்பரீ என்னும் பெயர் வந்துள்ளது. பாஹிய பூஜையில் ஆத்ம சாதகனுக்கு உகந்த சுத்தமான ஆகாரம் நைவேத்யமாகப் படைக்கப்படுகிறது. மானச பூஜையிலோ உணவை உண்டு உயிர் வாழ்ந்து வருகின்ற ஆத்ம சாதகன் தன்னுடைய உயிர் வாழ்க்கையையே நைவேத்யமாகப் படைக்கிருன். பாஹிய பூஜையில் ஏற்றி வைக்கும் தீபத்துக்கு நிகராக மானச பூஜையில் நல்லறிவு அல்லது விவேகத்தைத் தீபமாகச் சாதகன் பயன்படுத்துகிருன். பாஹிய பூஜையில் கையாளும் தூபத்துக்கு நிகராகத் தன்னுடைய பிராணனைத் தூபமாக மானச பூஜையில் அவன் பயன்படுத்துகிருன். பாஹிய பூஜையில் கையாளும் தூய மலர்களுக்கு ஏற்ப நல்லெண்ணங்களை மலர்களாக மானச பூஜையில் அவன் சமர்ப்பிக்கிருன். பாஹிய பூஜையில் பயன்படுத்தப்படும் மணியோசைக்கு நிகராக மானச பூஜையில் அனுஹத தொனியை ஓசையாக அவன் பயன்படுத்துகிருன். இங்ஙனம் குலம் என்னும் சொல்லுக்கு இலக்காகக் குடும்பப் பரம்பரைகளில் அன்னை பராசக்தி வழிபாடு, வழிமுறை வழிமுறையாக வந்திருக்கிறது. அந்த வழிபாட்டு மயமாக அன்னை இலங்குகிருள்.

பாவ்ஹாரி பாபா

(சுவாமி விவேகானந்தர்)

சமயத்தில் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் தாற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டுத் துன்புறும் உலகுக்குத் துணைபுரியும் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் புத்தர். ஜீவபோதத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பது பொருளற்றது என்னும் பேருண்மையை அறிந்துகொள்வதற்கு அவர் பல ஆண்டுகள் தீவிரமாக முயன்றார். சுயநலமற்றுத் தளர்வுறாது பணிபுரிவதில் புத்தரைக் காட்டிலும் மேலானவர் ஒருவரை நாம் கற்பனை பண்ண முடியாது. உண்மைகளை அறிந்து கொள்வதற்கு அவரைவிட அரும்பாடுபட்டவர் யார்?

இலட்சியத்துக்கேற்ற முயற்சி வேண்டும். இலட்சியம் பெரியதாகுமளவு எடுத்துக்கொள்ளும் முயற்சியும் பெரியதாகிறது. இவ்வுண்மை எல்லாக் காலத்திற்கும் பொருந்தும். முன்பே ஆலோசித்துத் தீர்மானிக்கப்பட்ட திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு ஆழ்ந்த சிந்தனை தேவையில்லை. ஆழ்ந்து சிந்தித்த மேலாம் எண்ணங்களே மனதில் மேலான தூண்டுதல்களாக எழுகின்றன. சிறு செயல்களைச் செய்வதற்குக் கோட்பாடு அல்லது கொள்கை போதுமானது. ஆனால் நம் உள்ளத்தில் எண்ணத்தைத் தூண்டுவதற்குக் கொள்கை மட்டும் போதாது. அதற்கு ஒரு பெரிய சக்தி வேண்டும்.

நிகழும் செயல்கள்—கற்பனை கலவாத நிகழ்ச்சிகள் கடுமையானதாகவும், பயங்கரமானதாகவும் இருக்கலாம். உண்மை-வெளிப்படையான உண்மை நெஞ்சின் ஒவ்வொரு நரம்பையும் முறித்து விடுவதாக இருக்கலாம். அவ்வுண்மையை அடைவதற்கு உண்மையான சுயநலமற்ற முயற்சி தேவை. அவ்வுண்மையை அடைவதற்கு உடலின் ஒவ்வொரு உறுப்பையும் இழக்க வேண்டி வரலாம். கீழான நிலையில் செயல் புரிந்து கொண்டிருக்கும் மனதை மேலானதாக மாற்றி அமைப்பதற்கு மேற்கூறிய கடும் முயற்சி தேவைப்படுகிறது. எண்ணநிலையில் சூக்ஷ்மமாக இருப்பது காலாந்தரத்தில் ஸ்தூலமாகச் செயலுக்கு வருகிறது. புலனுக்கு எட்டாத விஷயம் புலனுக்கு எட்டுகிற வடிவம் எடுக்கிறது. எண்ணத்தளவில் இருந்தது செயல்அளவுக்கு வருகிறது.

எண்ணம் காரணநிலையில் இருக்கிறது. எண்ணம் செயலாக வடிவெடுக்காதிருப்பதற்கு ஆயிரக்கணக்கான தடைகள் இருக்கலாம். ஆனால் விரைவிலோ காலம் தாழ்ந்தோ எண்ணம் செயலாக வடிவெடுத்தே தீரும். வலுவுடைய எண்ணம் ஒன்று தற்சமயம் சக்தியற்றதாக இருப்பினும் அது உலகில் செயலாக வடிவெடுக்கும் சிறந்த நாள் ஒன்று வரும். புலன் இன்பத்தைத் தருகின்ற ஒவ்வொன்றிற்கும் நாம்கொடுக்கின்ற மதிப்புச்சரியானதன்று.

கீழ்நிலையில் இருக்கின்ற உயிர்கள் புலன்களில் அதிக இன்பம் பெறுகின்றன. புலன் இன்பத்துக்குத்தான் அவைகள் வாழ்கின்றன. விலங்கு நிலையில் இருந்து கொண்டு புலன் இன்பத்தை அனுபவிக்கும் மனிதனை அதிலிருந்து மீட்டெடுத்து அதற்கும் மேலான இன்பத்தைப் பெறுவதற்கு ஆயத்தப்படுத்தும் ஆற்றலே நாகரிகம் எனப்படும். புறத்தில் சுகம் தரும் சொகுசான வாழ்க்கையில் நாட்டம் கொள்ளாது, மனதை உயர்த்தும் விஷயங்களில் நாட்டம் கொள்ளச் செய்வது நாகரிகம் ஆகும்.

புலன் இன்பத்துக்கு மேலான வாழ்வு உண்டு என்பதை மனிதன் இயல்பாகவே அறிந்திருக்கின்றான். அது எத்தகையதென்று எடுத்துக்கூற அவனுக்கு இயலாது. அந்த மேலானவாழ்க்கையைக்குறித்து அவன் முரண்பட்ட வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கிறான். தன் சக்திக்கு மீறியது ஒன்று உண்டு என்பதை அவன் வாழ்க்கையில் உணர்கிறான். அந்தச் சக்தியால் உந்தப்பட்டு அவன் சூன்யக்காரனுக்கும், மருத்துவனுக்கும், மந்திரவாதிக்கும், பூசாரிக்கும், விஞ்ஞானிக்கும் பயத்துடன் வணக்கம் செலுத்துகிறான். புலன் இன்பங்களைப் புறக்கணித்துவிட்டு மனதை மேல்நிலையில் எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் வைத்திருக்கிறானோ அந்த அளவுக்குத்தான் அவன் ஆன்மீகத்தில் முன்னேறியவனாக இருப்பான்.

மனிதனுடைய சுவாசகோசம் தூய எண்ணம் என்னும் பிராண வாயுவை உட்கொள்ள வேண்டும். யாண்டும் அவன் உள்ளம் உயர்ந்த எண்ணத்தில் உலவிக்கொண்டிருக்கவேண்டும்.

பண்பட்ட மனிதன் சுகபோகங்களுக்காகக் காலத்தைச் செலவழிப்பதில் அருவருப்புக் கொள்கின்றான். வாழ்க்கைக்கு அவசியமான காரியங்களைச் செய்வதில் ஆரம்பத்தில் ஆர்வம் கொள்கின்றான். அவன் உள்ளம் உயர்ந்த நிலையை அடைய அடைய அவ்வார்வமும் உயர்ந்து கொண்டே போகும்.

ஆடம்பரப் பொருள்களும் மக்களுடைய கருத்துக்கேற்ப வகைப்படுத்தப்படுகின்றன. புறத்தில் ஒருவன் வைத்திருக்கிற பொருள்கள் அவன் எண்ணம் எத்தகையது என்பதை விளக்குகின்றன.

அக்கினி என்ற ஒரு பூதம் பிரபஞ்சத்தில் பல வடிவங்களில் தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது. வடிவங்களுக்கு அப்பால் அதன் நிலை இருக்கிறது. மகத் என்று சொல்லக் கூடிய மாபெரும் சக்தி ஒன்று உண்டு. அதன் சிறு அம்சம் பூவுலகத்துக்கு இறங்கிவந்து நம் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் செய்துகொள்ள உதவுகிறது. அதன் மற்ற பகுதியினை நாம் அறிந்துகொள்ளவோ, கையாளவோ முடியாது. அதி சூட்சுமமாக அது இருந்துகொண்டு புலன்களுக்கும், மனதுக்கும் எட்டாததாக இருக்கிறது. புலன்களையும், மனதையும் கொண்டு அறிய நாம் எடுத்துக்கொள்கின்ற முயற்சியைக் கண்டு அது எள்ளி நகை ஆடுகிறது. முகமதுதான் மலையை நோக்கிப் போகவேண்டுமே அன்றி, மலை முகமதை நோக்கி வராது என்பது ஒரு பழமொழி. அங்ஙனம் நாம்தாம் அப்பொருளை நோக்கிப்போகவேண்டும். அப்பொருள் நம்முடைய நிலைக்குக் கீழ் இறங்கி வராது. அதன் பேரழகை நாம் அனுபவிக்கவேண்டுமென்றால் அதன் நிலைக்கு நம்மை உயர்த்திக்கொள்ள வேண்டும். அந்தப் பேரொளியில் நாம் கலக்கவும், அதன் அலகிலா விளையாட்டில் நாம் கலந்து விளையாடவும் நம்மை நாம் அவ்வுயர் நிலைக்கு உயர்த்திக்கொள்ளவேண்டும்.

ஞானம் பல அற்புதங்களை நமக்கு விளக்குகிறது. விலங்கு நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு ஞானம் நம்மை எடுத்துச் செல்கிறது. எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்தது ஆகுமோ அந்த வாலறிவினிடத்தில் நம்மை எடுத்துச் செல்வது அறிவு ஆகும். இக்கருத்தை வள்ளுவரும்,

> கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்.

என்று பகர்ந்துள்ளார். அப்பேரறிவினிடத்திலிருந்துதான் உயிர்களுக்கு அறிவு வருகிறது. மனிதன் தன்னிடத்திலுள்ள குறைகளையெல்லாம் போக்கி நிறைநிலை அடைவதற்கு அப்பேரறிவு உதவுகின்றது. அப்பேரறிவே முடிந்த ஞானம் என்று போற்றுகின்ற நாடு சிறந்த நாடாகின்றது.

தத்துவம் முழுவதையும் செயல்படுத்திக் காட்ட முடியாது. தத்துவம் ஒருநாளும் அழிந்துபோய்விடுவதில்லை. தத்துவத்திலிருந்து ஒருநாளும் பிசகிப் போகக்கூடாது. தத்துவத்தை நோக்கித் தெளிவாகச் சென்றுகொண்டிருக்கவேண்டும். தத்துவத்தை நோக்கி நாம் மெதுவாகப் போய்க்கொண்டிருக்கலாம். ஆனால் தத்துவத்தை விட்டுமட்டும் பிசகிப் போகக்கூடாது. தத்துவத்தை நாம் மறக்க முயன்றாலும் அது நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

நம் வாழ்க்கை இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். நாம் தத்துவ ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருப்பவர்களாக இருப்பினும், நித்திய வாழ்க்கைக்குரிய கடினமான கடமைகளைச் செய்துகொண்டிருப்பவர்களாக இருப்பினும் நம் வாழ்வில் லட்சியம் ஊடுருவி இருக்கவேண்டும். தத்துவம் நம் செயலின் மூலம் ஒளிர்ந்துகொண்டிருக்கவேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ அதன் பிரகாசத்தால்தான் நாம் செயல்புரிந்து வருகின்றோம். ஒவ்வொரு பொருளும் அடையும் மாறுதலும், விகாரமும், உயர்வும் அதன் மூலமாகத்தான் நிகழ்கின்றன. மெய்ப்பொருள் தான் நம்மை இந்த நிலைக்கு உருவாக்கி இருக்கிறது. இனிமேல் நாம் அடையும் நிலையும் அந்த இலட்சியப் பொருளையே பொறுத்திருக்கிறது. அந்த இலட்சியம் நம்மிடத்தில் மறைந்திருக்கிறது. நமக்கு வரும் இன்ப துன்பங்களின் மூலமாகவும், உயர்ந்த காரியங்கள்

தாழ்ந்த காரியங்கள் மூலமாகவும், நல்லகுணங்கள், கெட்டகுணங்கள் மூலமாகவும் அந்த லட்சியப்பொருளை நாம் ஒருவாறு உணர்கிறோம்.

குறி இத்தகைய சக்தி உடையதாக இருக்கிறதென்றால் குறியை அடைவதற்குரிய நெறியும் சக்தியில் குறைந்ததன்று. குறியைப் பற்றிய உண்மையை நெறியின் மூலம் அறிகிறோம். நெறியின் மூலமாகக் குறிக்கோளை அடைகின்றோம். நெறி அல்லது சாதனை முதிரும்பொழுது குறி அல்லது லட்சியம் அடையப் படுகிறது. குறி மிகப் பெரியதாக இருக்கலாம். சாதனை சிறிது சிறிதாகக்குறியளவு விரிகிறது. சாதனையின் தொகுப்பைக் குறி எனலாம்.

குறி எத்தகைய சக்திவாய்ந்தது என்பதைச் சாதனையில் அறியலாம். சாதனையின் மூலமாகத்தான் குறி நம்மீது எத்தகைய செயல் புரிந்து வருகிறது என்பதை அறிய முடியும். சாதனையின் மூலம் குறியைப் பொறி புலன்களுக்கு எட்டுகின்ற நிலைக்குக் கொண்டு வந்து அதைக் கிரஹிக்க முயலுகின்றோம். சாதனையின் மூலம் குறியை அடைவதற்கு நம்மை உயர்த்திக்கொள்கிறோம். சாதனை . தீவிரமாகும்போது குறியை அடையலாம் என்ற நம்பிக்கை உண்டாகிறது. அந்த நம்பிக்கை நம்மை மேலும் ஊக்குவிக்கிறது.

ஒருவன் லட்சியத்தைக் குறித்து மிக அழகாகப் பேசுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பேசுபவனைக்காட்டிலும் குறிக்கோள் இத்தகையது என்பதைத் தன் வாழ்வின்மூலம் விளக்கிக் காட்டுபவன் சக்தி மிகப் படைத்தவன் ஆகின்றான்.

மானுட வடிவெடுத்து வந்து தத்துவங்களை வாழ்க்கையின் மூலம் இயன்றவளவு விளக்கிக் காட்டுகின்றபொழுதுதான் மக்களுக்குத் தத்துவம் விளங்கும். இல்லாவிட்டால் தத்துவம் வெறும் மூளைக்குரிய பயிற்சியாகப் போய் விடும். தத்துவத்தைச் சிறிதளவு செயலுக்குக் கொண்டு வந்தவர்களை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

பெரும்பாலான மக்கள் கருத்துலகில் வாழ்வதோடு நின்றுவிடுகிறார்கள். கருத்துக்களைச் செயலுக்குக் கொண்டுவருவதற்கு அவர்களால் இயலுவதில்லை. யாரோ சிலர் உயர்ந்த லட்சியங்களைச் செயலுக்குக் கொண்டுவரும் சக்தியைப் பெறுகிறார்கள். நம்மில் பலர் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றல் பெற்றிருக்கும்போது செயல் புரியும் ஆற்றலை இழந்து விடுகிறோம். பெரிய அளவில் செயல் புரியும்பொழுது சிந்திக்கும் ஆற்றலை இழந்து விடுகிறோம்.

இக்காரணத்தினால் மிகச் சிறந்த சிந்தனையாளர்களுள் பெரும்பாலர் தங்களுடைய சிந்தனைகளைச் செயலுக்குக் கொண்டுவராமல் அவற்றைச் செயலுக்குக் கொண்டு வருவதை எதிர் காலத்தில் வருபவருக்கு விட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைகளைச் செயலுக்குக் கொண்டுவரும் ஆற்றல் உடையவர்கள் தோன்றும்வரை அச்சிந்தனைகள் செயல்படக் காத்திருக்கவேண்டியவைகளாகவிருக்கின்றன. நாம் இதைச் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது அர்ஜுனனுக்குத் தேர் செலுத்தும் கண்ணன் காட்சி வருகின்றது. போரிடும் இரண்டுபடைகளுக்கு நடுவே கண்ணன் தேரைநிறுத்தித்தன் இடக்கையால் துடுக்கு மிகுந்த குதிரைகளை அடக்கிப் பிடித்துக்கொண்டிருக்கின்றான். கவசம் அணிந்த போர்வீரன் போன்று பரந்த படையின்மீது பார்வையைச் செலுத்தி நிற்கின்றான். இரண்டு படைகளின் அணிவகுப்பை மதிப்பிடுகின்றான். அதே சமயத்தில் சோர்ந்து நிற்கும் அர்ஜுனனுக்குக்கர்மத்தின்ரகசியத்தை எடுத்துப் புகட்டுகின்றான். "செயல்களுக்கு இடையில் ஓய்வு பெறுபவன் எவனோ, ஓய்வுக் கிடையில் செயல்புரிபவன் எவனோ அவனே மக்களுள் ஞானி ஆகின்றான்; அவனே யோகி ஆகின்றான். அவனே எல்லாக் கர்மங்களையும் செய்ய வல்லவனாகின்றான்" என்ற உபதேசம் அவன் வாயிலிருந்து வருவதைக்கேட்கின்றோம்.

இந்நிலைதான் இலட்சியம் பூர்த்தி அடைந்த நிலையாகும். ஆனால் இதையாரும் அடையமுடிவதில்லை. ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு பண்பு மேலோங்கி இருக்கும். அப்பண்புகளை எல்லாம் தொகுத்துத்தான் நாம் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும். சமயத்துறையில் தியான சித்தர்கள் இருக்கிறார்கள்; மன்னுயிர்களுக்கு உதவிபுரியும் செயல் வீரர்கள் இருக்கிறார்கள்; அஞ்சாமையோடு தங்களை அறியும் தீரர்கள் இருக்கிறார்கள்; அடக்கமும், பணிவும் பக்தியும் உடைய பக்தசிகாமணிகள் இருக்கிறார்கள். (தொடரும்)

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (281) பகலில் ராகுகாலம், குளிகை காலம் உண்டு. இரவில் கிடையாது, ஏன்? பகலில் நேரம் பார்த்துத் தான் செய்யவேண்டுமா?

கவனிப்பதற்கு ஏராளமாக அலுவல்கள் படைத்திருப்பவர்களுக்கு ஒவ்வொரு கணப் பொழுதும் நல்ல நேரமே. அனுகூலமானநேரம், பிரதிகூலமான நேரம் என்னும் பாகுபாடு,செய்வதற்கு வேலை ஒன்றுமில்லாது சோம்பித்திரிபவரிடத்துப் பெரிதும் காணப்படும். மருத்துவ நிபுணர் ஒருவர் இருக்கிறார். அவர் ஆங்காங்குச் சென்று நோய்வாய்ப்பட்டிருக்கிறவர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார். அழைக்கிற இடங்களுக்கெல்லாம் செல்ல அவருக்கு அவகாசம் கிடைப்பதில்லை. நோயாளிகளை முறையாகக் கவனிப்பதால் பலபேர் அவரைத் தேடிப்பிடித்து அவரவர் வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர். அத்தகைய டாக்டருக்குக் குளிகைகாலம், ராகுகாலம் கவனிக்க நேரமில்லை. அப்படிக் கவனிப்பதும் அவசியமன்று.

பக்தன் ஒருவன் ஓடியோடிச் சமுதாயத்துக்குப் பணிவிடை பண்ணுகிறான். ஆருயிர் சேவையை ஆண்டவன் சேவையாகக் கருதி முழுமனதோடு அவன் ஆற்றி வருகிறான். அத்தகைய பக்தனுடைய வருகையை மக்களும் ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்றனர். மகிழ்வுடன் அவனோடு உறவாடுகின்றனர். இத்தகைய இணக்கம் வைப்பதற்கு அனுகூலமான நேரம், பிரதிகூலமான நேரம் என்ற பாகுபாடு இல்லை. வாய்க்கின்ற நேரமெல்லாம் நல்ல நேரமே.

ஆங்காங்கு வீடுகளில் அமைந்திருக்கின்ற தொலைபேசியும், மின் விளக்கு அமைப்பும் அடிக்கடி கெட்டுப் போகின்றன. அவற்றை முறையாகப் பழுது பார்க்கின்றவன் ஓடியோடிப் பழுதுபட்டிருக்கும் அந்த அமைப்புக்களைச் சரிப்படுத்துகின்றான் அப்படிச் செய்கின்றவனுக்கு நல்ல நேரம், கெட்டநேரம் பார்க்க அவகாசமில்லை.

வீடு வீடாகச் சென்று உணவுப் பொருள்களை விற்கின்றவர்கள், அவசர அவசரமாக ஓடி ஆங்காங்குத் தேவையாயிருக்கும் காய்வகைகளையும், ஏனைய பண்டங்களையும் விற்று வருகின்றனர். அத்தகையவர்களுக்கு நல்ல நேரம், கெட்டநேரம் பார்க்க அவகாசமில்லை.

தபால்காரன் ஓடியோடி வீடுகளில் கடிதங்களைப் பட்டுவாடா பண்ணுகின்றான். அவனுக்கு எல்லா நேரமும் நல்ல நேரமே. ராகு காலத்தில் கடிதம் தரலாகாது என்னும் எண்ணம் அவனுக்கு வருவதில்லை. அப்படி எண்ணம் வந்தால் அவன் உபத்திரவத்துக்கு ஆளாவான்.

தொழிற்சாலை ஒன்றில் தீப்பற்றிக்கொண்டு எங்கும் அதிவேகமாகத் தீ பரவுகிறது. தீ அணைக்கிற கூட்டத்தாருக்கு அந்த அவசரச் செய்தி எட்டுகிறது. நல்ல நேரம் பார்த்துப் போகலாம் என்று அக்கூட்டம் காத்திருப்பதில்லை. நேரத்தைப் பொருள்படுத்தாது தங்கள் கடமையைச் செய்ய அக்கூட்டத்தினர் பறந்தோடுகின்றனர்.

சுருங்கச் சொல்லின் குளிகைகாலம், ராகு காலம் எல்லாம் வீண்பொழுது போக்குபவர்களுக்கிடையிலேதான் உள்ளன. ஆதலால் இந்த நம்பிக்கையை அறவே ஒதுக்கி வைத்துவிட்டு அவரவர்க்கு அமைந்துள்ள கடமைகளை விரைந்தோடி நன்கு நிறைவேற்றுவதே நன் மக்களுடைய செயலாகும்.

கேள்வி (282): சமாதிநிலையை விளக்கப் பரமஹம்சதேவர் தித்திப்புப் பண்டம் சாப்பிடுவதை உபமானமாக எடுத்துக் கொண்டார். போகப்பொருள் யோகத்துக்கு எங்ஙனம் விளக்கமாகும்?

யோகம், போகம் ஆகிய இரண்டும் இன்பத்தை விளைவிப்பவைகள். இவ்விரண்டினுள் மனிதன் சர்வசாதாரணமாய் அறிந்திருப்பது போகம். யோகத்தைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. தெரியாத ஒன்றை விளக்குதற்கு உபமானமாகத் தெரிந்துள்ள ஒன்றை எடுத்துக்கொள்வதே முறையாகும். கடவுள்பக்தி எத்தகையது என்று பக்தன் ஒருவனிடம் உலகத்தவன் கேட்கிறான். அதற்குப் பக்தன் கொடுக்கின்ற விடையாவது: தாய்ப்பாசம், பெற்றெடுத்த குழந்தை மீது பாசம்,பணத்

தாசை ஆகிய பற்றுதல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தெய்வத்திடத்து வைக்கப்படுகிற பொழுது அது பக்தியாகிறது. பக்தி முக்தியைத் தருகிறது. உலக பந்த பாசம் பிறவிப் பிணியில் ஆழ்த்துகிறது. எனவே பந்தபாசத்தை வளர்ப்பது மற்றதற்கு உபமானமாகாது என்னும் தடையைக் கிளப்பலாகாது.

இந்திரியங்கள் வாயிலாகப் பெறுகிற இன்பம் போகம். இந்திரியங்களை வென்று தூய உள்ளத்திலே ஊற்றெடுத்து வரும் இன்பத்தைப் பெறுவதுயோகம். இந்த யோகத்துக்குப் போகத்தில் வருகிற இன்பத்தைச் சான்றாக எடுத்துக்கொள்ளுதலில் குற்றம் ஏதும் இல்லை. யோகம் பேரின்பம். போகம் சிற்றின்பம். இன்பம் இரண்டிற்கும் பொதுவானது. சிற்றின்பத்தை மட்டும் அறிந்திருக்கிற மனிதனுக்கு அதைச் சான்றாக எடுத்துச் சொல்லுவது ஒன்றே பேரின்பத்தை விளக்குதற்கு உற்ற உபாயமாம்.

கடவுளைத் தேனே, சீனியே, பாகே, தெவிட்டாத ஆனந்தமே எனப் பக்தன் பகர்கிறான். தெவிட்டாத ஆனந்தம் அவன் கொடுத்த விளக்கத்தில்மிகப் பொருத்தமானதாம். தெவிட்டிப் போகிறஇவ்வுலகப் பொருள்களாகிய பாகு, தேன், சீனி ஆகியவைகளோடு பரமனை எப்படி இணைக்கலாம் என்னும் ஆக்ஷேபம் வரலாகாது. அனுபவத்தில் உள்ள ஒன்றை உபமானமாக வைத்துக்கொண்டு இனி அடையப்போகும் பெரிய நிலையை விளக்கிக் காட்டுவது பொருத்தமாம். எனவே போகப் பொருளைச் சான்றாக வைத்து யோகத்தையும் சமாதி நிலையையும் விளக்குதலில் குற்றம் ஏதுமில்லை. இத்தகைய முறையே சமாதி நிலையை விளக்குதற்கு உற்ற உபாயமாம்.

கேள்வி: (283) *தாய் திருடச் சொன்னால் பணியலாமா?*

நல்ல மகன் ஒருவனுக்குத் 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை; தாய் சொல் மிக்க வாசகமில்லை' என்னும் பழமொழி வந்துள்ளது. தாய் தந்தை சொற்படி நடப்பவனே நல்ல மைந்தனாகிறான். திருடுதல் நல்வினையாகாது. அது தீவினை. ஆன்றோர்கள் எல்லாரும் அதைக் கேடு என ஒதுக்கித் தள்ளி வைக்கின்றனர். தன் மகனைப் பார்த்துத் தாய் ஒருத்தி எங்கேனும் சென்று ஏதேனும் பொருளைத் திருடி வா என்று சொல்லுவதில் அவளுடைய பண்பாடு வெளியாகிறது. மகனைத் திருடனாக்குவது அவளுடைய நோக்கமன்று. ஏதேனும் ஒரு விதத்தில் தனக்குத் தேவையாயுள்ள பொருளைப் பெற்றாகவேண்டும். மற்று நேர்மையான முறைகளைக் கையாண்டால் விரும்பிய பொருளைப் பெறுவதற்குக் காலதாமதம் ஆகும். குறுக்கு வழியில் விரைவில் அதைப் பெற அவள் எண்ணங்கொண்டுள்ளாள். அந்த எண்ணம் சரியானதன்று. நல்வழியை அறிந்திருக்கும் மகன் அதை அறியாதிருக்கும் தாயைத் திருத்தியமைக்கக் கடமைப்பட்டிருக்கிறான். திருடுதலில் வருகிற கேடுகளையெல்லாம் எடுத்து இயம்பி நல்வழியில் ஈடுபட்டுத் தேவையாயுள்ள பொருள்களை நிதானமாகப் பெறுவது உத்தமம் என்றும், முறைதவறிப்போய் தனக்குத் தானே பெருங்கேடு சூழ்ந்து கொள்ளுதல் தகாது என்றும், மகன் தாய்க்கு எடுத்துரைத்து அவள் மனதைத் திருத்தியமைக்க வேண்டும்.


பிரஹலாதன் மஹாவிஷ்ணுவின் பக்தனாகப் பிறப்பெடுத்தான். ஆனால் அவன் தந்தை ஹிரண்யகசிபு திருமாலின் ஜன்ம சத்ருவாக இருந்தான். இந்தச் சூழ்நிலையில் பிரஹலாதனுக்குத் தந்தையின் சொற்படி நடக்க இயலவில்லை. ஆயினும் தந்தையைத் தன் வழிக்குத் திருப்ப அவன் பெரிதும் முயன்றான். அவன் முயற்சி பலிதமாகவில்லை. தந்தையின் சொல்லை மீறி அவன் நடந்தது குற்றமாகாது.

கைகேயி தன் மகனாகிய பரதனுக்கு முறை தவறிய பாங்கில் ராஜ்யத்தைப் பெற முயன்றது கிட்டத்தட்ட திருட்டுச் செயலுக்கு நிகரானது. அக்கைகேயியின் சொற்படி ராமன் காட்டுக்குச் சென்றான். ராஜ்யத்தைப் பெறும்படி அவள் சொன்னதைச் சொந்த மகன் பரதன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே எந்த விஷயத்தில் பெற்றோர்க்கு அடிபணிதல் வேண்டும் என்பதையும், எந்த விஷயத்தில் பெற்றோர் விருப்பத்தை நிராகரிக்கவேண்டும் என்பதையும் நன்கு அறிந்திருப்பது அறிஞர்களுடைய செயலாம்.

தாயுமானவர் ஆலயத்தில்

தத்துவ அமைப்பு

இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் சமாதி அடைந்துள்ள இடத்தில் எழுப்பப் பட்டுள்ள ஸ்ரீ தாயுமான சுவாமிகள் கோயிலுக் குள்ளே போனதும் முதலில் மேல் தளத்தில் நாம் காண்பது ஒரு வட்டம். அந்த வட்டத்தி னுள் அறுகோணம் அமைந்திருக்கிறது. இரண்டு முக்கோணங்கள் ஒன்ருேடொன்று இணைந்து அறுகோணங்கள் ஆகின்றன.



அறுகோணங்கள் பரந்த கருத்துக்கள் பலவற்றுக்குச் சின்னமாகின்றன. ஆறுமுகக் கடவுளுக்கு ஆறு கோணங்கள் சின்னங் களாக அமைந்திருக்கின்றன. ஆறுபடை வீடு களுக்கும் அவைகள் அடையாளங்களாக அமைந்திருக்கின்றன. யோக சாஸ்திரத்தில் பகர்ந்துள்ள ஷட் சக்கரங்கள், ஷட் ஆதாரங் கள் ஆகியவைகளுக்கும் அவைகள் அடையா ளங்களாக அமைந்திருக்கின்றன.

ஆறுபடை வீடுகள் என்பன ஆறு தலைமைப் பட்டணங்கள் எனப் பொருள்படுகின்றன. முருகனுக்கு ஆறுமுகங்கள் அமைந்திருப்பது மிகப் பொருத்தமானது. முருகனுக்குச் சிவ குமாரன் என்பது பெயர். உயிர்வகைகள் அனைத்தும் பரிணமித்து மேல் நிலையை எட்டு கின்ற பொழுது அவர்கள் சிவகுமாரர்களாக வும், குமாரிகளாகவும் இலங்குகிருர்கள்.

ஜடநிலை சேதனமாக மாறுகிறது. உயிர் தோற்றத்துக்கு வந்தவுடனே அது ஊறு அல் லது ஸ்பர்ச உணர்ச்சியைப் பெறுகிறது. தொட்டு உணர்தல் வாயிலாகப் புற உலகோடு தொடர்வு உண்டாகிறது. இது முதல் படை வீடு. ஸ்தாவரங்கள் அல்லது நிலைத்திணை படைத்திருப்பது ஸ்பர்ச உணர்ச்சி ஒன்றே யாம். இந்த ஓர் இந்திரியத்தைக் கருவியாகக் கொண்டு நிலைத்திணையாகிய மரம், செடி, கொடி கள் நிறைவாழ்வு வாழ்கின்றன. இந்த அதி சயத்தை மனிதன் நன்கு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்ருன்.

ஸ்தாவரமாய் இருப்பது ஜங்கமமாகப் பரிண மிக்கிறது. ஜங்கமங்களுள் புழுப் போன்றவை களுக்குச் சுவைத்துப் பார்க்கும் வாய் உண்டா கிறது. இது இரண்டாவது படை வீடு. ஸ்தா வரங்கள் உணவுப் பொருளை வேர்கள் வாயி லாகவும், இலைகள் வாயிலாகவும் புற உலகி னின்று பெற்று வருகின்றன. ஜங்கமமாகப் பரிணமித்திருக்கின்ற புழுப்போன்ற ஜந்துக் கள் நா அல்லது வாயைத் துணையாகக் கொண்டே உணவு பெறுகின்றன.


மூன்ருவது படை வீடாக அமைந்திருப்பது ஊறு, சுவை, மோப்பம் ஆகிய மூன்று இந்திரியங்களைக் கொண்டுள்ளதாம். எறும்பு இனம் இந்த மூன்று இந்திரியங்களைக்கொண்டு நிறைவாழ்வு வாழ்கின்றது. அதற்கு மேல் அவைகள் சமுதாய வாழ்வு வாழ்வதும் இயற் கையின்கண் அமைந்துள்ள அற்புதங்களுள் ஒன்ரும். எறும்புவகைகளின் சமுதாய வாழ்க்கையினின்று மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைக் கோட்பாடுகள் பல உள.

நான்காவது படைவீடாக அமைந்திருப்ப தில் நான்கு இந்திரியங்கள் இடம் பெறுகின் றன. உயிர்வகைகளுள் கண் பார்வையுடைய வைகள் ஈ வகைகளுள் சில ஆகின்றன. ஐந்தாம் படைவீடாக அமைவது காது கேட்பதாம். இவ்வைந்தும் ஐந்து படைவீடுகள். புற உலகோடு தொடர்வு கொள்வதற்கும், அதைப் பயன்படுத்துதற்கும், ஐம்பொறிகள்

நன்கு பயன்படுகின்றன. மக்கள் இனம், விலங்கு இனம், பறவை இனம், சில பூச்சி வகைகள் ஐம்பொறிகளைப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் தேனி உலகம் அற்புதமான சமுதாய வாழ்க்கை வாழ்கிறது. சமுதாய வாழ்க்கை வாழ்கிற விலங்குகள், பறவைகள், சிற்றுயிர்கள் இருக்கின்றன. அவை யாவற்றிலும் தலையாய இடம் பெற்றிருப்பது தேன் ஈ உலகம் ஆகும். எறும்பு இனத்தினின்று மனிதன் பாடம் கற்றுக்கொள்வது போன்று, தேன் ஈ உலகினின்றும் அவன் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் உள்ளது.

ஆறுவது படைவீடாக அமைவது நல்லறிவு. நல்லறிவு அலாதியாக மனிதனுக்கே சொந்தமானது. தன் அறிவைப் பயன்படுத்துமளவு மனிதன் மற்ற எல்லா உயிர்களையும் சரியாக ஆராய்ச்சிபண்ணி அவைகளிடத்திருந்து அற்புதமான கோட்பாடுகள் பலவற்றைக் கற்றுக்கொள்வது சாத்தியம். இங்ஙனம் ஐந்து இந்திரியங்களையும், நல்லறிவையும் அடையப்பெற்றிருக்கின்ற மானுட சொருபத்தில் முருகன் இலங்குகின்றான். அவனை ஞானபண்டிதன் எனப் பகர்வது முற்றிலும் பொருந்தும். மானுடசரீரத்தில் அமைந்துள்ள ஷட் சக்கரங்கள் அல்லது ஷட் ஆதாரங்கள் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரம், அனாகதம், விசுத்தை, ஆக்ஞை எனப் பெயர் பெறுகின்றன. இந்த ஆறு ஆதாரங்களும் முருகனுக்குரிய ஆறுமுகங்களாக அமைகின்றன. மக்களுள் முருகனைப்போன்று பண்பாடு அடையப் பெற்றவர்களே சிவ தத்துவத்தைச் சரியாக அறிந்துகொள்ளவும், முறையாக ஆராதனை பண்ணவும் வல்லவர்களாகிறார்கள். இக்கோட்பாடுகள் யாவும் இந்தச் சின்னத்தில் அமைந்திருக்கின்றன.

தாயுமானவர் கோயிலினுள் மேல்தளத்திலே அடுத்து அமைந்திருக்கும் வட்டத்தில் நாம் வணங்கும் தெய்வங்கள் பயன்படுத்தி வருகிற ஆயுதங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வட்டம் அண்டத்தின் சின்னமாகிறது. ஒரு வட்டத்தினுள் நிறைநிலையில் அமைந்துள்ள பலப்பல இடங்கள் வட்டாரங்கள் எனப்படுகின்றன. அவைகளுள் அங்குசமும் பாசமும் அம்பிகைக்கும், கணபதிக்கும் உரிய ஆயுதங்களாம். வேலா



யுதம், சுப்பிரமணிய கடவுளுக்குரியதாகிறது. கதாயுதமும், சக்கரமும் மகாவிஷ்ணுவுக்குரியவைகள் ஆகின்றன. சூலாயுதமோ சிவனார்க்குரியதாம்.

ஆயுதமில்லாதவன் அரைமனிதன் என்பது கோட்பாடு. இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் மற்ற உயிர்வகைகள் தற்பாதுகாப்புக்கும், எதிரிகளைத் தாக்குவதற்கும் ஏற்ற ஆயுதங்களோடு பிறந்திருக்கின்றன. ஆனால் மானுடப்பிறவி ஒன்றுமட்டும் ஆயுதம் ஏதுமில்லாததாகப் பிறப்பெடுக்கிறது. அப்படி இருந்தும் சிருஷ்டிக்கும், பாதுகாப்புக்கும், சம்ஹாரத்துக்கும் ஏதுவான பலப்பல ஆயுதங்களை அமைத்து அவைகளைக் கையாளும் வல்லமை மனிதனுக்கே அமைந்திருக்கிறது. தொழிலுக்கு ஏற்றவாறும், வாழ்க்கைமுறைக்கு ஏற்றவாறும் ஆயுதங்களைக் கையாள அறிந்துகொள்ளாத மனிதன் குறை வாழ்வு வாழ்பவனும். பயிற்சியின் வாயிலாக அந்தந்தக் கலைகளுக்கேற்ற, வாழ்க்கைமுறைக்கேற்ற, தற்பாதுகாப்புக்கேற்ற, ஆக்கிரமிப்புக்கு ஏற்ற ஆயுதங்களைப் பயன்படுத்த மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும்.

இனி அந்தந்தத் தெய்வத்துக்குரிய ஆயுதங்களின் உட்பொருளைச் சரியாக அறிந்துகொண்டு அவைகளைப் பயன்படுத்த வல்லவன் நிறைமனிதன் ஆகின்றான். குறைநிலையிலுள்ள மனிதன் நிறைநிலைக்குத் தன்னைப் பயிற்றுவிப்பதே

சரியான கடவுள் வழிபாடு ஆகிறது. ஆயுத பூஜை என்பதன் உட்பொருளும் இதுவேயாம்.

அன்னை பராசக்தி அங்குசத்தையும், பாசத்தையும் ஆயுதங்களாகக் கொண்டிருக்கிருள். அவைகளுள் பாசம் முதல் இடம் பெறுகிறது. பிறந்த குழந்தை முதல் முதலில் தாய்ப் பாசத்தைப் பெறுகிறது. தாய்க்குச் சேயினிடம் இயல்பாகவே பாசம் உண்டாகிறது. இந்தப் பாசத்தின் வாயிலாகவே பிறந்த குழந்தை நல்ல பாங்கில் பேணி வளர்க்கப்பெறுகிறது. தாய்ப்பாசம் படிப்படியாக உற்ருர் உறவினர் பாசமாகவும், ஏனைய நலன்களின் பாசமாகவும் வடிவெடுக்கிறது. உயிர்களுக்கிடையில் பாசம் இல்லாதுபோனல் வாழ்க்கை அனர்த்தமாய்ப் போய்விடும். நல்வாழ்க்கைக்குத் துணைபுரிகிற உயிர்களிடத்தும், வாழ்க்கை வசதிகளிடத்தும் பாசத்தை வேண்டியவாறு வளர்த்தல் அவசியமாகிறது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே அன்னை பராசக்தி 'ராக ஸ்வரூப பாசாட்யா' என்னும் நாமம் பெற்றுள்ளாள். இந்நாமத்தைத் தொடர்ந்தே குரோத ஆகார அங்குச உஜ்வலா என்னும் நாமம் வந்துள்ளது. உயிர் வகைகள், வாழ்க்கைக்குத் துணைபுரிகிற உயிர்களிடத்தும், சூழ்நிலைகளிடத்தும் பற்று வைப்பதற்கு நிகராக, உயிர் வாழ்க்கைக்கு இன்னலை விளைவிக்கும் உயிர்களிடத்தும், வாழ்க்கைக்குப் பிரதிகூலமாய் இருக்கிற சூழ்நிலைகளிடத்தும் வெறுப்பு வைத்துப் பழகவேண்டும். எதிரிகளை வெறுத்துப் பழகுதல் வாழ்க்கைக்கு இன்றியமையாத கோட்பாடாம். உயிர்வகைகள் அனைத்துக்கும் சத்ருக்கள் அமைந்திருக்கின்றன. சத்ருவை முறையாகச் சமாளிக்க வேண்டும். சத்ருவைச் சமாளிக்கத் தெரியாத உயிர்கள் அழிந்துபட்டுப் போகின்றன. ஆக, பொருத்தமான உயிர்வகைகளோடு ஒட்டிவாழ்வதும், கேட்டை விளைவிக்கின்ற உயிர்வகைகளைத் தாக்கிப் பழகுவதும் நல்ல பயிற்சியாம்.

இனி, அம்பிகையின் செல்வனுகிய கணபதியும் அங்குசம், பாசம் என்னும் இந்த இரண்டு ஆயுதங்களைப் பயன்படுத்துகிருன். அப்படிப் பயன்படுத்துதலில், அம்பிகை பயன்படுத்தும் முறையினின்று சிறிது மாறுபாடு உளதாம். கணபதிக்கு விக்கினேசுவரன் என்பது மற்ருெரு பெயர். விக்னம் அல்லது தடைக்கு அவன் ஈசனுகை இருக்கிருன். மனிதனுக்குக் கேடுபண்ணுகிற முயற்சிகளுக்குத் தடைபோடுகிருன். மற்று மனிதனுக்கு நலன்களை விளைவிக்கும் முயற்சிகளுக்கு இடைஞ்சலாய் இருக்கிற விக்கினங்களை நீக்குகிருன். பயன்படுகிற நல்ல முயற்சிகளில் மனிதன் பந்தப்பட்டிருக்கவேண்டும். அடுத்தபடியாக யானைப் பாகன் அங்குசத்தைக் கையாண்டு யானையை, 'இவ்வழியில் போ, இவ்வழியில் போகாதே' என்று நடாத்துவது போன்று, கணேசன் தன்னை வாழ்த்தும் ஜீவர்களை நல்வழியில் நடாத்தி, கெட்ட வழியினின்று பிரிக்கின்ருன்.


முருகன் கையாளுவது வேல். அவன் வெற்றிவேலன் என்று அழைக்கப் பெறுகிருன். வேல் ஞானம் அல்லது நல்லறிவின் சின்னம். மானுடன் ஒருவன் நல்லறிவு படைத்தவனுய் இருந்து நல்வழியில் செல்வானுகில் எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றி பெறுகிருன். வெற்றிவேல் உற்றதுணை என்ற கோட்பாடு இதினின்று வருவதாயிற்று.

கதாயுதம், சக்ராயுதம் மகாவிஷ்ணுவுக்கு உரியவைகளாம். திருமாலுடைய சக்ராயுதம் அல்லது தர்மசக்கரம் சதா சுழன்றுகொண்டிருக்கிறது. இயற்கையின் நடைமுறை அறநெறி பிறழ்வதில்லை என்பது அதன் கோட்பாடு. மனிதன் எச்செயலைச் செய்தாலும் அது தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். கதாயுதம் தண்டனையின் அறிகுறி. தண்டனைக்கு ஆளாகின்றவன் வருந்துகிருன். மனிதனுக்கு எப்பொழுதெல்லாம் துன்பம் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் அவன் தர்மத்தினின்று எங்கேயோ பிசகிப்போயிருக்கிருன் என்பது வெளிப்படை. உடனே சிந்தித்துப் பார்த்து மனிதன் தான்செய்த பிழையினின்று பின் வாங்கி தன்னைத் திருத்திக்கொள்வானுகில், உடனுக்குடனே துக்க நிவர்த்தியும், சுகப்ராப்தியும் அவனுக்கு வந்து வாய்க்கின்றன. உயிர்களை நல்வழியில் காப்பாற்றுவது தர்மம். அதற்குச் சின்னம் சக்கரம். உயிர்களைத் தீயவழியினின்று தண்டனையின் வாயிலாகத் திருத்தி அமைப்பது திருமாலின் செயல். அதற்குச் சின்னமாய் அமைந்திருப்பது கதை.

சிவனுர் கையாளுவது சூலாயுதம். கார்த்தி

கேயன் கையாளுவது வேலாயுதம். வேலாயுதம் இகலோக வாழ்க்கைக்குரிய நல்லறிவுக்குச் சின்னம். தந்தையாகிய சிவனாருடைய சூலாயுதம் பரஞானத்துக்குச் சின்னம். பிறவிப் பிணியைப் போக்கவல்லது பரஞானம். அதன் சின்னமாய் அமைந்திருக்கும் சூலாயுதம் ஆத்ம போதத்தை வழங்க வல்லது. எனவே சிவனாருடைய சூலாயுதத்துக்கு இலக்கு ஆகின்ற ஜீவர்கள் பிறவிப் பெருங்கடலைத் தாண்டுகின்றனர்.

இந்தப்பாங்கில் அந்தந்தத் தேவதைக்கு அமைந்துள்ள ஆயுதங்களின் உட்பொருளை உள்ளவாறு உணர்ந்து, அவைகளை நன்கு பயன்படுத்த அறிந்துகொள்ளுதல் மானுடப்பிறவியின் முக்கியமான நோக்கமாம்.



தாயுமான சுவாமி கோயிலின் மேல் தளத்தில் மூன்றுவதாக அமைந்திருப்பது கேடயம். அந்தக் கேடயத்தினுள் இன்னிசைக் கருவிகள் சில இடம் பெற்றிருக்கின்றன. அவைகளுள் புல்லாங்குழல் கண்ணனுக்கு உரியது. இன்னிசைக் கருவிகளுள் மிக எளிதில் அமைக்கப் பெறுவது குழல். இதற்கு வேணு என்பதும், முரளி என்பதும் ஏனைய பெயர்களாம். குழலை ஊதிக் கண்ணன் உயிர்வகைகள் அனைத்தையும் இப்பிரபஞ்சத் துயரங்களினின்று விடுவித்துப் பரமானந்தத்தில் திளைத்திருக்கச்செய்தான். அதன் வாயிலாக உயிர்களுக்கிடையிலுள்ள ஒற்றுமையையும் அவன் விளக்கிக் காட்டினான். குழலோசையைக் கேட்டுப் பாம்பும், மயிலும் தங்கள் பகைமையை மறந்து விட்டன. பசுவும், புலியும் உடல் உணர்ச்சிக்கு அப்பால் சென்று ஆனந்தத்திலே ஒன்றுபட்டிருந்தன. இன்னிசை வேற்றுமையை விலக்குகிறது; ஒற்றுமையை வளர்க்கிறது. கலைமகள் கையாளுவது வீணை. இன்னிசைக் கருவிகளுள் இது பழகுதற்கு மிகவும் கடினமானது. ஆனால் வீணை பக்கவாத்தியமாக அமையுமாகில் சங்கீதம் என்னும் கலை உயிர் பெற்று ஒளிர்கிறது. இயல்பாக மனிதனுக்கு அமைந்துள்ள இசை ஞானத்தைத் தெளிவுறப் பண்ணுவது வீணை. பிறகு மகாவிஷ்ணுவுக்கு அமைந்துள்ள சங்கும், சிவனாருக்கு அமைந்துள்ள உடுக்கை அல்லது டமரும், நாதபிரமத்துக்குச் சின்னங்களாகின்றன. வித்துஇன்றி செடி முளைப்பதில்லை. பிரபஞ்சம் என்னும் செடிக்கு வித்தாக இருப்பது நாதம் அல்லது ஓசை. ‘ஓசை, ஒலி எல்லாம் ஆனாய் நீயே’ என்பது ஆப்த வாக்கியம். ஓசையை உண்டு பண்ண வல்லவனாக இருக்கிற மனிதன் இறைவனுடைய திருநாமம் என்னும் ஓசையை உண்டு பண்ணுவானாகில், அதன் வாயிலாக அவன் பரம்பொருள் மயமாகின்றான். அதற்குச் சான்றுகள் இரண்டு எடுத்துக்கொள்ளுவோம்.

“ சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே.”

“ குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.”

ஆக ஓசையை உண்டுபண்ண வல்லவனாய் இருக்கிற மானுடன் இறைவனுக்கு மந்திரங்களாக அமைந்துள்ள சொற்களை ஜபித்துப் பழகுவானாகில் அவன் இறுதியில் இறைவனுடன் ஒன்றுபடுவது திண்ணம். (தொடரும்)

அமரநாத யாத்திரை

(232ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

வைஷ்ணவி ஆலயத்துக்கு நாங்கள் சென்ற தினம் கூட்டம் மிகக் குறைவாக இருந்தது. சிலர் மட்டும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். நடைபாதை செங்குத்தாக உள்ளது. படிக்கட்டுகள் வசதியாக அமைந்துள்ளன. ஆங்காங்கே சிற்றுண்டிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பாதி உயரம் சென்றதும் சிற்றுண்டிச் சாலைகள் அதிகம் உள்ளன. யாத்ரீகர்கள் தங்குவதற்குச் சத்திரம் ஒன்று பெரியதாக உள்ளது. அங்கிருந்து பார்த்தால் சுற்றிலும் பசுமை வாய்ந்த மரங்கள் நிறைந்த மலைக்குன்றுகள் அரண்போன்று அமைந்துள்ளவை காணற்கினிய காட்சியாக உள்ளது.

ஆறு மைல் தூரம் மேலே சென்றோம். பாதை நன்கு செப்பனிடப்பட்டுள்ளது. சுமார் மூன்று மைல் தூரம் தார்சாலை போட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு சாலை போடும் வேலை நடைபெற்று வருகின்றது. வழிநெடுகக் குடிநீர்க்குழாய்கள் வைத்திருக்கிறார்கள். பத்து மைல் சென்ற உடன் மலை உச்சியை அடைகின்றோம். அங்கிருந்து பாதை கீழ் நோக்கிச் செல்கின்றது. இரண்டு மைல் தூரம் கீழ் நோக்கிச் சென்ற பிறகு பெரிய கட்டடங்கள் உள்ள இடத்தை அடைகிறோம். நான்கு மாடிக் கட்டடங்கள் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட அறைகள் கொண்டனவாக அங்குக் கட்டி வைத்திருக்கிறார்கள். யாத்ரீகர்கள் அவற்றில் இலவசமாகத் தங்கலாம். உணவு வசதியும் உண்டு.

நாங்கள் குகைக் கோயிலை அணுகியபோது கூட்டம் மிகக் குறைவாக இருந்தது. அங்கு ஓர் அருவியிலிருந்து குழாய் பொருத்திக் குளிப்பதற்கு வசதி செய்துள்ளார்கள். அதில் எல்லாரும் குளித்தோம். குளித்துவிட்டுக் குகைக் கோயிலை அடைந்தோம். அங்குள்ள காவலர், "இப்பொழுது கூட்டம் இல்லை, சீக்கிரம் போய்த் தரிசனம் செய்யுங்கள்" என்று சொன்னார். குகை அமைப்பு மிகக் குறுகிய வாயில் உடையதாக உள்ளது. அதில் முப்பது அடி தூரம் படுத்துக்கொண்டு ஊர்ந்து செல்ல வேண்டியுள்ளது. ஓரத்தில் சிறிய ஓடை போல ஊற்றுநீர் ஓடிக்கொண்டிருக்கிறது. நாங்கள் பத்துப் பேர்மட்டும் சென்றோம். அதன் பிறகு ஐம்பது அடி தூரத்திற்குக் குனிந்து கொண்டே செல்லவேண்டும். அங்கு ஒரு சிறிய மேடைமீது நான்குபேர் அமர்கின்ற அளவிற்குத்தான் இடம் உள்ளது. மேடைக்கு எதிர்ப்புறத்தில் ஸ்ரீ லக்ஷ்மி, ஸ்ரீ ஸரஸ்வதி, ஸ்ரீ பார்வதி ஆகிய தேவிகளின் சிறிய விக்கிரகங்கள் இருக்கின்றன. நாங்கள் ஐந்தைந்து பேர்களாகக் கர்ப்பக்கிரகத்துக்குள் சென்று வழிபட்டோம். குகைக்குள் நுழையும்பொழுதே ஒவ்வொருவர் மனத்திலும் தெய்வீக உணர்வு உண்டாகிறது. விக்கிரகத்துக்கு முன்னால் இருக்கும்போது தேக உணர்வை மறந்து ஆனந்தநிலை ஏற்படுகின்றது. அந்த ஆலயத்தின் ஐதிகத்துக்கேற்பச் சரிகை நாடாக்களை வாங்கிக்கொண்டு சென்றிருந்தோம். அவற்றைத் தேவிக்குச் சாத்தியபின் ஒவ்வொருவரின் தலையிலும் கட்டிவிடுகிறார்கள். அதிக நேரம் உள்ளே தங்க அனுமதிப்பதில்லை. வெளியில் வருவதற்குப் பெரிய குகைப்பாதை ஒன்று அமைத்துள்ளார்கள். அதில் ஓரளவு குனிந்த நிலையில் வெளியே வரலாம்.

விசேஷ நாட்களில் வைஷ்ணவி தேவியைத் தரிசிக்க யாத்ரீகர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கிக் காத்திருக்கவேண்டியுள்ளது. ஏனெனில் ஒரு நாளைக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் யாத்ரீகர்கள் தரிசிக்க வசதி இல்லாததால், கீழே வாங்கிய சீட்டு எண்களின்படி காத்திருக்கவேண்டும். அன்னையின் அருளால் நாங்கள் போன உடனே தரிசனம் செய்யும் பாக்கியம் பெற்றோம்

தரிசனத்திற்குப் பிறகு மிகுந்த மனத் திருப்தியுடன் குதிரைகள் மீது அடிவாரத்தை நோக்கித் திரும்பினோம். தரிசனத்திற்காக மேலே செல்பவர்கள் தரிசனம் செய்து திரும்புபவர்களைச் சந்திக்கும்போது ஜெய் மாதாஜீ

என்று சொல்லி வணங்குகிறார்கள். வழியில் உள்ளசிற்றுண்டிச்சாலையில் சிற்றுண்டி அருந்தினோம். மாலை ஐந்து மணிக்குத்தான் கட்ரா பஸ் நிலையத்தை அடைந்தோம். அப்போதுஜம்முதாவிக்கு ஒரு பஸ் புறப்படத் தயாராக இருந்தது. அதில் ஏறி ஜம்முதாவியை அடைந்தோம். ஜம்முதாவி பஸ்நிலையத்திலிருந்து ஆட்டோ ரிக்ஷாமூலம் காசியை நோக்கி இரயில் புறப்பட ஓரிரு நிமிடங்களே இருந்தபோது போய்ச் சேர்ந்தோம். வண்டியில் இருந்த அனைவரும் எங்களை ஆவலோடு வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் வந்ததும் அவர்கள் உற்சாகத்தோடு வரவேற்றார்கள். வைஷ்ணவிதேவி யாத்திரை ஆரம்பம் முதல் முடிவுவரை அன்னையின் அருளாலே நடைபெற்று வந்ததை எண்ணி எண்ணிப் பூரிப்படைந்தோம். மற்றவர்களுக்கு எங்கள் அனுபவங்களைக் கூறினோம்.

இரயில் புறப்பட்டது. 1—8—80 முழுவதும் இரயிலிலேயே காலம் கழிந்தது. வழக்கப்படி காலை, நண்பகல், மாலை ஆகிய நேரங்களில் நாமஜபம், தியானம் ஆகியவற்றில் ஈடுபட்டோம். அன்று இரவு இரண்டு மணிக்கு வாரணாசி ரயில் நிலையத்தை அடைந்தோம். எங்கள் பெட்டி தனியாகப் பிரிக்கப்பட்டு யாத்ரீகர்களுக்கானபிளாட்பாரத்தில் நிறுத்தப்பட்டது.

வாரணசி

2—8—80 அதிகாலை எழுந்து பஸ் மூலம் ‘தசாஸ்வமேதகாட்’ என்னும் படித்துறையில் புனித கங்கையில் நீராடினோம். மழை பொழிந்ததால் புதுவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. புனித கங்கா ஸ்நானம் செய்ய வேண்டுமென்ற பல அன்பர்கள், தாய்மார்களின் நீண்ட நாள் அவா நிறைவேறியது. ஒரு பாத்திரத்தில் கங்கா ஜலமும், புஷ்பமும், வில்வபத்திரமும் எடுத்துக்கொண்டு ஸ்ரீவிஸ்வநாதர் ஆலயத்திற்குச் சென்றோம். அங்கு ஒவ்வொருவரும் தாங்கள் கொண்டு வந்த கங்கா தீர்த்தத்தைக் கொண்டு விஸ்வநாதரைத் தொட்டு மனங்குளிர அபிஷேகம் செய்து, கண்குளிரத் தரிசனம் செய்தோம். பிறகு அருகில் உள்ள ஸ்ரீஅன்னபூரணி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டோம். இரண்டு பர்லாங் தொலைவில் உள்ள ஸ்ரீ விசாலாக்ஷி ஆலயத்திற்குச் சென்று வழிபட்டோம். அந்த ஆலயம் தமிழ் நாட்டில் உள்ள நகரத்தார் என்னும் செட்டியார்களால் கட்டப்பட்டது. பூஜையும் தமிழ் நாட்டு முறையிலேயே நடை பெறுகிறது.

வாரண், அஸி என்ற இரண்டு நதிகளுக்கு இடையில் அமைந்துள்ளதால் இந்நகரம் வாரணாஸி என்று அழைக்கப்படுகிறது. இது மிகப் புராதனமான புண்ணிய நகரம். இங்கு ஆண்டு முழுவதும் இந்தியாவின் எல்லாப் பகுதியிலிருந்தும் மக்கள் திரளாக வருகிறார்கள். காசியில் உயிர் துறப்பவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கிறது என்ற ஒருநம்பிக்கை ஹிந்துக்களிடையே இருக்கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் காசிக்கு வந்தபோது இங்குஉயிர் துறப்பவர்களுக்கு அன்னை விசாலாக்ஷி அவர்களின் காதில் பிரணவ மந்திரத்தை ஓதிக் கர்மங்களை அகற்றுவதாகவும், விஸ்வநாதர் அவர்களுக்கு முக்தி அளிப்பதாகவும் காட்சி கண்டார்.

புத்தர், சங்கரர் போன்ற எல்லா மதஸ்தாபகர்களும் தங்கள் கொள்கையை முதலில் காசியில்தான் வெளியிட்டார்கள். பழங்காலம் தொட்டுக் கங்கைக்கரையில் பல மகான்கள் தவம் செய்து வந்திருக்கிறார்கள்.

பஸ்மூலம் கேதார் காட், அரிச்சந்திரா காட் முதலிய ஸ்நானக் கட்டங்களையும், காசி பல்கலைக் கழகம், பிர்லா மந்திர், துளசி மானஸ மந்திர், சாரநாத், காசி ராஜா அரண்மனை ஆகியவற்றையும் பார்த்தோம்.

கேதார்காட்டில் ஸ்ரீ குமரகுருபரர் ஸ்தாபித்த குமாரசாமி மடம் என்றழைக்கப்படும் தமிழ் நாட்டு ஸ்தாபனம் உள்ளது. அது தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருப்பனந்தாள் மடத்துக்கு உரியது.

பண்டித மதன் மோகன் மாளவியாவின் பெரு முயற்சியால் உருவாக்கப்பட்ட காசிப் பல்கலைக்கழகம் கல்வித்துறையில் பெயர் பெற்ற ஸ்தாபனம் ஆகும். அதில் பிர்லா மந்திர் என்ற அழகிய மண்டபம் உள்ளது.

துளசி மானஸ மந்திர், துர்க்கா கோயிலின் அருகில் உள்ளது. இங்கேதான் பக்த துளசிதாஸ் வசித்து ராமாயணம் எழுதியிருக்கிறார். 1964ஆம் ஆண்டு அவ்வூர் கனவான் ஒருவர் பல லட்சரூபாய் செலவில் சலவைக் கற்களால் அழகான மண்டபம் கட்டியுள்ளார். இராமா

யணம், பாகவதத்திலுள்ள நிகழ்ச்சிகளை மின் சாரத்தால் இயங்கும் பதுமைகள் மூலம் காட்சிச் சாலையாக வைத்துள்ளார். சாதாரண மக்களுக்கும் இந்நிகழ்ச்சிகளைப் புரியவைக்கும் நிலையில் அது அமைந்துள்ளது. நாள்தோறும் பெரும்பாலான மக்கள் அதைக் கண்டு ரசிக்கின்றனர்.

காசியிலிருந்து பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் சாரநாத் உள்ளது. இங்குதான் புத்தர் தம் முதல் மடத்தை ஸ்தாபிதம் செய்தார். ஞானம் பெற்ற பிறகு பகவான் புத்தர் தம் கொள்கைகளை அங்கிருந்து பரப்பினர். அசோகர் தமது காலத்தில் பெரிய தாமக் ஸ்தூபி, புத்த ஆலயம், மடாலயம் ஆகியவைகளைக் கட்டினர். முகம்மதியர் காலத்தில் இவைகள் அழிக்கப்பட்டன. அந்த இடிபாடுகளே தற்போது காட்சி அளிக்கின்றன.

காசியிலிருந்து பதினறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ராம்நகர் என்னும் இடத்தில் பழைய காசி ராஜாவினுடைய அரண்மனை தற்போது பொருட்காட்சிச் சாலையாக உள்ளது. அங்குப் பழங்காலத்துப் பல்லக்குகள், போர்க்கருவிகள் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு எல்லாரும் கங்கா தீர்த்தம் எடுத்துக்கொண்டோம்.

கயா

3—8—80 காலை ஐந்து மணிக்குக் காசியை விட்டுக் கயாவுக்குப் புறப்பட்டோம். மொகல் சராய் ஜங்ஷனில் மின்சார என்ஜின் மாட்டப்பட்டது. சிறிது தூரத்தில் மிக அகன்ற ஸோன் நதியைக் கடந்தோம். இதன் பாலத்தில் 93 ஸ்பான்கள் உள்ளன. இரண்டுமைல் அகலம் உள்ள இந்த நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. நண்பகல் பன்னிரண்டு மணிக்குக் கயா ஜங்ஷனை அடைந்தோம். பகல் உணவுக்குப் பிறகு பஸ் மூலம் புத்த கயாவிற்குச் சென்றோம்.

புத்தகயாவில் அசோக மன்னனல் கட்டப்பட்ட மகாபோதி ஆலயம் உள்ளது. அந்த ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் பிரசித்தி பெற்ற அரசமரம் உள்ளது.இந்த மரத்தடியில் புத்தர் தம்உடல்பொடிப்பொடியாகச் சிதைந்து விழுந்தாலும் போதம் அடையும் 'முன் எழுந்திருப்பதில்லை என்ற உறுதியுடன் அமர்ந்தார். சிலநாட்களில் ஞானம் அடைந்தார். பக்கத்தில் தாய்லாந்து, திபெத், ஜப்பான், சைன ஆகிய நாட்டார்கள் புத்தருக்குக் கோயில தம்தம் நாட்டின் கட்டடக்கலைப் பிரகாரம் கட்டியுள்ளார்கள். அக்கோயில்களில் அந்தந்த நாட்டுப் புத்த பிட்சுக்களே இருந்து வருகிறார்கள். அவற்றைக் கண்ணுற்றுத் திரும்பினேம்.

கயாவில் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயத்திற்குச் சென்றோம். அவ்வாலயம் பல்குனு நதிக்கரையில் அமைந்துள்ளது. ஆற்றில் ஸ்நானம் செய்தபிறகு கதாதரர் சந்நிதிக்குச் சென்று அங்கு ஐக்கிய வணக்கம் செய்தோம். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தந்தையான க்ஷுதிராம் சட்டர்ஜி அங்கு வந்து வழிபாடு செய்துவிட்டு, இரவில் சயனித்திருக்கையில் கதாதரர் அவர் கனவில் தோன்றி “நான் உன் மகனைப் பிறக்கப் போகிறேன்” என்று சொன்ன ஸ்தலம் இது. அதன் காரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குக் கதாதரர் என்ற பிள்ளைத் திருநாமம் அமைந்தது. உள்ளேசென்றுவிஷ்ணுபாதத்தையும் தரிசனம் செய்தோம். அங்கிருந்து ரயில் நிலையத்திற்குத் திரும்பினேம்.

இரவு 10 மணிக்குப் பாட்னவுக்குப் புறப்பட்டோம்.

4—8—80 விடியற்காலை 3 மணிக்குப் பாட்ன வந்து சேர்ந்தோம். காலைப் பிரார்த்தனை, சிற்றுண்டிக்குப் பிறகு எங்கள் குழுவில் 46 பேர் அங்கிருந்து பஸ்மூலம் பாட்ன விமான நிலையத்திற்குச் சென்றோம். பாட்னவிலிருந்து நேபாளம் செல்ல நாற்பது சீட்டுக்கள் கொண்ட சிறிய விமானம்தான் உள்ளது. விமான நிலையத்தில் வழக்கமான சுங்க இலாகா சோதனைகளை முடித்துக்கொண்டு 12-30 மணிக்கு விமானம் மூலம் காட்மாண்டு நகரத்திற்குப் புறப்பட்டோம். நாற்பது நிமிடப் பயணத்திற்குப் பின் காட்மாண்டு விமான நிலையத்தை அடைந்தோம். டாக்ஸிமூலமாக ஓட்டல் கோசிக்குச் சென்று தங்கினேம். எஞ்சியிருந்த எட்டுப்பேர்களும், சமையல்காரர்களும் அடுத்த விமானத்தில் வந்து சேர்ந்தார்கள். அன்று அங்கேயே தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு சமையல் செய்து சாப்பிட்டோம்.

நேபாளம்

நேபாளம் இமயத்தின் மடியில் வீற்றிருக்கும் ஓர் அழகிய சுதந்திர நாடு. அன்னை சீதா தேவியும், சாக்கிய முனிவரும், கௌதம புத்த ரும் அவதரித்த அருள்மிகு நாடு. கடல் மட்டத்திலிருந்து 4,423 அடி உயரத்தில் பல இயற்கை வளங்களைத் தன்னகத்தேகொண்டு விளங்கும் அழகிய நாடு. மன்னும் இமயமலை எங்கள் மலையே என்ற பாரதியின் வாக்குப் படி உலகத்திலேயே மிக உயர்ந்த மலைச் சிகர மான "சாகர்மாதா" (எவரெஸ்ட்) சிகரத்தின் உரிமையுள்ள நாடு. பழமை மிக்க ஹிந்து பௌத்த கலாசாரங்களின் பெருமையினை உலகிற்கு இன்றும் பறைசாற்றும் நாடு. தன்னை அண்டியவர்களின் பாவங்களைத் தீயி னில் தூசாக்கும் ஜோதிர் லிங்கமான அருள் மிகு பசுபதிநாதர் எழுந்தருளியிருக்கும் நாடு. சாளக்ராமங்களும், நல்ல உருத்திராக்ஷங்களும் கிடைக்கும்நாடு. ஸ்ரீ அன்னை குப்தேசுவரியின் அருளால் ஆற்றல் பெற்று விளங்கும் நாடு. பல நாட்டு மக்களைத் தன்பால் ஈர்க்கும் பலதரப் பட்ட வெப்பதட்பங்களையும் எழில்மிகு இயற் கைக் காட்சிகளையும் கொண்ட நாடு.

இத்தகைய நேபாள நாடு காட்மாண்டு பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. கலாச்சார வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த நாடு மூன்று முக்கிய நகரங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளது. அவை, காட்மாண்டு, படன், பக்தபுர்.

காட்மாண்டுதான் நேபாளத்தின் தலைநகரம். இதற்கு, 'காந்திபுர்' (ஒளிமிக்க நகரம்) என் றும் பெயருண்டு. 'காட்மாண்டு' என்றால் 'காஷ்டமண்டபம்' (மரத்தாலான மண்டபம்) என்பது பொருளாகும். சுமார் 1250 ஆண்டு களுக்கு முன் ஒரே மரத்தின் பலகைகளைக் கொண்டு இங்கு ஒரு மண்டபம் அமைக்கப் பட்டது. ஆகையால் இப்பிரதேசத்தின் பெயர் 'காஷ்டமண்டபம்' என்று வழங்கப்பட்டுப் பின் 'காட்மாண்டு' என்று மருவிவிட்டது.

காட்மாண்டில் மக்கள் முதலில் தரிசிக்க விரும்புவது ஸ்ரீ பசுபதிநாதர் ஆலயத்தைத் தான். ஸ்ரீ சிவனுக்குரிய இந்த ஆலயம் புனிதமான 'வாக்மதி' நதிக்கரையில் அமைந் துள்ளது. இது காட்மாண்டு நகரத்திலிருந்து கிழக்கே மூன்றுமைல் தொலைவில் உள்ளது. இந்த ஆலயம் 'பகோடா' பாணியில் தங்க முலாம் பூசிய கூரையினையும் பல சிற்பவேலைப் பாடுகள் நிறைந்த வெள்ளித்தகடுகள் போர்த்த கதவுகளையும் கொண்டுள்ளது. பலகோடி இந்து மக்களின் உள்ளங்களில் உன்னத இடம் பெற்றுள்ள மிகத் தொன்மை மிக்க இவ்வால யத்தைத் தரிசிக்க ஆண்டுமுழுவதும் யாத்ரீகர் கள் வந்தவண்ணம் இருக்கிறார்கள். சிறப்பா கச் சிவராத்திரியின்பொழுது அடியவர்களின் கூட்டம் இங்கு அதிகமாக இருக்கும். இவ் வாலயத்தினுள் இந்துக்கள் மட்டும் அனுமதிக் கப்பட்டாலும், மற்றச் சமயத்தினர் வாக்மதி நதியின் கிழக்குக் கரையில் இருந்து இதன் அழகைக் கண்டு ஆனந்திக்கலாம்.

5-8-80 காலை எல்லாரும் பசுபதிநாதர் ஆலயத்திற்குச் சென்றோம். ஸ்ரீ பசுபதிநாத ரைக் கண்டு பரமானந்தமடைய அவர் சந்நி திக்கு விரைந்தோம். இதன் கோபுரத்தில் இரண்டடுக்குகள் உள்ளன. சிற்ப வேலைப் பாடுகள் உள்ளன. தரையிலும், சுவர்களிலும் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. வாயிற் படியும் நிலைகளும் வெள்ளித் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளன. தூண்களிலும், மேல் விதானத்திலும் பல அழகிய சிற்பங்கள் காட்சி யளிக்கின்றன. ஸ்ரீ பசுபதிநாதர் எழுந்தருளி யுள்ள கருவறையின் மேற்பகுதி முழுவதும் செப்புத் தகட்டால் போர்த்தப்பட்டு அதன் மீது தங்கமுலாம் பூசி உள்ளனர். இந்தச் சந்நி தியின் நான்கு புறங்களிலும் வாயில்கள் உள் ளன. மேற்கு வாயில் அதிகாலையிலும், மற்ற வாயில்கள் காலை 6-30 மணியளவிலும் திறக் கப்படுகின்றன. யாத்ரீகர்கள் வாயிற்படியின் வெளியே நின்றுதான் தரிசிக்கவேண்டும். அர்ச்சகர்களைத் தவிர வேறு ஒருவரும் சிவலிங் கத்தைத் தொட அனுமதியில்லை (காசியில் அனைவரும் தொடலாம்.) தென்னாட்டில் நிலவும் வழக்கம்போல் இக்கோவிலில் அர்ச்சகர்கள் தான் அபிஷேகம், ஆராதனை அனைத்தும் செய் கின்றனர். ஸ்ரீ பசுபதிநாதரை வலம் வர இய லாது. வடக்கு வாயில் வரை சென்று மீண்டும் திரும்ப வேண்டும். மூலஸ்தானத்தில் நான்கு முகங்கள் கொண்ட சிவலிங்கம் உள்ளது. கர்ப்பக்கிரகம் நான்கு வாயில்களை உடைய தாக இருக்கிறது. (தொடரும்)

குமரகுருபரர்

(வித்துவான். ஆதி. பாலசுந்தரன் M. A.)

சித்திகள் பலவகைப்படும். பலவகைச் சித்திகளில் அஷ்டமாசித்தி கைவரப்பெற்றவர்கள் சிறப்பித்துச் சொல்லப்படுவார்கள். சித்திகளால் தங்களுக்கு மட்டுமே நலம் பெற்றுக் கொள்பவர்களும் உள்ளனர்; தாங்கள் பெற்ற சித்தியின் மூலம் பிறருக்கு நன்மை செய்பவர்களும் உள்ளனர். பிறருக்குக் கெடுதல் விளைவிப்பதற்குத் தாங்கள் அடைந்த சித்தியைப் பயன்படுத்துகின்றவர்களும் உள்ளனர்.

சரவணப் பொய்கையில் ஆறுமுகப் பெருமானுக்குத் திருவமுது சுரந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரும் சிவபெருமானைப்பணிந்து போற்றி அஷ்டமாசித்தியைத் தங்களுக்கு உபதேசித்தருளுமாறு வேண்டிக்கொண்டனர்.

வயலூரில் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவருளைப் பெற்ற பிறகு அருணகிரிநாதர் விறலிமலை (விராலிமலை) நோக்கி வருகின்றார். அடர்ந்த காட்டுப் பெருவழியில் வரும்போது இருண்டுவிட்டது. இருட்டில் வழி தெரியாமல் அருணகிரியார் திகைத்தார். முருகப்பெருமானே வழிகாட்டும் நட்சத்திரம் போன்று வானத்திலிருந்து ஒளிகாட்டி வழி நடத்தி விறலிமலைக்கு அழைத்துச் சென்றார். அத்திருக்கோவிலில், முருகனிடம் அருணகிரிநாதர் அஷ்டமா சித்தி பெற்றார். இது புராணம் கூறும் நிகழ்ச்சி.

அஷ்டமா சித்திகள் யாவை? அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசித்வம், வசித்வம் ஆகிய எட்டும் அஷ்டமா சித்திகள் என்று ஆன்றோரால் சொல்லப்பட்டுள்ளன.

கண்ணுக்குப் புலப்படாத மிகச்சிறிய வடிவையுடைய உயிர்கள்தோறும் மிகமிக நுட்பமான அணு அளவாய்ச் சென்று சேர்ந்திருக்கும் அதிசூக்குமம் அணிமா என்று சொல்லப்படும்.

பிருதிவி தத்துவம் முதல் அதற்கும் மேம்பட்ட தத்துவம் எனக் கூறப்படும் சிவதத்துவம் ஈறாக, முப்பத்தாறு தத்துவங்களிலும் உள்ளேயும், வெளியேயும் நீக்கமற நிறைந்திருக்கும் பெருமை மகிமா எனப்படும்.

மகாமேருவைப் போலப் பாரமான சிவயோகி மிகவும் இலேசான பரமாணுவைப் போல விளங்குவது இலகிமா.

மிகவும் இலகுவாக உள்ள பரமாணுவைப் போல விளங்கும் சிவயோகி மகாமேருவைப் போலப் பாரமாகத் திகழ்வது கரிமா.

பாதாளலோகத்திலிருந்து பிரம்மலோகத்திற்குச் செல்லுவதும், சென்ற பிரம்மலோகத்திலிருந்து பழையபடி பாதாளலோகத்திற்கு வருவதும் பிராப்தி என்று கூறப்படும்.

கூடுவிட்டுக் கூடு பாய்தல், ஆகாயத்தில் சஞ்சரித்தல், விரும்புகின்ற போகங்களை யெல்லாம் இருக்கும் இடத்திற்கே வரவழைத்து அனுபவித்தல் ஆகியவை பிராகாம்யம் எனப்படும்.

சூரியன் தன்னுடைய ஒளியால் தன்னையும், உலகத்தில் உள்ள பிற பொருள்களையும், மூன்று காலங்களையும், ஆகாயத்தில் விளங்குகின்ற அனைத்துப் பொருள்களையும் விளக்கிக் காட்டுதல் பிராகாம்யம் என்று கூறுவார்கள்.

இவ்வாறு இரண்டு விதமாகப் பிராகாம்யத்திற்கு விளக்கம் சொல்லப்படுகிறது.

ருத்ரமூர்த்தியைப் போலப் படைத்தல் காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் தன்னுடைய விருப்பத்தின்படியே நடத்தல், சூரியன், சந்திரன் முதலான நவக்கிரகங்கள் அனைத்தும் தன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி செய்தல் ஆகியவை ஈசித்வம் எனப்படும்.

அரக்கர்கள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள், பூதங்கள், இந்திரன், அஷ்டதிக்குப் பாலகர்கள் இவர்களையெல்லாம் தனது வசமாக்கிக் கொள்ளுதல் வசித்வம் எனப்படும்.

இவ்வாறு அஷ்டமாசித்திக்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

முன்னொரு காலத்தில் சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களையும் ஆண்பெண் பேதம் குறித்துச் சொல்லப்படும் குறிகளையும் கடந்து நின்ற நிஷ்கள சிவமான சிவபெருமான் சித்தராக வந்து திருவிளையாடல்கள் பல செய்தார்.

ஆகர்ஷணம் என்பது தொலேவில் உள்ள பொருள்களே அருகிலே வரச்செய்தல். அதிர்ச்சியம் என்பது கண்களுக்குப் புலப்படுவதைப் புலப்படாமல் செய்தல். அஞ்சனம் என்பது மறைவாகக் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் பொருள்களேக் கண்ணுக்குத் தெரியும்படியாகக் காட்டுதல். வசியம் என்பது பகைவர்களேத் தன் வசப்படுத்துதல். வாதம் என்பது இரும்பு, செம்பு முதலான உலோகங்களேப் பொன்ஆக்குதல். வயஸ்தம்பம் என்பது வயது ஏருமல் ஸ்தம்பிக்கச் செய்து எப்போதும் இளமையாக இருக்குமாறு செய்தல்.

இத்தகைய சித்து வேலேகளே யெல்லாம் சிவபெருமான் செய்தருளியதாகத் திருவிளேயாடற் புராணம் கூறுகிறது.

"கரும்பை முன்பு கல்லானேக்கு இடுஞ்சித்தர்
கையில் செங்கல் பசும்பொன்னது ஆக்கினேம்."

—முன்பு ஒருநாள் கல் ஆனேக்குச் சிவபெருமான் சித்தராக வந்து கரும்பைக் கொடுத்துத் தின்னும்படி செய்தார். அதாவது, அபிஷேக பாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மதுரையை ஆட்சிபுரிந்து வந்தான். அப்போது சிவபெருமான் சித்தமூர்த்தி வடிவம் கொண்டு, கோவிலுக்குள் வடமேற்குத் திசையில் வந்து மௌனமாக அமர்ந்திருந்தார்.

அப்போது அபிஷேக பாண்டியன் ஆலய தரிசனம் செய்யத் திருக்கோவிலுக்கு வந்து கொண்டிருந்தான். மன்னன் வருவதைக் காவலர்கள் சித்தருக்கு உணர்த்தி அங்கிருந்து எழுந்து போகுமாறு கட்டளேயிட்டார்கள். அவர் எழுந்து போகவில்லே. பாண்டியன் சித்தரை வினவினன்.

"வேதம் முதலிய அறுபத்து நான்கு கலேகளிலும் யாம் தேர்ச்சி உடையோம். வேண்டியவர்களுக்கு வேண்டிய பிரகாரம் சித்தி அருளுவோம்." என்ருர் சித்தராக வந்த சிவபெருமான்.

செருக்குடன் இவர் பேசுகின்ருர்; இவர் பேசுவதன் உண்மையைச் சோதித்தறிய வேண்டும் எனப் பாண்டிய மன்னன் எண்ணம்கொண்டான். அப்போது உழவன் ஒருவன் கரும்பைக்கொண்டுவந்தான். அவனிடமிருந்த கரும்பை வாங்கினன் பாண்டிய மன்னன். சித்தரை நோக்கி, "உண்மையிலேயே நீர் வல்லவராக இருந்தால், இக்கோவிலில் இருக்கக்கூடிய இந்தக் கல்யானேக்கு நீர் இந்தக் கரும்பைக் கொடுத்துத் தின்னும்படியாகச் செய்தல்வேண்டும்" என்று கூறினன்.

சித்தர் அருளினல் கல்யானே, பாண்டிய மன்னனுடைய கையிலிருந்த கரும்பைப் பறித்துத் தின்றது. தின்றபிறகு, அபிஷேகபாண்டிய மன்னன் கழுத்தில் அணிந்திருந்த கண்டசரத்தையும் (கழுத்து மாலே) பிடித்து இழுத்தது.

இந்தச் செய்கையின் மூலம் சித்தரின் செயற்கரிய செயலேப் பாண்டிய மன்னன் உணர்ந்து கொண்டான்.

இந்தப் புராண நிகழ்ச்சியைக் குமரகுருபரர் மனதிலே கொண்டு, "கரும்பை முன்பு கல் ஆனேக்கு இடும் சித்தர்" எனக் குறிப்பிடுகின்ருர்.

மதுரையில் இன்றும் கல் ஆனேக்குக் கரும்பு கொடுக்கும் திருவிழா நடைபெற்று வருகிறது.

"சித்தர் கையில் செங்கல் பசும்பொன்னது ஆக்கினேம்" என்று இங்கே, இந்தப் பாடலில் வருகின்ற சித்தர் குறிப்பிடுகின்ருர்.

அதாவது சித்தராக வந்த சிவபெருமான் கையிலே உள்ள செங்கல்லே நல்ல பொன்னுக மாற்றினேம் எனத் தாம் செய்த சித்துவேலேயைக் குறிப்பிடுகின்ருர்.

சிவபெருமான் கையிலே உள்ள செங்கல் என்பது சிவந்த மேருமலே. திரிபுர சம்ஹார காலத்தில் சிவபெருமான் மேருமலேயை வில்லாகக் கையிலே எடுத்து வளேத்தார். மேரு மலேக்குப் பொன்மலே என்னும் பெயரும் உண்டு. பொன்மலேயில் சிவபெருமான் வீற்றிருந்தருள்கின்ருர்.

எனவே சித்தர் சமற்காரமாக, சிவந்த கல்லாகிய மேருமலேயைப் பொன்மலேயாக மாற்றினேம் எனக் கூறுகின்ருர்.

"இருந்த வீடும் வறும்பாழதாம் அவர்க்கு
எருத்துக் கொட்டிலும் பொன் வேய்ந்திடச்
[செய்தேம்"

— சித்தராகிய அவர் இருந்த வீடு வெறும் வீடு. ஒரு பொருளும் இல்லாத வீடு; பாழடைந்த வீடு.

சிவனுக்கு என்று எதுவுமே இல்லே; விருப்பு வெறுப்பு அற்றவர். இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவர். அவருக்கு என்று வசிப்

பதற்கு வீடு இல்லை. வீடும் வேண்டாத விறல் உடையவர். எல்லா இடமும் அவருக்கு இருப்பிடமான வீடுதான். எங்கும் நிறைந்தவர் அவர். சுவாமிக்கு நேராகக்காலை நீட்டித் துயில் கொள்ளாதே; படுக்காதே என்பார்கள். எங்கும் நிறைந்தவராயிற்றே அவர். காலை எப்பக்கம் நீட்டிப்படுப்பது? என அடியார் ஒருவர் வினவுகின்றார். அதுபோன்று, அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் இறைவன். அவர் வீடு பாழ் வீடு. பாழ் என்றால் வெற்றிடம். அந்தகாரப் பெருவெளியெல்லாம், வெட்ட வெளியெல்லாம் அவருடைய இருப்பிடம்தான்.

மகத்தில் மகத்தாய் விளங்குபவன். அணுவுக்குள் அணுவாய்த் திகழ்பவன். அரியபொருளுக்குள்ளும் அரிய பொருளாய் இலங்குபவன். எளிய பொருள்களில் எல்லாம் எளிய பொருளாய்க் காணப்படுவான். ஆன்மா, உணர்வு இவ்விரண்டுக்கும் உரிய விஷயப் பொருளாக உணரப்படுபவன். இவற்றையெல்லாம் கடந்த அப்பாற்பட்ட துரியப் பொருளாய்த் துலங்குபவன்.

எனவே சிவனுக்கு என்று இருப்பிடம் இல்லை.

"எருத்துக் கொட்டிலும் பொன் வேய்ந்திடச் செய்தோம்"

"ஒரு பொருளுமே இல்லாத சிவனுடைய வீட்டு எருத்துக் கொட்டிலுக்குப் பொன் வேய்ந்தோம்."

எருத்துக் கொட்டில்–எருது கட்டுமிடம்; எருது தங்கும் இடம்.

சிவனுடைய கொடி ரிஷபக்கொடி. சைவ சம்பிரதாயப்படி திருமாலையே ரிஷபமாகக் கொண்டு கொடியாக அமைத்துள்ளான் சிவன் எனச் சொல்லுவதுண்டு. அதன் பிரகாரம் எருது, ரிஷபம்–திருமால். திருமால் தங்கியிருக்கும் இடம் ஸ்ரீரங்கம். ஸ்ரீரங்கத்திற்குப் பொன் வேயப்பட்டுள்ளது.

அவ்வாறு ஏற்கனவே ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்குப் பொன்வேய்ந்துள்ள செய்தியைச் சித்தர் தாமே செய்யச் சொன்னது போல் சாமர்த்தியமாகச் சொல்லுகிறார்.

துறவு வாழ்க்கையில் உள்ளவர்கள் சாஸ்திரங்களை முழுமனதோடும் சிரத்தையோடும் கற்கவேண்டும். சாஸ்திர சம்பந்தமான வகுப்பு நடந்தால் தவறாது அவ்வகுப்புக்குச் செல்லவேண்டும். சாஸ்திரங்களைப் பற்றிப் பிறருக்கு எடுத்து விளக்குதற்கு முன்பு தெளிவாக அவற்றைப் புகட்டுகின்றவர் தெரிந்திருக்கவேண்டும். பிறருக்குப் புகட்டப்போகும் விஷயங்களைப் புகட்டுவதற்கு முன்பு புகட்டுகின்றவர் அவற்றைத் தமக்குத்தாமே தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும். தத்துவத்துக்கு ஒத்திருக்கும் கருத்துக்களை மக்களுடைய உள்ளத்தில் நன்கு பதியச் செய்யவேண்டும். மூடக்கொள்கைகளை மக்களிடையே புகுத்தக் கூடாது. சாஸ்திரங்கள் புகட்டும் விஷயங்களில் புகட்டுகின்றவருடைய மனமும், புகட்டப்படுகின்றவருடைய மனமும் ஒன்றுபட்டு விடவேண்டும்.

சுவாமி அற்புதானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் ஒருவராவார். அவர் இறுதிக்காலத்தில் மனதை முற்றும் உள்முகமாகச் செலுத்தியிருந்தார். அவருடைய உள்ளம் உலகப்பொருள்களிலிருந்தும், உடலிலிருந்தும் அறவே விலகி இருந்தது. அவர் உடல் நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. அப்பொழுது அவர் பெரும்பகுதி நேரத்தை ஆழ்ந்த தியானத்தில் கழித்தார். புருவங்களுக்கு மத்தியில் மனதைச் செலுத்தி வெளி உலகத்திலிருந்து மனதை உள்ளே இழுத்துக்கொள்வார். அமைதியுடனும் பிரக்ஞை தெளிவுடனும் அவர் இறுதிக்காலத்தில் இருந்து வந்தார். அவர் மரணம் அடைந்த பிறகும் அவருடைய முகம் சாந்தமும், அன்பும் உடையதாகத் திகழ்ந்தது. துன்பத்தின் அறிகுறி எதுவும் முகத்தில் தென்படவில்லை. அற்புதானந்தர் ஒப்பற்றவராகத் திகழ்ந்தார். அவருக்கு நிகர் அவரே என்று சொல்லும்படியாக வாழ்ந்த அப்பெரியார் உலகத்தில் நலம் ஓங்க ஆசீர்வதிப்பாராக.

—சுவாமி துரியானந்தர்.

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com.)

சுமித்திரை இலக்குவனுக்குக் கூறிய அறிவுரையைக் கேட்ட சீதையின் உள்ளத்தில் சுமித்திரையும், இலக்குவனும் பண்பாட்டின் சிகரங்களாகத் தோன்றினர். அவர்கள் மீது எல்லையில்லாத அன்பு அவள் இதயத்தில் ஊற்றெடுத்துப் பெருகியது. அசோகவனத்திலிருந்தபோது சீதைக்கு ராமனைக் கவர்ந்த இந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. தாயின் சொற்படி பல ஆண்டுகள் தனக்கு இலக்குவன் பணிவிடை செய்ததை நினைத்துப் பார்க்கின்றாள்; அப்படிப்பட்ட தியாக சிகரத்தை எப்படிப்பட்ட வார்த்தைகளால் துன்புறுத்திவிட்டோம் என்று நினைக்கும்போதெல்லாம் அவள் நெஞ்சமே வெடித்துவிடும்போலிருந்தது; இலக்குவனைத் திட்டியதற்குத் தான் அனுபவிக்கும் இந்தச் சிறைவாசத் தண்டனை போதாது; இந்நிலவுலகிலிருந்து நீங்குவதே பொருத்தமாகும் என்று முடிவு செய்கின்றாள் சீதை.

11. பழி நீங்க வழி

இறுதியாக, வேறொரு எண்ணமும் சீதையின் மனத்துள் சுழன்று கொண்டேயிருக்கின்றது. தான் உயிரோடு இருந்து, ராம இலக்குவர் அரக்கரை அழித்துவிட்டுத் தன்னை மீட்கும் சமயத்தில், ராமன் 'நீ பிறர்மனையில் வாழ்ந்தவள்; என்னுடன் இல்லறம் நடத்தத் தகுதியற்றவள்' என்று கூறிவிட்டால் எந்த வகையில் தன்னுடைய கற்பின் திறத்தை நிரூபித்துக் காட்டுவது என்ற கேள்வி பூதாகாரமாக அவள் மனத்தில் தோன்றிக்கொண்டேயிருந்தது. அவளுடைய இந்தக்கேள்வி அர்த்தமற்றதன்று என்பதை யுத்தத்தின் முடிவில் சீதையைச் சிறைமீட்டபோது ராமன் நடந்துகொண்டவிதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு பலவித எண்ணப் போராட்டங்களிடையே சிக்கித் தவித்த சீதை இறுதியில் ஒரு முடிவுக்கு வருகின்றாள். அவளுடைய எண்ணங்களைத் தொகுத்துப் பார்த்தால் பின் வரும் செய்திகள் காணப்படும்.

1. ராமன் சீதையைத் தேடிவருவது சந்தேகமான சாத்தியக் கூறுதான்.

2. அப்படியே வந்து சிறைமீட்டாலும் சீதையை ஏற்றுக்கொள்வானா என்பது சந்தேகத்திற்குரியது.

3 ஒரு வேளை ராமன் ஏற்றுக்கொள்ள முன் வந்தாலும் உலகத்தார் அதனை ஒப்புக்கொள்வார்களா என்பது கேள்வி.

4. சீதைக்கு ஏற்பட்ட பழியைச் சீதை தானே போக்க வழிதேட வேண்டும்.

5. சீதையின் சொல், செயல் இவற்றின் விளைவாகவே அவளுக்கு இந்தப் பழி ஏற்பட்டது.

6. சீதைக்கு மட்டுமல்லாமல், அவளுடைய செயலால் ராமனுக்கும் பழி ஏற்பட்டுவிட்டது.

7. தாயாகப் போற்றி வணங்கிய இலக்குவனைக் கடிந்துகொண்டதற்குப் பெரிய தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும்.

ஆதலால் தனக்கு நல்ல வழி ஒன்றுதான். அதுதான் தன் உயிரை விட்டுவிடுவது. அவ்வாறு இறத்தல் அறத்திற்கு முற்றிலும் பொருத்தமானதுதான். தெய்வச் செயலால், தான் செய்த சிறு புண்ணியத்தால் இந்தக் கொடுமையான அரக்கியரும் நன்றாக உறங்கி விட்டனர். அவர்கள் விழித்திருந்தால் தன்னால் சாவது கூட முடியாத காரியம். எனவே இதுவே நல்ல தருணம். இதனை விட்டால் வேறு சந்தர்ப்பம் வாய்க்காமலே போய்விடலாம். இவ்வாறெல்லாம் எண்ணி முடிவுசெய்து அருகிலிருந்த குருக்கத்திப் புதர்ப்பக்கம் சென்றடைந்தாள் சீதை.

12. தொழுது தோன்றினன்

சீதையின் முணுமுணுப்புக்களைக் கூர்ந்து கவனித்து வந்த அனுமன் அவளுடைய நோக்கத்தை ஊகித்து அறிந்து திடுக்குற்றான். சீதையின் மேனியைத் தொட்டு அவளைத் தடுக்கத் தயங்கினான். அதே சமயம் அவளைத் தடுத்துத் தன்னையும் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் அனுமன் உணர்ந்தான். எனவே மேலும் காலதாமதம் செய்யாமல் அவள் முன்னே தோன்றி, "தேவர்க்கெல்லாம் தேவனாகிய ராம

பிரான் அருள் கூர்ந்து அனுப்பிய தூதன் நான்'' என்று கூப்பியகரங்களுடன் சொல்லிக்கொண்டே வந்து அவள் பாதங்களில் விழ்ந்து வணங்கினன். இந்த அற்புதமான காட்சியைக் கம்பன் கவியில் காணலாம்:

கண்டனன் அனுமனும்; கருத்தும் எண்ணினன்;
கொண்டனன் துணுக்கம்; மெய்தீண்டக் கூசுவான்;
"அண்டர் நாயகன் அருள்தூதன்யான்'' எனத்
தொண்டை வாய் மயிலினைத் தொழுது தோன்றினன்.

— உருக்காட்டுப்படலம் 22

[கருத்தும் எண்ணினன் - சீதையின் நோக்கம் இன்னது என்பதை ஆலோசித்து அறிந்தான். தொண்டை வாய் மயில் - கோவைப் பழம்போன்ற இதழ்களும், மயில் போன்ற சாயலையும் உடைய சீதை.]

இந்தப் பாடலில் சீதையின் கருத்தை அனுமன் ஊகித்து அறிந்ததாகச் சொன்ன கம்பன் சீதை என்ன செய்ய முயன்ருள் என்பதைக் கூறவில்லை. சீதை ஒரு கொடியை எடுத்துக்கொண்டுபோய் மரக்கிளை ஒன்றில் நன்கு இறுக்கமாகக் கட்டிவிட்டு அந்தக்கொடியின் இன்னொரு முனையைத் தன் கழுத்தில் சுற்றிச் சுருக்கிட்டுக்கொள்ளப்போகும் சமயத்தில் தான், ராமநாமத்தைச் சொல்லிக்கொண்டே அவள் பாதங்களில் விழுந்து வணங்கியதாகப் பின்னர் ராமனிடம் அனுமன் கூறுவான். அசோக வனத்தில் என்ன நடந்தது என்பதை அந்தச் சந்தர்ப்பத்தில் கூருமல், பின்னர் கிஷ்கிந்தையில் அனுமன் மூலம் ராமனிடம் விவரிப்பது, கம்பன் கவித்திறனுக்கும், நாடகபாணிக்கும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இதேபோன்று ராமன் அயோத்தியிலிருந்து கானகம் புறப்பட்டபோது அங்குத் திரிஜடன் என்ற அந்தணன் ராமனிடம் தானம் பெற்ற நிகழ்ச்சியை, அயோத்தியா காண்டத்தில் விவரிக்காமல் பின்னர் சுந்தர காண்டத்தில் சீதையின் சிந்தையில் தோன்றிய பழைய நிகழ்ச்சிகளுள் ஒன்ருகக் கம்பன் காட்டுவதை ஏற்கனவே பார்த்திருக்கின்ரேம். வேறு சில இடங்களிலும் இதே உத்தியைக் கம்பன் மேற்கொள்வதைக் காப்பியத்தில் காணலாம்.

ராமபிரானின் அருள்பெற்ற தூதனைத் தன்னைச் சீதையிடம் அறிமுகப் படுத்தத் துவங்கிய அனுமன், அடுத்த மூன்று பாடல்களில் தன்னைப்பற்றியும், ராமனைப்பற்றியும் சில செய்திகளைச் சொல்கின்ருன். அந்தச் சூழ் நிலையில் என்னவிதமாக எதைச் சொன்னல் சீதை தான் நினைத்தகாரியத்தைக் கைவிட்டு விட்டு அனுமனின் விரிவான செய்தியைக் கேட்க முன்வருவாளோ அதனை மட்டுமே அனுமன் கூறுகின்ருன்:

"தேவி! அடியேன் ராமபிரானது ஆணையின் படி இங்கு வந்துசேர்ந்தேன். உன்னைத் தேடி எண்ணற்ற வானரவீரர்கள் உலகெங்கும் சுற்றிக்கொண்டிருக்கிருர்கள். அவர்களுள் நான் செய்த மாதவத்தினல் உன்னுடைய சேவடிகளைத் தரிசிக்கும் பேறு பெற்றேன்! நீ இங்கு இருப்பது ராமனுக்குத் தெரியாது என்பதற்கு இந்த இலங்கைவாழ் அரக்கர்கள், ராமன் கணைகளுக்குத் தப்பி இன்னும் உயிரோடிருக்கின்ருர்களே இதைத் தவிர வேறு என்ன சான்றுவேண்டும்? உன் இருப்பிடம் தெரிந்த நொடிப்பொழுதில் ராமனுடைய சினத் தீ இந்த அரக்கர் உலகத்தினைச் சுட்டுப்பொசுக்கியிருக்குமே? உன் பிரிவால் வாடும் உத்தமனுக்கு உன் இருப்பிடம் தெரியாததால்தான் இத்துணைக்காலம் அரக்கர் பிழைத்திருக்கின்ருர்கள். இதில் உனக்குச் சிறிதேனும் சந்தேகம் வேண்டாம். உன்னைப் பிரிந்த ராமன் எல்லையற்ற இன்னல் கடலுள் மூழ்கியிருக்கிருன் என்பதையும், அவன் அனுப்பிய அருள் தூதன்தான் நான் என்பதையும் ஐயத்திற்கு இடமின்றி நிருபிக்கத் தகுந்த அடையாளம் என்னிடம் இருக்கின்றது. மேலும் உன்னுடைய சந்தேகத்தைப் போக்குவதற்காகவே அந்தப்பெருமான் உனக்குச் சொல்லி அனுப்பிய செய்தியும் என்னிடம் உண்டு. இவற்றையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியென நீயே அறிந்துகொள்ளப் போகின்ருய். எனவே ராமனைப்பற்றி வேறுவிதமான எண்ணங்களை உன் மனதிலிருந்து அகற்றிவிடு; இப்போது நீ செய்ய முனைந்துள்ள செயலையும் விட்டு விட்டு என்னுடைய சொற்களுக்குச் சிறிது செவி சாய்ப்பாயாக!''

சீதையின் மனத்தை வாட்டிய எண்ணங்கள் எவை என்பதை அனுமன் அறிந்திருந்தான். ராமன் உயிருடன் இருக்கின்ருனு? ராமனுக்குத் தன்மேல் உள்ள அன்பு மாருமல் இருக்

கின்றதா? தன்னுடைய விடுதலைக்காக ராமன் ஏன் இதுவரையில் இலங்கைக்கு வராமலிருக்கின்றான்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அனுமனின் முன்னுரையில் விளக்கம் காணப்படுகின்றது: ராமன் உயிருடன்தான் இருக்கிறான்; தனியாக இல்லை; அவன் ஏவல் செய்யப் பல்லாயிரக்கணக்கானவர் காத்திருக்கின்றனர்; உயிரோடிருப்பது மட்டுமல்லாமல் சீதைக்காக ஒவ்வொரு கணமும் உருகிக்கொண்டிருக்கின்றான்; பின் ஏன் அவளை மீட்க வரவில்லை? அவள் இருப்பிடம் தெரியாததால் தான்; தெரிந்திருந்தால் இந்நேரம் இலங்கை மண்ணோடு மண்ணாகியிருக்கும். இவையெல்லாம் வெறும் வார்த்தைகளல்ல. எந்த ராமனுக்காகச் சீதை ஏங்கிக்கொண்டிருக்கின்றாளோ, அந்த ராமன் கொடுத்தனுப்பிய அடையாளமும், சொல்லியனுப்பிய செய்தியும் இந்தச் சொற்களெல்லாம் உண்மையானவை என்பதைச் சீதைக்கு நிரூபிக்கப் போகின்றன.

13. வீர! நீ யாவன்? :

அனுமனின் அழுத்தமான வார்த்தைகள் அசோகவனச் சீதையைத் தன் திட்டத்தைச் செயல்படுத்துவதினின்றும் தடுத்து நிறுத்தின. செம்மையின் ஆணியாகிய அஞ்சனை செல்வனின் சொல்லும், செயலும் சீதையின் சிந்தையைத் திருப்பியதில் விந்தை ஒன்றுமில்லை. தன் முன் நிற்பவனுடைய முக பாவத்தையும், சொல் இனிமையையும், அவன் சொல்லிய விஷயத்தின் தன்மையையும் நன்கு ஆராய்ந்து பார்க்கின்றாள். ஒருவேளை இது வஞ்சனை அரக்கரின் மாயையாக இருக்குமோ? இந்த நினைவு வந்தவுடன் சீதைக்குச் சினம் மேலிடுகின்றது. ஆனால் அதே சமயம் அவன் முகத்தில் தோன்றிய வருத்தத்தைக் கண்டு அவன் அரக்கனாக இருக்க முடியாது என்றும் நினைக்கின்றாள். இவனைப் பார்த்தால் நல் ஒழுக்கத்தில் நிலைநின்று ஐம்பொறிகளையும் வென்ற 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோனாக' இருக்கவேண்டும் என்றே தோன்றுகின்றது. இராவணனுக்கு எதிரிகள் தேவரும் முனிவரும்தானே! எனவே இவர்களில் ஒருவனாகவும் இவன் இருக்கலாம்! மேலும் இவன் பேச்சும் தூய்மையாக இருக்கின்றது. அது அவன் மனமும் நன்றாக இருப்பதைப் புலப்படுத்துகின்றது. இவனிடம் எந்தக் குற்றத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. சீதையின் இந்த எண்ணங்களையெல்லாம் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றான் கவிச்சக்கரவர்த்தி:

> என்று அவன் இறைஞ்ச,
> நோக்கி, இரக்கமும் முனிவும் எய்தி,
> 'நின்றவன் நிருதன் அல்லன்;
> நெறி நின்று, பொறிகள் ஐந்தும்
> வென்றவன்; அல்லனாகில்
> விண்ணவன் ஆகவேண்டும்;
> நன்று உணர்வு உரையன்; தூயன்;
> நவை இலன் போலும்!' என்னா.
>
> — உருக்காட்டுப்படலம் 26

[அவன்-அனுமன்; இறைஞ்ச-வணங்கி நிற்க; இரக்கமும் முனிவும் எய்தி-ராமநாமத்தைச் சொன்னதால் அவன்மேல் கருணையும், ஒரு வேளை அவன் அரக்கனாக இருக்கலாமோ என்ற ஐயத்தால் சினமும் கொண்டு. நிருதன்-அரக்கன்; நின்றவன்-தன் எதிரில் நிற்கும் அனுமன்; நெறிநின்று-நல் ஒழுக்கத்தில் மேம்பட்டு நின்று: நவை இலன்-குற்றமில்லாத செயல் உடையவன். நன்று உணர்வு உரையன்-தூய்மையான எண்ணங்களைப் பிரதிபலிக்கும் பேச்சுடையவன். தூயன்-உள்ளத்தில் தூய்மையுடையவன்: நான்காவது வரியில் அனுமனின் சிந்தை, சொல், செயல் இவை தூய்மையானவை என்ற கருத்து அடங்கியிருப்பதைக் காணலாம்.]

அனுமனைப் பற்றிய சீதையின் சிந்தனை அலைகள் இன்னும் ஓய்ந்துவிடவில்லை. அடுத்த பாடல் அவளுடைய மனப்போராட்டத்தை அழகாகக் கூறுகின்றது.

"என் முன் நிற்கும் இவன் அரக்கனாகவே இருக்கட்டும்! அல்லது ஓர் தேவனாகவே இருக்கட்டும்! அல்லது நான் பார்க்கின்ற உருவத்தையே உண்மையாய்க் கொண்ட குரங்கினத் தலைவனாகவே இருக்கட்டும்! அரக்கனாகவே இருந்து என்னை மேலும் கொடுமைப் படுத்தினாலும் சரி! அல்லது இவன் இப்போது சொன்னது போன்று குரங்காகவே இருந்து என் துயர் கண்டு மனம் வருந்தி என்மீது இரக்கம் காட்டினாலும் சரி! நான் உயிர்விடும் சமயம் இங்கு வந்து என்னுடைய தெய்வத்தின் திருப்பெயரைச் சொல்லி என்

உள்ளத்தை உருகும்படி செய்து, போகப் போன என் உயிரைத் தடுத்து நிறுத்தினனே! இவன் இன்று எனக்குச் செய்த இந்த உதவிக்கு என்ன கைம்மாறு இவனுக்குச் செய்யப்போகிறேன்? இதைவிடப் பெரிய உதவி இனி எனக்கு யார் செய்யப்போகின்றார்கள்?" சீதையின் இந்த எண்ணங்களைக் காட்டும் பாடலைப் பார்ப்போம்:

"அரக்கனே ஆக! வேறு ஓர் அமரனே ஆக! அன்றிக்
குரக்கினத் தலைவனேதான் ஆகுக! கொடுமை ஆக!
இரக்கமே ஆக! வந்து இங்கு எம்பிரான் நாமம்
[சொல்லி
உருக்கினன் உணர்வை; தந்தான் உயிர்; இதின்
[உதவி உண்டோ?"

— உருக்காட்டுப்படலம் 27.

சீதையின் இந்த எண்ணங்களையெல்லாம் அனுமன் புரிந்துகொண்டான் என்பதை,அவன் பின்னர் ராமனிடம் தன்னைப்பற்றிச் சீதையின் நினைவுகளைத் தெரிவிப்பதிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

சீதைக்கு அப்போதிருந்த சூழ்நிலையில் இரண்டு வாய்ப்புக்களே இருந்தன. ஒன்று அவள் எதிரில் நிற்பவன் குரங்கு வேடம் தரித்த அரக்கன்; அல்லது அவன் தன்னைப்பற்றிக் கூறியதற்கேற்பக் குரங்கு இனத்தலைவன்; அவன் அரக்கனாக இருந்தால் அது மேலும் தன்னைக் கொடுமைக்கு உள்ளாக்கும்; குரங்காகவே இருந்தால் ராமனுடைய செய்தியைத் தாங்கி வந்திருப்பவனாவான்; எனவே தன்மீது இரக்கம் காட்டுவான். சீதையின் பிரச்னை இப்போது தன் எதிரில் நிற்பவன் அரக்கனா அல்லது வானரமா என்று தீர்மானிப்பதுதான். உறுதியாகத் தெரிந்துகொண்டால்தான் மேற்கொண்டு அவனிடம் பேசுவதுபற்றி யோசிக்க முடியும். எவ்வாறு கண்டுபிடிப்பது? சீதை ஓர் அருமையான வழியைப் பின்பற்றுகின்றாள். தன் உயிர் பிரியப்போகும் நேரத்தில் தன் தெய்வத்தின் பெயரைக் கேட்டதால் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணத்தைச் சீதை கைவிட்டுவிட்டாள். எனவே ராமநாமத்தைச் சொன்னதன்மூலம் தன் உயிரைக் காப்பாற்றியவன் அவன். அவன் யாராக இருந்தாலும் அவன் சொன்ன ராமநாமம், தன் உள்ளத்தை உருக்கி உயிரைக் காத்தது என்பது உண்மை. ஆதலால் வந்தவன் யாராக இருந்தாலும் அவன் செய்த உதவி மிகப்பெரியது. எதிரே நிற்பவன் அரக்கனா, குரங்கா என்பதை முடிவு செய்யும் முயற்சியில் இதனை ஒரு முக்கிய விஷயமாகச் சீதை எடுத்துக்கொள்கின்றாள். ராமநாமத்தைச் சொல்லித் தன் உயிர் போகாமல் காப்பாற்றியதால்மட்டும் வந்திருப்பவன் ராமதூதன்தான் என்று எப்படி உறுதியாகச் சொல்லமுடியும்? ஏன் அரக்கனே வந்து சீதையின் முயற்சியைச் சிதறடிக்க இந்தத் தந்திரத்தைப் பயன்படுத்தியிருக்கலாமே! எனவே ராமநாமம் மட்டும் வந்தவனை இனம் கண்டுகொள்ளப் பயன்படாது. அப்படியானால் சீதை எவ்வாறு இந்த இக்கட்டான நிலையைச் சமாளித்தாள் என்பதை அவள் வாக்குமூலமாகவே கேட்போம். ராமநாமத்தைச் சொன்னதைத் தவிர வேறு எதனையாவது வைத்து வந்திருப்பவனை அடையாளம் கண்டுகொள்ள முடியுமா? இதோ சீதையின் உள்ளம் சிந்திப்பதைப் பாருங்கள்:

"எதிரே நிற்பவன் யாராக இருந்தாலும் இவனைப் பார்த்ததும் என் உள்ளம் உருகுகின்றது! இவன் கூறிய வார்த்தைகள் என் உள்ளத்தை நெகிழச் செய்கின்றன! நெஞ்சத்தில் வஞ்சமுடைய அரக்கருடைய வார்த்தைகள் போன்று அவை இல்லை! இவன் வாயிலிருந்து வெளிவந்த சொற்கள் இவன் உள்ளத்திலிருந்தே வந்தவையாக இருக்கின்றன! இவன் மனமும், வாக்கும் தூய்மையானவை என்பதற்கு இதுவே சான்றாகின்றது. உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் வேறொன்றும் கூறும் கயவனாக இவன் இல்லை. என் நிலைகண்ட இவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி நிலத்தை நனைக்கின்றது. பெருகிவரும் கண்ணீரோடும், பொங்கி வரும் துயரத்தோடும் இவன் பேசும் மொழிகள் என் மனத்தைத் தொடுகின்றன. மனம், வாக்கு, காயம் இவற்றில் முரணுடையவனல்லன் இவன். எனவே இவனோடு பேசலாம்; இவன் யாரென்பதை அறியலாம்."

அனுமனைக் கூர்ந்து பார்க்கின்றாள் சீதை. சீதைக்காக வருந்திக் கண்ணீர் பெருக்கும் கண்கள் மனத்திலிருந்து எழும் சொற்களையே பேசும் வாய்; சீதையின் நிலை கண்டு உருகும் உள்ளம்—இந்தக் காட்சி சீதை

யின் மனத்தில் அனுமன்மேல் இரக்க உணர்வைத் தோற்றுவிக்கின்றது. தன்னுடைய துயரத்தில் பங்கு கொள்ள வந்திருக்கும் ஒருவனைப் பார்த்தால் அவன்மீது கருணைகொள்வது ஒருவர்க்கு இயல்புதானே? எனவே, தன்முன் நின்றவன் அரக்கனு அல்லது குரங்கினத் தலைவனு என்பதை ஆராய்ந்து, இறுதியில் அவன் அரக்கனுக இருக்க முடியாது என்ற முடிவிற்குச் சீதை வருவதற்கான காரணங்கள்:

1. ராமநாமத்தைச் சொல்லித் தன் உணர்வை உருக்கி, உயிரைக் காத்தவன்.

2. மனத்தில் ஒன்றும், வாக்கில் வேறொன்றும் பேசும் வஞ்சகம் இல்லாதவன்.

3. அவனுடைய சொற்களைத் தொடர்ந்து அவன் சிதைக்காக கண்ணீர் சிந்தினுன்.

4. அவனைப் பார்த்ததும், சீதையின் உள்ளத்தில் அவன்மேல் ஏற்பட்ட இரக்க உணர்வு.

இந்த முடிவுக்கு வந்தவுடன் சீதை அனுமனிடம் கேட்கிருள். ''எமனும் உட்புக நடுங்கும் இலங்கையின் காவலைக் கடந்து என்னைப் பார்க்க வந்த வீரனே! நீ யார்?''

அனுமனை 'வீரனே' என்றுதான் முதன் முதலில் சீதை அழைக்கின்ருள். தூய்மையான, தன்னலமற்ற வீரத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவன் தானே அனுமன். சீதாபிராட்டியினுல் ''வீரனே!'' என்று அழைக்கப்பட்ட அனுமனைவிடப் பேறு பெற்றவர் உலகத்தில் வேறு யார் இருக்கப் போகிருர்கள்? சீதையின் இந்தச் சொல்லோவியத்தைக் கம்பன் வரைந்து காட்டுவதைப் பார்ப்போம்.

என நினைத்து, எய்த நோக்கி, இரங்கும் என்
உள்ளம்; கள்ள
மனவகத்து உடையராயவஞ்சகர் மாற்றம் அல்லன்;
நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப்
புலம்பா நின்ருன்;
வினவுதற்கு உரியன் என்னு,''வீர!நீ யாவன்?''என்ருள்.

— உருக்காட்டுப் படலம் 28

[மாற்றம்-சொல்]

இந்தப் பகுதியை முடிக்கும் முன்பு இரண்டு கருத்துக்களை நம் நினைவிற்குக் கொணர்வோம்.

1. அனுமன் அரக்கனுக இருக்கலாம் என்று சீதை சந்தேகப்பட்டது நியாயமானதே. ஆரண்யத்தில் துறவி வேடம் பூண்டிருந்த இராவணனை உண்மையான சந்நியாசியென்றே ஏமாந்து போனவள் சீதை. வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பிய சீதைக்கு எவ்வளவு கசப்பான அனுபவங்கள் காத்திருந்தன! எனவே அசோகவனத்தில்அனுமனைப் பார்த்த உடனே நம்பி, பேசி விடாமல் அவனுடைய சிந்தை, சொல், செயல் இவற்றை நன்கு ஆராய்ந்த பின்னரே அவனுடன் சீதை பேச ஆரம்பித்தது பொருத்தமானதே.

2. அனுமனைப் பார்த்தவுடன் ராம இலக்குவர்க்கு ஏற்பட்ட உணர்வுகளைக் கிஷ்கிந்தா காண்டத்தில் காணலாம். [ஒப்பு நோக்குக: அனுமப்படலம் 19-22] அதனையும், இங்குச் சுந்தரகாண்டத்தில் அனுமனைக்கண்ட சீதையின் அனுபவத்தையும் ஒப்பிட்டுமகிழலாம்.

இனி, சீதையின் கேள்விக்கு அனுமன் என்ன பதில் சொன்னுன் என்பதை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

செய்திகள்

நிகழ்பவை

இராமநாதபுரம் ஜில்லா, விருதுநகர் V. M. ஞானசபாபதி நாடார்—சரஸ்வதி அம்மாள் அரங்கம் (அனுமான் காபி கல்யாண மண்டபம்) என்னும் இடத்தில் 19-7.81 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிமுதல் 9-30 மணிவரை 'ஓம் நமச்சிவாய' என்னும் நாமஜப லட்சார்ச்சனை நிகழும். அதைத்தொடர்ந்து காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை ஒருநாள் அந்தர்யோகம் அதே இடத்தில் நிகழும். மதிய உணவு வேண்டுவோர் நேரில் ரு 2-00 செலுத்திச் சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாண்டு திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் ஐக்கிய வணக்கத்துக்காக ஜூலை மாதம் 17, 18 தேதிகளில் திருநெல்வேலி ஜில்லா, குற்ருலம் செல்வார்கள்.

ஸ்ரீ விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் ஆடி விடுமுறைக்காக ஆகஸ்டு மாதம் 10ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்குமேல் அவரவர் ஊர்களுக்குப் புறப்படுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை	ரூ. 16-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,,	... 6-00
இராமாயணம்	,,	... 5-00
தினசரி தியானம்	,,	... 4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,,	... 3-00
கர்மயோக விளக்கம்		... 10-00
ஞானயோக விளக்கம்		... 8-00
ராஜயோக விளக்கம்		... 8-00
பக்தியோக விளக்கம்		... 6-00
பரமஹம்சரின் பெருமை		... 6-00
விவேகானந்த விவரணம்		... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		... 4-00
விவேகானந்த உபநிஷதம்		... 4-00
கடவுளின் வடிவங்கள்		... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		... 3-50
அனுஷ்டான வேதாந்தம்		... 3-00
எதிர்கால இந்தியா		... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்		... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை		... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்		... 2-00
கண்ணன் என்னும் கடவுள்		... 2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம்	ஷை	... 3-00
சின்மயானந்த குரு	ஷை	... 3-00
ஆனந்தமானபரம்	ஷை	... 3-00
சுகவாரி	ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	... 3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	... 2-50
பரசிவ வணக்கம்	ஷை	... 1-00
பஜனைப் பாடல்கள்		... 2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி	ஷை	... 1-50
பரமஹம்சர் பாமாலை		... 1-50
அமரநாத யாத்திரை		... 1-25
சந்நியாசி		... 1-25
இறைவணக்கம்		... 1-00
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
சகோதரி நிவேதிதை		... 1-00
காயத்ரீ		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	... 1-00
துவப்புதல்வர்கள்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்)	... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00

பிரஹ்லாதன்	(நாடகம்)	ரூ. 1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்		... 1-00
பாண்டவ கௌரவபெருமை	(நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்		... 0-80
நோய்க்கு இடம் கொடேல்		... 0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்)	... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		... 0-75
*ஆத்ம சக்தி		... 0-75
*ஆலய வழிபாடு		... 0-75
*சக்தி தத்துவம்		... 0-70
*சிவதத்துவம்		... 0-70
*மனிதனது நிஜசொரூபம்		... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்		... 0-60
*சூரிய நாராயணன்		... 0-50
*முருகக் கடவுள்		... 0-50
*விஷ்ணு தத்துவம்		... 0-50
தெய்வீக மகிமைகள்		... 0-50
சைவன் யார்?		... 0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி		... 0-40
வர்ணாச்ரம தர்மம்		... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
The Bhagavad Gita (10th Imp.)		...20-00
Sri Lalitambika Sahasranama Stotram		...10-00
The Indian National Education		... 8-00
Ramakrishna Lives Vedanta		... 8-00
Facets of Brahman or The Hindu Gods		... 5-00
Daily Divine Digest (DELUXE)		... 4-50
Daily Divine Digest (Ordinary)		... 2-50
Mahabharata (with plastic cover)		... 6-50
Ramayana	(do)	... 4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)		... 4-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
The Bahagavad Gita (Small Size)		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
Bheeshma The Superman		... 3-50
Hinduism Hosts Christianity		... 3-00
Holy Bible—In the Light of Vedanta		... 1-50
Reminiscences of Master Mahashaya		... 1-50
*Introducing the Gita		... 1-50
The Garland of Paraaparam		... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami		... 1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

தாயுமானவர் இயற்றிய பாடல்கள்

உபநிஷதங்கள் கூறுகின்ற பரதத்துவங்கள் யாவற்றையும் தாயுமானவர் பாடல்களில் காணலாம். இவருடைய பாடல்கள் யாவும் மறைந்துபட்டுப் போகாது தமிழ் மக்கள் கைவசம் இருப்பது தமிழ் நாட்டின் தவச் செல்வமாகும். ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு இவருடைய நூல்கள் ஒப்பற்ற அருள் விருந்தாக அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆத்ம சாதகரும் இவருடைய பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களை அறியும் வண்ணம் இதுவரை சுமார் 8 தலைப்புக்கள் கொண்ட பாடல்களுக்கு ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் விரிவான விளக்கம் தந்துள்ளார்கள். ஒவ்வொன்றும் தனித்தனி நூலாக யாவரும் படித்துப் பயன் பெறும் வகையில் வெளிவந்துள்ளது.

அவைகளாவன:—

1. **பரசிவ வணக்கம்**	கிரௌன்சைஸ் பக்கம் 44	விலை	ரூ. 1-00
2. **பரிபூரணானந்தம்**	கிரௌன்சைஸ் பக்கம் 160		ரூ. 3-00
3. **சின்மயானந்த குரு**	கிரௌன்சைஸ் பக்கம் 166		ரூ. 3-00
4. **மௌனகுரு வணக்கம்**	கிரௌன்சைஸ் பக்கம் 154		ரூ. 3-00
5. **ஆனந்தமானபரம்**	கிரௌன்சைஸ் பக்கம் 148		ரூ. 3-00
6. **சுகவாரி**	கிரௌன்சைஸ் பக்கம் 148		ரூ. 3-00
7. **கருணாகரக்கடவுள்**	கிரௌன்சைஸ் பக்கம் 154		ரூ. 3-50
8. **எங்கும் நிறைகின்றபொருள்**	,, பக்கம் 108		ரூ. 2-50

மேற்கண்ட எட்டு நூல்களையும் ஒரே சமயத்தில் தபால்மூலம் தருவித்துக் கொண்டால் தபாற்கட்டணத்திற்காக ரூ. 3-50 மட்டும் சேர்த்து அனுப்பினால் போதுமானது.

ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் பாடல்கள் மூலம்மட்டும் தனிப்புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதில் பாடல்கள் பதம்பதமாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன் அரும்பதவுரைகள் பாடல்களுக்கு அடியிலேயே தரப்பட்டிருக்கின்றன. இது வாசிப்பவர்களுக்கு மிக எளிதாக இருக்கும்.

தற்போது இதன் இரண்டாம் பதிப்பு விற்பனையில் உள்ளது.

விலை ரூ. 6-00 தபாற் கட்டணம் ரூ. 1-40

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை—639 115 திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.